# உதயன்

சுடர் 31 | கதிர் 027 | வள்ளுவர் ஆண்டு 2046 | மார்கழி 07, புதன்கிழமை 23.12.2015

26°c - 29°c
தெளிவான வானிலை

23 DEC 2015

### வெடி விபத்தில் இளைஞர் காயம்

கிளிநொச்சி, டிசெ. 23
வட்டக்கச்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வெடி விபத்தில் இளைஞர் ஒருவர் ஒரு கை சிதைவடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தி பக். 28

# பொறுப்புக்கூறலுக்கு இலங்கை இராணுவம் ஒத்துழைக்கவேண்டும்

## காணிகள் விடுவிப்பும் அவசியம் வலியுறுத்துகின்றது அமெரிக்கா

கொழும்பு, டிசெம்பர் 23
இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறும் நம்பகமான நீதிப் பொறிமுறைக்குப் படையினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.
அத்துடன், படைத் தேவைகளுக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை மீள ஒப்படைக்கவேண்டுமெனவும் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் இலங்கைப் பாதுகாப்பு உயர்மட்டங்களிடம் கேட்டுள்ளது. பக். 26



### அரசமைப்புப் பேரவை குறித்து 9 ஆம் திகதி ஜனாதிபதி உரை

கொழும்பு, டிசெ.23
அரசமைப்புப் பேரவை குறித்து ஜனாதிபதி, எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றவுள்ளார்.
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 3ஆவது அரசமைப்பைத் தயாரிக்கும் நோக்குடன், நாடாளுமன்றம் ஒரு தேசிய அரசமைப்பை உருவாக்கும் சபையாக மாற்றப்படவுள்ளமை குறித்தே இந்த உரை அமையவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.
இதன்படி எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதி காலை ஜனாதிபதி இந்த உரையை ஆற்றுவார் என ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார்.
கடந்த ஜனவரி 8ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் வென்று ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவி பக். 28

### ரயில் பாதையில் உறங்கியவர் நசியுண்டு சாவு

வவுனியா, டிசெ. 23
வவுனியா-நேரியகுளம் பகுதியில் உள்ள ரயில் பாதையில் உறங்கிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ரயிலில் நசியுண்டு சாவடைந்துள்ளார். பக். 26

முச்சந்தி முரளி



நல்லாத்தான் இருக்குது இந்தக் கூட்டு கேட்டியளே....

### அரசியல் பழிவாங்கலுக்குள்ளானோர் நீதியைப் பெற அமைச்சரவைப் பத்திரம்

கொழும்பு, டிசெ. 23
கடந்த 20 ஆண்டுகளாக அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஸிம் தெரிவித்தார்.
இந்த நீதியைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையானது மூன்று சுற்றுக்களாக இடம்பெறும் என்றும், இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கையில் அரச நிர்வாகத்துறை அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஈடுபட்டு வருகின்றார் என்றும் தெரிவித்தார்.
கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க் பக். 26

## மக்கள் பேரவையில் கருணா அம்மானும்



யாழ்ப்பாணம், டிசெ. 23
தமிழ் மக்கள் பேரவை கிழக்கு மாகாணத்திற்கும் விரிவாக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கருணா பக். 26

## உள்ளூராட்சித் தேர்தலுக்காக கூட்டணி அமைத்தல் தீவிரம்

### திஸ்ஸவும், டியூவும் மகிந்த அணியுடன் கைகோர்ப்பு சிறுபான்மையினக் கட்சிகள் ஐ.தே.கவின் பக்கம்

கொழும்பு, டிசெ. 23
சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மகிந்த ஆதரவு அணியுடன் இணைந்து களமிறங்குவதற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி ஆகியன தீர்மானித்துள்ளன. அத்துடன், கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புக்களும் மகிந்த அணியுடன் கைகோர்க்கவுள்ளன.
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு இன்னும் காலமிருக்கின்ற நிலையில், தற்போதிருந்தே அரசியல் கட்சிகள் அதை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குரிய தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. வேட்பாளர் தேர்வு, கூட்டணி அமைத்தல் உட்பட பூர்வாங்கப் பணிகள் தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன.
அந்தவகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பக். 26

# வடக்கு முதல்வர் - அமைச்சர்கள் இடையே கருத்து முரண்பாடுகள்

## தமிழ் மக்கள் பேரவையில் விக்கி இணைத் தலைமையை ஏற்றதால்

யாழ்ப்பாணம், டிசெ. 23
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் பேரவையில் இணைத் தலைமைப் பதவியை ஏற்றுள்ளமை தொடர்பில், வடக்கு மாகாண அமைச்சர்களுக்கும்-முதலமைச்சருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் உருவாகியுள்ளன என அறியமுடிகின்றது.
யாழ்.மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை மூடிய அறையினுள் வைத்து இரகசியமாக உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைமைப் பொறுப்பை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஏற்றுக்கொண்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களும், கூட்டமைப்பு மீது அதிருப்தியடைந்தவர்களுமே குறித்த அமைப்பில் ஒன்றிணைந்துள்ளனர் பக். 26

## புலம்பெயர்ந்த புலிகளின் தேவையை நிறைவேற்றுவதிலேயே அரசு கவனம்

### குற்றம் சாட்டுகிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, டிசெ. 23
வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி இராணுவத்தை வெளியேற்றும் நடவடிக்கையிலேயே தற்போதைய அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது என்று குற்றம் சுமத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, புலம்பெயர் புலிகளின் தேவையை நிறைவேற்றுவதிலேயே அரசு இன்று கவனம் செலுத்துகின்றது என்று தெரிவித்துள்ளார்.



கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்த அரசு எமது நாட்டு மக்களைப்பற்றிச் சிந்திக்காது புலம்பெயர் பக். 26

### வடக்கு பட்ஜெட் ஆளுநரின் அங்கீகாரத்துக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 23
வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பக். 28

## 2 நாள்களுக்கு மேல் காய்ச்சலா? ரத்தப் பரிசோதனை செய்யுங்கள்

### நோய்த் தடுப்புப் பிரிவினர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 23
காய்ச்சல் ஏற்பட்டால் இரண்டு நாள்களுக்கு மட்டும் பனடோல் மாத்திரை உட்கொள்ளுங்கள். மூன்றாவது நாளாகியும் காய்ச்சல் நிற்கவில்லை என்றால் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல் பக். 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 மாதங்களில் 258 பிரேரணைகள்

## *வட மாகாண சபை நிறைவேற்றியது*

யாழ்ப்பாணம்,டிசெ.23

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு 26 மாதங்களில் 258 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இவற்றில் சில பிரேரணைகள், எமது மக்களின் ஆதங்கங்களை – உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தவை என்றும், சில பிரேரணைகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பதில்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இடம்பெற்றது. அன்றிலிருந்து இதுவரையில் 258 பிரேரணைகள் சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. நிறைவேற்றப்படும் பிரேரணைகள் உடனடியாகவே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் - அமைச்சுக்கள் - நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் பிரேரணைகளுக்கு எடுக்கப்படும் தொடர் நடவடிக்கை தொடர்பில் பதில்கள் பெரும்பாலும் வழங்கப்படுகின்றன. சில பிரேரணைகள் எமது மக்களின் உணர்வுகளை வெளிப்படும் விதமான பிரேரணைகள். அந்தப் பிரேரணைகள் அனுப்பி வைக்கப்படுவதில்லை - என்றார். (ற-ஜ-5)

# எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வடக்குக்கு அம்புலன்ஸ் சேவை

## *வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.23

ஜனவரி மாதத்திலிருந்து வடக்கு மாகாணத்துக்கான அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. "அனைவருக்குமான நோயாளர் காவு வண்டிச் (அம்புலன்ஸ்) சேவை" என்ற நோக்கோடு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து இந்தச் சேவைக்கான நெறிப்படுத்தல் இடம்பெறும். இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான நான்கு இலக்க தொலைபேசி எண் விரைவில் அறிவிக்கப்படும். - இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திற்குரிய சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமது சபை பொறுப்பேற்ற பின்னர் புதிதாக 5 ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக "வைகறை" முள் ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட வர்கள் பராமரிப்பு நிலையம் மற்றும் வாய்ப் புற்றுநோய் பராமரிப்புப் பிரிவு ஆகியவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய குருதி வழங்கல் பிரிவின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் பிராந்திய குருதி வழங்கல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. முல்லைத்தீவு வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு வைத்தியசாலை, மல்லாவி வைத்திய சாலை மற்றும் முருங்கன் வைத்தியசாலை ஆகியவற்றில் புதிய சத்திரசிகிச்சைப் பிரிவுகள் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் விடுதி ஆகியவை ஏற்கனவே பொது மக்களின் பயன்பாட்டுக்கு விடப்பட்டுள்ளது. வவுனியா பொது வைத்தியசாலையில் புதிய நரம்பியல் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மற்றும் அனலைதீவு மக்களின் சுகாதார சேவையை மேம்படுத்தும் நோக்கத்துடன் நவீன வசதிகளைக் கொண்ட அதிவேக நோயாளர் காவு படகு 38 மில்லியன் ரூபா செலவில் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலையில் இந்திய அரசின் அனுசரணையில் 187 மில்லியன் ரூபா செலவில் புதிதாக 200 படுக்கை வசதிகளைக் கொண்ட விடுதி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், 100 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை புற்றுநோய் பிரிவு பல இடர்பாடுகளுக்கு மத்தியில் சிறந்த சேவைளை எமது மக்களுக்கு வழங்கி வருகிறது. 2016 ஆம் ஆண்டுக்குரிய மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், பெருந்தொகையான நிதி மற்றும் மனித வளப் பங்கீடு அங்கு தேவைப்படுகிறது.

பல ஆயிரக் கணக்கான மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட எமது மாகாணத்திலே, அவர்களுக்கான புனர்வாழ்வு வைத்தியசாலையொன்று மிகவும் இன்றியமையாதது. எனவே மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் புனர்வாழ்வு மருத்துவப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, மத்திய சுகாதார அமைச்சிடம் அனுமதியும் பெறப்பட்டு, நிதி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (ற-ஜ-5)

# உரிய வசதி இன்றி இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள்

## *நிவர்த்தி செய்ய ஒருவார அவகாசம்*

யாழ்ப்பாணம்,டிசெ.23

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் குறைபாடுகளுடன் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனங்கள் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக ஒரு வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் குறித்து யாழ்.அரச அதிபர் தெரிவித்திருந்த அறிவுறுத்தலுக்கு அமைய, நேற்று முன்தினம் திங்கட்கிழமை சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது வலி.தென்மேற்கு பிரதேசத்தில் இயங்கி வரும் 20க்கும் மேற்பட்ட தனியார் கல்வி நிலையங்களைப் பார்வையிட்ட போது, பல கல்வி நிறுவனங்கள் சுகாதார விதி முறைகளுக்கு முரணாக இருக்கை வசதி, காற்றோட்ட வசதி, மலசலகூட வசதி உட்பட பல குறைபாடுகளுடனும் நுளம்புகள் பெருகும் சூழலுடனும் இயங்கி வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதையடுத்து குறைபாடுகளுடன் இயங்கி வரும் கல்வி நிலையங்களுக்கு அவற்றை நிவர்த்தி செய்ய ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டதுடன், இந்த மாதம் 29 ஆம் திகதி சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அடிப்படை சுகாதாரம் பேணுதல் சம்பந்தமாக நடைபெறவுள்ள கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அதன் நிர்வாகிகளுக்கு அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளிக்கிழமைகளில் மாலையிலும் ஞாயிற்றுக் கிழமை காலையிலும் கல்வி நிலையங்கள் மூடப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-115)

# வடக்கு கல்வி நியதிச் சட்டத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.23

வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட கல்வி நியதிச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால், வடக்கு மாகாண கல்வி நியதிச் சட்டம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற அமர்வில் சமர்பிக்கப்பட்டது. மே மாதம் 19 ஆம் திகதி ஆளுநரின் அனுமதிக்காக நியதிச் சட்டம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆளுநர் செயலகத்தால் குறித்த நியதிச் சட்டம், சட்டவரையறைக்குட்பட்டதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

7 மாதகாலத்தின் பின்னர் தற்போது குறித்த நியதிச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த சுகாதார அமைச்சின் நியதிச் சட்டமும், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கடந்த வாரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-5)

# தென்மராட்சியில் டெங்கு தொற்று அதிகரிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. கடந்த சனிக்கிழமை தொடக்கம் நேற்று வரை 30 இற்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுகாதாரத் திணைக்கள அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வரை டெங்குத் தொற்றால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 36 ஆகக் காணப்பட்டு, சனிக்கிழமை தொடக்கம் நேற்று காலை வரையான நான்கு தினங்களில் மட்டும் 32 பேர் டெங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளனர். டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியவர்களின் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

# இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 23

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினர் குறித்த மீனவர்களைக் கைது செய்துள்ளனர். நேற்று முற்பகல் அவர்கள் மன்னார் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களது விவரங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் மன்னார் நீதிமன்றில் நீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன் போதே அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதுதவிர சில வாரங்களுக்கு முன்னர் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டு ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 6 இந்திய மீனவர்களும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஜ-4,56,104)

# வவு. சித்தி விநாயகர் ஆலயத்தில் திருட்டு

வவுனியா பத்தினியார் மகிழங்குளம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்கத்திலான இயந்திரம் திருடர்களால் திருடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு ஆலயத்தினுள் நுழைந்த திருடர்கள் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சிலைகள் விக்கிரகங்களை உடைத்து அதன் கீழ் இருந்த தங்கத்திலான இயந்திரத் தகட்டைத் திருடிச் சென்றுள்ளனர்.

மறுநாள் ஆலயத்துக்கு திருவெம்பாவைப் பூசைக்கு வந்த சமயம் விக்கிரகங்கள் உடைக்கபட்டிருப்பதைக் கண்ட பக்தர்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர். (ற-ஜ-402)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## உயர்திரு சிதம்பரப்பிள்ளை பசுபதி
## (குடாநீருரான்)



15.12.2015 மஹரகம இளைஞர்சேவை மன்றத்தில் நடைபெற்ற, கலைஞர்களுக்கான கௌரவிப்பு விழாவில் தமிழ் இலக்கியத்துறை (மரபுக் கவிதை) சேவையினைப் பாராட்டியும் கௌரவித்தும் கலாபூஷணம் எனும் சிறப்பு விருதினை நம் ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டமையைப் பாராட்டி மகிழ்வடைகின்றது வடமராட்சி மண்.

பல்துறை ஞானம் மிக்க திரு. பசுபதி ஐயா அவர்கள் மென்மேலும் பல சிறப்புக்கள் பெற்று வளம்பெற அல்வாய் வேவிலந்தையாள் அருள்வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

**பரிபாலன சபையினர்**
**அல்வாய் வேவிலந்தை**
**ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.**

சாதாரண தரத்தின் பின்னர்...

உலகை வென்றிட மிகமுக்கியமான
உலக மொழியான

**IT மற்றும் ஆங்கில**

அறிவினால் உங்கள் பிள்ளைகளை
சக்திபெறச் செய்யுங்கள்



ESOFT
Shaping Lives, Creating Futures.

சாதாரண தரத்தை முடித்த மாணவர்களுக்காகவே விசேடமாக நடாத்தப்படும் IT மற்றும் ஆங்கில டிப்ளோமாக்களுக்கு இன்றே உங்கள் பிள்ளைகளை விண்ணப்பிக்கச் செய்யவும்

assured by PEARSON

Diploma in **Information Technology**

Diploma in **English**
ஆங்கில உரையாடல் DVD இலவசம்

டிசம்பர் 31 தினத்திற்கு முன்னர் பதிவுகளை செய்வதனால்

**ரூ. 16,375 சேமியுங்கள்**

ரூ. 46,000
ரூ. 29,625

கழிவுகள் வழங்கப்படும் முறை

25%* 50%*

ESOFT

Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS

பதிவுகளை
இம் மாதம் 31ம் திகதிக்கு
முன்னர் மேற்கொள்ளுங்கள்


New Batches
28.12.2015 | 29.12.2015
@9:00am

துரித அழைப்பு
077309 9 308

ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

www.esoft.lk

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




18, 19 ஆம் திகதிகளில் நுவரெலியா மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான தேசிய விளையாட்டு விழாவில் 100 மீற்றர் 200 மீற்றர் ஓட்ட நிகழ்வுகளில் தங்கப்பதக்கத்தையும், நீளம் பாய்தல் மற்றும் 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் என்பவற்றில் வெள்ளிப்பதக்கத்தையும், 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வில் வெண்கலப்பதக்கத்தையும் பெற்ற கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் உடற்கல்வி ஆசிரிய மாணவன்

## தெய்வநாதன் இந்துகான்

என்பவரை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சிறப்புக்களைப் பெற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**அப்பா, அம்மா குடும்பத்தினர்**
**மற்றும் நண்பர்கள்.**
**இமையாணன் கிழக்கு,**
**உடுப்பிட்டி.**
T.P: 077 377 6430

Best Wishes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்வையற்ற வாகன அனுமதி நீக்கம்; 28 மருத்துவர்கள் ரிட் மனுத் தாக்கல்

கொழும்பு, டிசெ.23
தங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் நீக்கப்பட்டதை ஆட்சேபித்து 28 அரச மருத்துவர்கள் கொழும்பு மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் ஆறு ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள் ளனர்.
கொழும்பு ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் மருத்துவர் டீ.பி.ஜயசுந்தரவின் தலைமையில் 28 மருத் துவர்கள் தாக்கல் செய்துள்ள இந்த ரிட் மனுவில் பிரதி வாதிகளாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, நிதி யமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் அநுர ஜயவிக்கிரம உட்பட வேறு சிலரும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
அவர்களது ரிட் மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:
அரசு இதற்கு முன் வைத்தியர்களுக்குத் தீர்வையற்ற ரீதியில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி யளித்திருந்தது. அதனடிப்படையில் அனுமதிப்பத் திரத்தைப் பெற்றுக்கொள்ள மனுதாரர்களான தாங்கள் ஏற்கனவே விண்ணப்பம் செய்திருந்ததாகவும் எனினும், புதிய வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் நீக்கப்பட்டுள்ளதால் தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.
எனவே, அரசின் இந்தப் புதிய தீர்மானத்தை நீக்கித் தங்களுக்குத் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவை மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-சி)

## பால்மா விலைகள் உயரும் அறிகுறிகள்

*இழுபறிப் போர் ஏற்கனவே ஆரம்பம்*

கொழும்பு, டிசெ.23
இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் தீர்வை வரவு-செலவுத் திட்டத்தில் கிலோவொன்றுக்கு 135 ரூபாவிலிருந்து 225 ரூபா வரை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து விற்பனை விலைகளை அதற்கேற்ப அதிகரிப்பதற்கான அனுமதி கோரிப் பால்மா இறக்குமதி நிறுவனங்கள் நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.
அதற்கமைய இறக்குமதி செய்யப்பட்ட 400 கிராம் பால்மா பைக்கெற்றின் விலையை 35 ரூபாவாலும், ஒரு கிலோ பைக்கெற்றின் விலையை 90 ரூபாவாலும் அதிகரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.
400 கிராம் பைக்கெற்றின் தற்போதைய விலையான 325 ரூபாவை எவ்விதத்திலும் தொடர்ந்து நிர்வகிக்க முடியாதெனவும், வரவு-செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப் பட்ட தீர்வையால் விற்பனை விலைகளை உயர்த்து வதைத் தவிர வேறு வழியில்லை எனவும் அந்த நிறு வனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.
இறக்குமதித் தீர்வை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒருசில நிறுவனங்கள் தங்களது இறக்குமதிகளை ஏற் கனவே இடைநிறுத்தியுள்ளதாகவும் வேறு சில நிறு வனங்கள் இறக்குமதிகளைப் பெருமளவு கட்டுப்படுத் தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.
வழக்கமாகவே நுகர்வோர் அதிகாரசபைக்கும் பால்மா நிறுவனங்களுக்கும் இடையில் உருவாகும் இந்த இழுப றிப் போராட்டம் காரணமாகச் சந்தையில் பால்மாவுக்குப் பெரும்தட்டுப்பாடுஏற்படக்கூடுமென பாவனையாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (த-சி)

## பண்பாட்டுப் பேரவையின் நிசாந்தன் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசெ. 23
தமிழர் பண்பாட்டுப் பேரவையின் தலைவர் என்று கூறிக் கொண்டு திரிந்தவரும் யாழ்.மாநகர சபையின் முன் னாள் உறுப்பினருமான சுவீகரன் நிசாந்தன் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.



யாழ்.சோமசுந்தரம் அவனியூவைச் சேர்ந்த இவர் நேற்று முன்தினம் கைது செய் யப்பட்டு விசார ணைக்கு உட்படுத்தப் பட்டிருந்தார். விசா ரணைகளின் பின்னர் அவர் திருட்டுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது.
யாழ்.பிறவுண் வீதி யிலுள்ள அழகு நிலை யம் ஒன்றில் அவர் திருடியுள்ளதாகக் கடந்த ஜனவரி மாதம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசாரணை மேற் கொண்டு வந்த நிலையில், திருட்டுடன் தொடர்புடையவர் என்ற ஆதாரங்களையும் கொண்டு திருட்டில் ஈடுபட்டார் என்ற அடிப்படையில் அவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஆதாரங்கள் இல்லாததுபோன்று பொலிஸாருக்கு டிமிக்கி விட்டு வந்த நிலையில் பல மாதங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் அவரைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
இவர் தமிழர் பண்பாட்டுப் பேரவை என்ற பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கி வைத்துக்கொண்டு அதன் தலைவராகவும் இருந்து சில செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளார். அதற்கு வேறு சிலரும் உடந்தையாக இருந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படு கின்றது. இந்நிலையில் அவர் நேற்று நீதிவான் பெ.சிவ குமாரிடம் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-4-103)

## இணுவில் மத்தி. மாணவியே உயிரிழப்பு

நேற்றுச் செவ்வாய்க்கிழமை உதயனின் 3ஆம் பக்கத்தில் வெளியான "தீக் காயங்களுக்கு உள்ளாகி 14 வயது மாணவி உயிரிழப்பு" என்ற செய்தியில் குறித்த மாணவி பயின்ற பாடசாலை இணுவில் மத்திய கல்லூரி என்பதற்குப் பதிலாக இணுவில் இந்துக் கல்லூரி என தவறுதலாகப் பிரசுரிக்கப்பட் டுள்ளது. (த)

## இலங்கை - இந்தியாவுக்கிடையில் பயணிகள் கப்பல் போக்குவரத்து

*இரு நாடுகளும் திட்டம்*

கொழும்பு, டிசெ.23
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, இரு நாடுகளினதும் அமைச்சர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.
தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலும், இராமேஸ் வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையிலும், பயணிகள் கப் பல் போக்குவரத்து உள்ளிட்ட புதிய கடல் வழித்தடங்களை விரைவில் ஆரம்பிக்க இந்திய அரசு முயற்சிகளை மேற் கொண்டுள்ளதாக இந்தியாவின் கப்பல் போக்குவரத்து இணை யமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.
இதேவேளை, இந்தியா-இலங்கை இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று இலங்கை துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் கூறியுள்ளார்.
தென்னிந்தியாவுக்கும் மற்றும் வட இலங்கைக்கும் இடையே யான உறவுகளை ஊக்குவிக்கவே இந்தத் திட்டம் செயற்படுத் தப்படுகின்றது. தென்னிந்தியாவில் இருந்து வட இலங்கைக்கு விமானம் மூலம் பயணிப்போரின் சிரமங்களைப் போக்க இந்தத் திட்டம் உதவும்-என்றார்.
இதேவேளை, இந்தக் கப்பல் சேவைகள் தொடங்கப்பட்டால், இந்தியாவிலிருந்து தாயகம் திரும்ப விரும்பும் இலங்கை அகதி களுக்கு அது மிகப் பெரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக் கும் என்று இலங்கையிலுள்ள உள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. (த-வ)

## வரையறுக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவுதொடர்பான அறிவித்தல்

வடக்குகிழக்குமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுசங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்டஅதிவிசேடவர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்குகிழக்குமாகாணநிர்வாகஎல்லைக்குஉட்பட்டபகுதியில் இயங்கிவரும் வரை யறுக்கப்பட்டபலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின்கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கானவிதிகள் இற்கு அமையகிளிநொச்சிமாவட்ட கூட்டுறவுஅபிவிருத்திஉதவிஆணையாளர் குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகியநான் 04.08.2009 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்டஅதிவிசேடவர்த்தமானி மூலம் என்மீதுபாரிக் கப்பட்ட அதிகாரங்களின் படிமேற்படிசங்கத்தின் துணைவிதி 23 இற்கமையசங்கத்தின் சகலகிளைகளுக்குமானகிளைக் குழுத் தெரிவிற்கானகிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் காலஅட்டவணையின் படிநடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களைஅழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராககடமையாற்றுவதற்கும் பின்வரும் உத்தி யோகத்தர்களைபெயர் குறித்துநியமித்துள்ளேன்.

* இதற்கமைய இந்தக்கூட்டங்களிற் சமுகமளித்துவாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனிஅறிவித்தல்கள் சம்பந்தப்பட்டஉத்தியோகத்தர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
* கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கானநிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்துவாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எதுகுறைவோ அத்தொகையாகும்.
* தவிசாளர் குறித்தகிளையின் பொதுச்சபையில் இருந்துகிளைக்குழுவுக்கானஒன்பது (09) உறுப்பினர் களைத் தெரிவுசெய்யும்படிகிளையின் பொதுச்சபையைகோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவராவது (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சபையில் இருந்துகிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பதுபேருக்குமேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினைமேற்கொள்வார்.
* இரண்டுஅங்கத்தவர்கள் அல்லது இரண்டுக்குமேற்பட்டஅங்கத்தவர்களுக்கிடையேசமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவுமேற்கொள்ளப்படும்.
* தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
* கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்குவாக்களிக்கத்தகுதியுடையஉறுப்பினர்களுக்குஅதிகாரம் அளிக்கப்பட்டஅலுவலரால் 19.05.1998 ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காதவாக் களிக்க தகுதியுடையஅங்கத்தவர்களும்இவ்வறிவித்தலைதனிப்பட்டஅறிவித்தலாககருதி அன்றைய கூட்டத்திற்கு சமூகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமையைபயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமைகொண்டதாக செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் இடமும் 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை**

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதிநேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | 01 | பளை | திரு.சோ.கிருஸ்ணகுமார் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/ பளை மத்திய கல்லூரி |
| 02 | 02 | [illegible] | திரு.இராஜீவதன் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/[illegible] அ.த.க.பாடசாலை |
| 03 | 03 | முள்ளிப்பற்று | திரு.சி.பிரதீபன் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/[illegible] |
| 04 | 04 | சோரன்பற்று | திரு.வி.சிவபாலன் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/[illegible] |
| 05 | 05 | புலோப்பளை | செல்வி.க.கார்த்திகா | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை |
| 06 | 06 | இத்தாவில் | திரு.செ.பகீரதன் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/[illegible] |
| 07 | 07 | முகமாலை | திரு.உ.ஜெயந்தபிரகாஸ் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/முகமாலை றோ.க.த.க.பாடசாலை |
| 08 | 09 | கிளாலி | திரு.இ.கிரிஸ் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/கிளாலி றோ.க.த.க.பாடசாலை |
| 09 | 10 | புலோப்பளைகிழக்கு | திரு.க.உ.தவரூபன் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை |
| 10 | 11 | அல்லிப்பளை | திரு.இ.உ.தயாகுமார் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கிளி/அல்லிப்பளை சி.சி.த.க.பாடசாலை |
| 11 | 12 | கச்சார்வெளி | திரு.க.செந்தூரன் | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி | கச்சார்வெளி பொதுநோக்கு மண்டபம் |
| 12 | 13 | தம்பகாமம் | திரு.சி.[illegible] | 27.12.2015 ஞாயிற்[illegible] மணி | [illegible] பாடசாலை |
| 13 | 14 | சங்கத்தார்வயல் | திரு.செ.[illegible] | 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை [illegible] மணி | கிளி/[illegible] அ.த.க.பாடசாலை |

ஒப்பம்
திரு.வி.கே.அருந்தவநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
கிளிநொச்சி.

திகதி:- 23.12.2015

(ரி.[illegible]) ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46 கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு வவுனியா நகர சபை நடவடிக்கை

வவுனியா, டிசெ.23

வவுனியா நகர சபையால் நேற்று முன்தினம் 46 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன என வவுனியா நகர சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

கட்டாக்காலி மாடுகளால் அண்மைக் காலத்தில் பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் போக்கு வரத்துக்கும் பெரும் இடையூறு ஏற்பட்டிருந்தது. இதையடுத்து, வவுனியா நகர சபையால் தொடர்ச்சியாக ஐந்து நாள்கள் கட்டாக்காலிகளாக மாடுகளை வீதிகளில் விடவேண்டாம் என்றும், மீறி வீதிகளில் நடமாடும் மாடுகள் நகர சபையினரால் பிடிக்கப்படும் எனவும் அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

இந்த நிலையில் வவுனியா நகர சபையினர் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் அதிகாலை 4 மணி வரை வீதிகளில் படுத்திருக்கும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்,

இதன்போது 46 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு, அவை நகர சபை அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தக் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்கள் அதற்கான ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மாடுகள் மீண்டும் பிடிக்கப்படுமானால் அவை திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது எனவும் நகர சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகளுக்குத் தண்டப்பணமாக ஆயிரம் ரூபாவும், பிடி கூலியாக 600 ரூபாவும், பராமரிப்பு செலவுக்காக நாள் ஒன்றுக்கு 300 ரூபா என கட்டணங்கள் செலுத்தியே கால்நடைகளை உரிமையாளர்கள் பெற்றுச் செல்ல வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ற-ஜ-21)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி, டிசெ.23

ஏ-9 வீதியைக் கடக்கமுற்பட்ட மோட்டார் சைக்கிளை, வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவற்றில் பயணித்த மூவர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நுணாவில் ராசா கடைச் சந்திக்கு முன்பாக இடம்பெற்றது.

காயமடைந்த மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், வேறொரு விபத்தின்போது, தூக்கிவீசப்பட்டு வீதியோரத்தில் காணப்பட்ட மைல்கல்லுடன் மோதி காயமடைந்த ஒருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ற-ஜ-9)

# இரட்டைச் சம்பளம் பெறுகிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த

## அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாட்டின் மீது உண்மையான நேசம் கொண்டிருந்தால் ஒரே நேரத்தில் இரட்டைச் சம்பளம் பெறமாட்டார் என அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கண்டி திகனையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உலகிலேயே இரட்டைச் சம்பளம் பெறும் ஒரே நபர் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ச மட்டும் தான். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அவரது ஜனாதிபதி பதவிக்கான ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக தற்போது நாடாளுமன்ற உறுப்பினருக்கான சம்பளத்தையும் பெற்றுக் கொள்கின்றார். இதன் மூலம் உலகில் ஒரே நேரத்தில் இரட்டை சம்பளம் பெறும் ஒரே நபர் என்ற பெயரை மகிந்த ராஜபக்ச பெற்றுக் கொண்டுள்ளார்.

ஆனால் அவர் நாட்டின் மீது உண்மையான நேசம் கொண்டிருந்தால் இவ்வாறு நடந்துகொண்டிருக்கமாட்டார் என்றார்.

(ற-ஜ-10)

ஓட்டோ விற்பனைக்கு
தொடர்பு: 077 844 6089
YF-xxxx, 203- xxxx இலக்கமுடைய
2 ஓட் டோக்கள் உடனடியாக விற்பனைக்குள்ளன.
30/13, கனகரத்தினம் வீதி, அரியாலை.

If you want to be a qualified PHARMACIST?
மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை
21 வயதுக்கு மேற்பட்டவர்கள், கல்வித் தகைமைகள் (G.C.E O/L) ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி,(G.C.E A/L) ஒரே தடவையில் விஞ்ஞானப்பாடங்களில் (இரசாயனம் உட்பட) சாதாரண சித்தி, தற்போது சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.
நீங்களும் மருந்தாளராக வர விரும்பினால்!
தொடர்பு - மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர்,யாழ்ப்பாணக்கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) (கொமர்சல் வங்கிக்கு அருகில்)
464,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே. 077 625 6292 (68161) (13.15.17)

# தனியார் பஸ்களில் பிச்சை எடுக்கத் தடை

*ஜனவரி தொடக்கம் புதிய நடைமுறை*

கொழும்பு, டிசெ.23

ஜனவரி மாதம் முதல் தனியார் பஸ்களில் வர்த்தகம் செய்வதும், பிச்சை எடுப்பதும் தடை செய்யப்படவுள்ளது. இந்த அறிவிப்பை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் விடுத்துள்ளனர்.

இந்தத் தடை உத்தரவு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தனியார் பஸ்களின் உள்ளே வர்த்தகம் செய்வோர் மற்றும் பிச்சை எடுப்போரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வர்த்தகர்கள் மற்றும் பிச்சை எடுப்போரால், தாம் பெரும் அவதிக்குள்ளாவதாக ஏராளமான பயணிகளால் வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ற-ஜ-10)

பணியாளர் தேவை (Office Boy)
எமது கல்வி நிறுவனத்துக்கு சகல வேலைகளும் செய்யக்கூடிய ஆண் பணியாளர் தேவை. வயதெல்லை - 18-30, கல்வித் தகைமை குறைந்தது O/L. 26.12.2015 சனிக்கிழமை நேர்முகத் தேர்வு முற்பகல் 10 மணி முதல் நடைபெறும். நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்பு: இல 15 1/2, சிறாம்பியடி ஒழுங்கை
(சதோசா சுப்பர் மாக்கெட்டுக்கு மேல்) யாழ்ப்பாணம்.
021 222 4550

காணி விற்பனைக்கு
சாவகச்சேரி மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் (ராசாகடை முன் வீதி) A9 வீதிக்கு 500 மீற்றர் தூரத்தில் உள்ள 3பரப்புக் காணியில் குழாய்க்கிணற்றுடன் கட்டிமுடிக்கப்படாத வீடு விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 072 922 9424

தேவை
தொடர்பு: 077 225 0149
சாவகச்சேரியில் உள்ள வியாபார நிலையத்திற்கு
கணக்குப் பதியுநர்.
களஞ்சியப் பொறுப்பாளர்.
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. (68028) (14.15)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுதுமலை வடக்கைச் சேர்ந்த
இராஜகுலசேகரம் குமாரகுலசிங்கம்
அவர்கள் 2015.12.15 அன்று மகரகம கலாசார மண்டபத்தில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலாபூஷண அரச விருது விழாவின் போது சிறந்தசேவைக்காக கலாபூஷண அரச விருதை பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் அவரது சேவைகள் தொடர சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் கருணை வேண்டி வாழ்த்துகின்றோம்.
சுதுமலை வடக்கு, மானிப்பாய்
வாழ்த்துபவர்கள்: அன்பு மனைவி விமலாதேவி மற்றும் உறவினர்கள்.

# இழப்பீடு வழங்கும் பதிவுகள் ஆரம்பம்

*கிளி. கமநல சேவைத் திணைக்கள பிரதி ஆணையாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, டிசெ.23

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்சியாக பெய்து வந்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு வழங்குவதற்கான பதிவுகள் இடம்பெற்று வருகின்றன என்று கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைத் திணைக்கள பிரதி ஆணையாளர் தயாரூபன் தெரிவித்துள்ளார்.

கன மழை காரணமாக கிளிநொச்சியில் அழிவடைந்த பயிர்கள் பற்றிய முழுமையான விவரங்கள் கிடைக்காத போதும், கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொண்ட பயிர்ச் செய்கையாளர்கள் 252 பேர் தமது 300 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன என்று கமநல சேவைகள் திணைக்களத்திடம் பதிவை மேற்கொண்டுள்ளார்கள்.

எனவே, குறித்த அழிவுகள் தொடர்பான இழப்பீட்டுப் பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் அழிவைச் சந்தித்த விவசாயிகளிடத்தில் படிவங்கள் கொடுக்கப்பட்டு, அவர்களால் அவை பூரணப்படுத்தப்பட்டு மீண்டும் கமநல சேவைகள் திணைக்களத்தில் ஒப்படைக்கப்படும். இதனை அடுத்து இந்தப் படிவங்கள் காப்புறுதித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும். அவர்கள் அதை தரம்பிரித்து இவர்களுக்கான காப்புறுதிகளை வழங்குவர்.

அத்தோடு ஏனைய விவசாயிகள் அழிவடைந்த தங்களுடைய பயிர்களை பசளைகள் இட்டு சரி செய்து விடலாம் எனக் கூறியிருந்தனர். எனவே தான் அவர்கள் அந்தந்த கமநல சேவைகள் திணைக்களங்களில் பதிவுகளை மேற்கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-ஜ-ரி3)

கொழும்பு மாநகரில்
21/1, பழைய சோனகத் தெருவில் அமைந்துள்ள
(NEAR DAM Str POLICE)
அம்பாள் லொட்ஜில்
தினசரி, மாத வாடகைக்கு அறைகளும் குளியல் அறையுடன் கூடிய அறைகளும் உண்டு.
தொடர்புகளுக்கு,
011 233 2384, 077 128 8923,
077 865 1392
(68157) (11.15.18)
உரிமையாளர்
த.சிவலிங்கம், காங்கேசன்துறை.



* பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)
மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.
* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006
றோயல் மெடிக்கல் சென்றர்
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் பெயரைச் சொல்லுங்கள் என்று படையினருக்கு கடும் அழுத்தம்

**பிரகீத் கடத்தல் சந்தேக நபர்களைப் பார்வையிட்ட பின்னர் மகிந்த கருத்து**

இந்த அனைவரிடமும் (இராணுவத்தினரிடம்) ஒன்றையே கேட்கின்றனர். கோத்தபாய ராஜபக்ச என்று கூறுங்கள். அன்று நீங்கள் அனைவரும் வீட்டுக்குச் செல்லமுடியும். உங்களுக்குக் கூறியது கோத்தபாய ராஜபக்சதான் என்று கூறுங்கள்.

இவ்வாறுதான் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கொலை தொடர்பில் கைது செய் யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள இராணுவச் சந்தேக நபர்களிடம் கேட்கப்படுகின்றது என முன்னாள் ஜனாதிபதியான குருநாகல் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள இராணுவ[வீரர்க]ளர் ஐவரை நேற்று வெலிக்கடைச் சிறைச் சாலைவைத்தியசாலைக்குச்சென்றுபார்வையிட்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எமது அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக நான் இங்கு வந்தேன் என மகிந்த கூறியதையடுத்து, ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர்.

கேள்வி: உங்கள் காலத்தில் பிரகீத் எக்னெலிகொட விவகாரத்துடன் தொடர்புடைவர்கள் விசாரணை செய்யப்பட வில்லை எனக் கூறப்படுகின்றதே?

பதில்: நாம் விசாரணை செய்தோம். இவர்களை அழைத்து விசாரணை செய்ய வில்லை.

கேள்வி: உண்மையில் பிரகீத் எக்னெலிகொடவைக் கொன்றவர் யார்?

பதில்: எமக்கும் அது பிரச்சினைதா[ன்]. அதைத் தான் நாம் தேடவேண்டும். கொன்றிருப்பார்களா? இருக்கின்றாரா? பிரான்ஸில் கண்டதாக அமைச்சர் ஒருவர் நாடாளு மன்றத்தில் கூறியிருந்தார். இந்த விடயத்தில் நான் எவர் மீதும் குற்றஞ்சாட்ட மாட்டேன். ஏனெனில், நான் ஒரு சட்டத் தரணி என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். சாட்சியின்றி நான் கூறமாட்டேன். அரசியல்வாதிகளுக்கு எதையும் கூறலாம். ஆனால், சட்டத்தரணிக்குச் சாட்சி இல்லாமல் எதையும் கூற முடி யாது.

கேள்வி: 2016ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: வரவு–செலவுத் திட்டத்தில் சபாநாயகரே என்ற வசனம் மட்டுமே எஞ்சியுள்ளது. ஏனைய அனைத்தும் மாறிவிட்டன. இது வரவு–செலவுத் திட்டம் அல்ல.

இவர்கள் இராணுவத்தினர், கலைஞர்களைக் கொண்டுவந்து விசாரணை செய்கின்றனர். சாப்பிட்டதையும், குடித்ததையும் கேட்கின்றனர். இது நகைச் சுவையானது. இதேபோல அரசியல்வாதிகள், குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சட்டமா அதிபர் திணைக்களத்தினர் ஆகியோர் பேச்சு நடத்துகின்றனர். இது அரசியல் நடவடிக்கை.

அரசியல்வாதிகள் இருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால், இந்த அனைவரிடமும் ஒன்றையே கேட்கின்றனர். கோத்தபாய ராஜபக்ச என்று கூறுங்கள். அன்று நீங்கள் அனைவரும் வீட்டுக்குச் செல்லமுடியும். உங்களுக்குக் கூறியது கோத்தபாய ராஜபக்ச. இதற்காகத்தான் அரசியல்வாதிகள், அமைச்சர்கள் எனப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

கேள்வி: நீங்களும் இந்தக் கருத்தைக் கூறினீர்கள் தானே?

பதில்: அதுதான் இருக்கின்ற சாட்சி. எமக்கும் தெரியாது. அவை உண்மையாக இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம். விசாரணை செய்து பார்க்க வேண்டும் –என்றார்.

(கு–சி)


## மரண அறிவித்தல்கள்

### குமரையா தங்கேஸ்வரன்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரையா தங்கேஸ்வரன் 22.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரையா - இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மகனும், தையிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் லக்மனின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் இராஜேஸ்வரன் (லண்டன்), தங்கேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற லோகேஸ்வரன் மற்றும் இரத்தினேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பொன்னுச்சாமி (கனடா), காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் அருளானந்தம், அரியமலர் (நோர்வே), செல்வமலர், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் புஸ்பராணி, திலகவதி, பழனிப்பிள்ளை, லீலாவதி, குலேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2015) புதன்கிழமை 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கருவேலடி முன்லேன்,
ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.

தகவல்:
மனைவி, மகன்.

### தனபாலரட்ணம் பாலகுமரன்

(யாழ்.பரியோவான் கல்லூரி பழைய மாணவன்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலரட்ணம் பாலகுமரன் 21.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலரட்ணம் (அன்பு வைத்தியர்) - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அம்பலவாணர் - சிவனேஸ்வரி (சிவம்) தம்பதியரின் அன்பு மருமகனும், Dr. கௌதமி யின் (அமெரிக்கா) அன்புக் கணவரும், சித்திரா (லண்டன்), றஞ்சிதா (நோர்வே), புஸ்பேந்திரா (நோர்வே), றேணுகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 85/7, ஆனந்தம் வடலி வீதி, கொழும்புத்துறையில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

85/7, ஆனந்தன் வடலிவீதி,
கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்
077 791 7731

(68164)
(11,15,17,18)

### கந்தையா செல்வராசா



பிறப்பு 1952.05.19 இறப்பு 2015.12.22

சரவணையைப் பிறப்பிடமாகவும், கரம்பொன்னை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா 22.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - விசாலாட்சி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற சவரிமுத்து மற்றும் அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பவுலீனம்மாவின் அன்புக் கணவரும், பெல்ஜியா றதி, கிறிசில்டா, தர்சன், அனுசியா, பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் , பிறேமன் (இத்தாலி), ஜெயக்குமார், ஜஸ்ரின், மீரா ஆகியோரின் மாமனாரும், அஜித் குமார், காலஞ்சென்ற அஜைக்குமார் மற்றும் அலைக்ஸ், பிரித்திகா, டிலக்சன், டிருஷன், சார்மி, அபிசன், சார்லன் ஆகியோரின் பேரனும், செல்லம்மா, இராசரத்தினம், சிவச்செல்வம், ஜெகராசா, சிவநேசன், செல்வ ராணி, ராஜேஸ்வரி, ஜோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், பத்மா செலின், மேரி அஞ்சலா, காலஞ்சென்ற மேரிறீற்றா மற்றும் சகாயசீலி, சில் வேஸ்ரர், றொபேட், ஜஸ்மின் மரீனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (23.12.2015) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து செபஸ்ரியார் திருத்தலத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கரம்பொன் ஒழுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஒழுவில் வீதி,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

தகவல்: குடும்பத்தினர்
077 389 9887
077 419 6933

(68162)
(11,15,17,18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லாச்சி சின்னையா



பிறப்பு 1928.08.03 இறப்பு 2015.12.20

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லாச்சி சின்னையா 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், திருமதி நாகம்மா - இந்திரன், திருமதி பாக்கியலட்சுமி - அந்தோனிப்பிள்ளை, திருமதி ராணிமலர் - இராசதுரை, திருமதி ஞானம்மா - துரைராசா, திருமதி புஸ்பராணி - செல்வஞானம், திருமதி மனோரஞ்சிதம் - ரவிச்சந்திரன், அருமைத்துரை (குவைத்), திருமதி ஜெகதீஸ்வரி - புஸ்பநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கொத்துக்கட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.P.M லேன்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
077 806 6208
077 372 1715

தகவல்:
திருமதி. விஜிதா கனகசிங்கம்
(சுவிஸ்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(68153)
(11,15)

### வினாசித்தம்பி சுப்பிரமணியம்



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி சுப்பிரமணியம் 19.12.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சௌந்தரம் தம்பதியினரின் அன்பு மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் குணவதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தி(சிறுப்பிட்டி), ஜெகநாதன், ஜெயசீலன் (பிரான்ஸ்), ஜெயரூபி, ஜெயலட்சுமி(சுவிஸ்), ஜெயவாணி(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துக்குமாரசுவாமி(கஜன் மரக்காலை - திருநெல்வேலி), யசோதரன்(சுவிஸ்), ஜெயரூபன்(இத்தாலி), சுமன்(சுவிஸ்), பிறேமலதா, வதனி(பிரான்ஸ்)ஆகியோரின் மாமனாரும் வசந்தன், தர்சன், பிரியந்தி, ரதுசன், கஜீவன், கோபிசாந், அஸ்வின், றெனுசன், காவியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2015) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கிந்துசிட்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி வீதி,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபம் புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. வவுனியா மாவட்ட அரச அதிபர் எம். புஸ்பகுமார மண்டபத்தின் நுழை வாயிலை வைபவரீதியாகத் திறந்து வைத்தார். நிகழ்வில் பிரதேச செயலாளர் கா. உதயராஜா மற்றும் அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-21)

# பளையில் உள்ள காற்றாலையால் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் அரியரட்ணம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

பளைப் பிரதேசத்தில் நிறுவப்பட்ட காற்றாலை காரணமாக அந்தப் பிரதேசத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ளது. அத்துடன் காற்றாலையின் உபகரணங்களை ஏற்றிக்கொண்டுகனரகவாகனங்கள் வீதியால் சென்று வந்தமையால், சுமார் 3 கிலோ மீற்றர் நீளமான வீதி பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்து காணப்படுகிறது - இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அரியரட்ணம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

காற்றாலை மூலமான மின் உற்பத்தி நிலையம் பளையில் அமைக்கப்படுவது தொடர்பில் அந்தப் பகுதி மக்களிடம்கருத்துக்கள்கேட்கப்படவில்லை. இந்தக் காற்றாலை அமைக்கப்படுவதால் மழை வீழ்ச்சி குறைவடையும் என்று அந்தப் பகுதி முதியவர்கள் முன்னரே எச்சரித்திருந்தனர்.

அதற்கமைவாக குறித்த பிரதேசத்தில் மழை வீழ்ச்சி தற்போது மிகக் குறைவடைந்துள்ளது. இந்தக் காற்றாலை ஒவ்வொன்றும் 90 அடி உயரமானதாக இருப்பதால் காற்றாலைகள் முகில் கூட்டம் கருக்கட்ட விடாமல் கலைத்து விடும். இதனாலேயே மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ளது.- என்றார்.

> வவுனியா மாவட்டத்தில் பழமரச் செய்கையில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. மேட்டு நிலச் செய்கையை ஊக்குவிப்பதற்குரிய நடவடிக்கைகளை விவசாய அமைச்சர் எடுக்க வேண்டும்

எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் தெரிவித்ததாவது-

பூநகரியிலிருந்து - வன்னேரிக்குளம் - வலைப்பாடு வரையிலான பிரதேசத்தில் கடல் நீர் உட்புகுந்துள்ளது. இதனால் இந்தப் பகுதி மக்களின் கிணறுகள் உவர்நீராகியுள்ளன. மக்கள் இதன் காரணமாக இடம்பெயர்கின்றனர். பூநகரியிலிருந்து நாகதேவன் துறை வரையில் உவர் நீர்த் தடுப்பணை அமைக்கப்பட வேண்டும்.

அத்துடன் தற்போது ஆள்துளைக் கிணறுகள் (குழாய்கிணறு) வகை தொகையின்றி அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் நீர் வேகமாக உறிஞ்சப்படுகின்றது. எனவே இந்த விடயத்தில் விவசாய அமைச்சு கவனம் எடுக்க வேண்டும். - என்றார்.

ஆளுங்கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர் எம்.தியாகராஜா தெரிவித்ததாவது-

வவுனியா மாவட்டத்தில் பழமரச் செய்கையில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. மேட்டுநிலச்செய்கையை ஊக்குவிப்பதற்குரிய நடவடிக்கைகளை விவசாய அமைச்சர் எடுக்க வேண்டும் - என்றார்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தின் மற்றொரு உறுப்பினரான இந்திராசா குறிப்பிடுகையில், தமது மாவட்டத்துக்கான விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீடு குறைவானது. - என்றார். (ற-ஜ-5-ரி5)

## சந்தைகள் புனரமைப்பு

பளை,டிசெ.23

பளையில் நீண்ட காலமாக வசதிகளற்று இயங்கி வந்த மரக்கறி, மீன் சந்தைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படுகின்றன.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பளை நகரில் ஏ-9 வீதியில் பஸ் நிலையத்துக்கு அண்மையில் இயங்கி வந்த மரக்கறி, மீன் சந்தைகள் போரால் சேதத்துக்குள்ளாகியிருந்ததுடன், பாதுகாப்பின்றி திறந்த வெளியரங்குபோல் தூண்களுடன் மட்டும் இயங்கி வந்தன.

இந்த நிலையில் தற்போது பிரதேச சபைகள் வலுவூட்டல் நிதி உதவியுடன் மீன் சந்தை சுமார் 5 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. இதே போன்று அருகாமையிலுள்ள மரக்கறிச் சந்தையும் சுமார் 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் பலவசதிகளுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (ற-ஜ-115)

## வயலுக்குள் வீழ்ந்து வயோதிபர் சாவு

சாவகச்சேரி, டிசெ.23

மழை வெள்ளத்தால் ஏற்பட்ட நெற்பயிர் அழிவைப் பார்வையிட வந்த அதிகாரிகளுக்கு தனது வயலில் ஏற்பட்ட பாதிப்பைக் காட்டிவிட்டு வீடு திரும்பிய வயோதிபர் வயலுக்குள் வீழ்ந்து சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம்தாவளை-இயற்றாலையில் இடம்பெற்றது. குறித்த வயோதிபர் வயலுக்குள் வீழ்ந்ததை அவதானித்தவர்கள் அவரை உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர் என்றும் வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் சாவடைந்தமை தெரியவந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

## தொழிற் பயிற்சி கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.23

இலங்கைதொழிற்பயிற்சி அதிகார சபையால், வீட்டு மின் இணைப்பாளர் மற்றும் தொழிற்சாலை மின்னிணைப்பாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த கற்கைநெறிகள் சண்டிலிப்பாய், கைதடி, காரைநகர் தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

அத்துடன் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் பதிவுகளை எதிர் வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் முதலாம் மாடியிலுள்ள மாவட்ட அலுவலகத்தில்அலுவலக நேரத்தில் மேற்கொள்ள முடியும். (ற-ஜ-10)

## வடமராட்சி இளைஞர் வர்த்தக சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது

கரணவாய்,டிசெ.23

வடமராட்சிப் பகுதி இளைஞர்களின் தொழில் முயற்சிகளை மேம் படுத்துவதற்கான வடமராட்சி இளைஞர் வர்த்தக சம்மேளனம் ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின், இளைஞர் தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த இளைஞர் தொழில் முயற்சியாளர்களுக்கு அண்மையில் நிதி வழங்கப்பட்டது.

அவ்வாறு நிதி வழங்கப்பட்டவர்களின் தொழில் முயற்சியைமேம்படுத்தும் நோக்கத்தோடுஇந்த இளைஞர் வர்த்தக சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர்சி.சிவஶ்ரீதலைமையில் கரவெட்டிப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்7 இளம்தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட குழுஒன்றுதெரிவு செய்யப்பட்டுள்ளது. (ஜ-108)

# பாதீனிய ஒழிப்புத் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை என்ன?

## வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ.23

வடக்கு மாகாணத்தில் விவசாய அமைச்சால் பரவலாக பாதீனிய ஒழிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால்பாதீனியத்தின்பரம்பல் இன்னும் கட்டுப்படுத்தப்படவில்லை. இது தொடர்பில் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைஎன்ன?.- இவ்வாறுவடக்குமாகாண சபையின்ஆளும்கட்சிஉறுப்பினர்களான அஸ்மின் மற்றும் சுகிர்தன் ஆகியோர் வடக்கு மாகாண விவசாய அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு கேள்விகளை எழுப்பினர்.

ஆளும் கட்சியின் நியமன உறுப்பினர் அஸ்மின் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்-

மத்திய அரசிலிருந்து தடை வந்து கொண்டிருக்கின்றது என்று சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லை. நாம் அதற்குரிய வகையில் விடயங்களைக் கையாள வேண்டும். வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் பாதீனிய ஒழிப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனை அழித்து விவசாய அமைச்சிடம் ஒப்படைத்தவர்களுக்கு பணம் வழங்கப்பட்டது. ஆனாலும் இன்று சகல இடங்களிலும் பாதீனியம் காணப்படுகின்றது. இதற்கு என்ன தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

துருக்கியுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, கட்டை இனப் பரந்த மாமரச் செய்கைக்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் அடையாளமான கறுத்தக் கொழும்பான் மாம்பழத்துக்கு, அதனைப் பாதுகாப்பதற்கு - மேம்படுத்து வதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதனை எவ்வாறு முன்னெடுக்கப் போகின்றீர்கள் - என்றார்.

ஆளும்கட்சிஉறுப்பினர்இ.ஆனோல்ட்இதன் போது கருத்துத் தெரிவிக் கையில்-

குடிதண்ணீர்ப் பிரச்சினையால் வடக்கு மாகாணம் சிக்கலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. எல்லோரும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரையே வாங்கிப் பருகுகின்றனர். வடக்கு மாகாண அரசு போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தலை ஏன் அறிமுகப்படுத்தக் கூடாது ? இதனைச் செய்து வடக்கு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை ஓரளவாவது தீர்க்க முடியும்.

மாகாவலி நீரை இரணைமடுவுடன் கொண்டு வந்து இணைத்து மாகாவலி அதிகார சபையினூடாக குடியேற்றங்களை மேற்கொள்வார்கள் என்று சொல்லி அந்தத் திட்டத்தையே இடைநிறுத்த முயற்சிக்கின்றோம். மகாவலி அதிகார சபைக்கு இணையான - நிகரான அதிகார சபையினை எம்மால் ஏன் உருவாக்க முடியாது. நாங்கள் மத்திய அரசுக்கு சமமானவர்களாகவும் - சம வலுவுள்ளவர்களாகவும்மாறவேண்டும்-என்றார்.

ஆளும்கட்சியின்யாழ்.மாவட்ட உறுப்பினர் ச.சுகிர்தன் கருத்துத் தெரிவிக்கையில் - விவசாய அமைச்சர் பதவியேற்கும் போது வடக்கில் பெப்சி - கொக்ககோலா போன்ற குளிர்பானங்களுக்கு தடை விதிக்கப்படும் என்று கூறியிருந்தார். அதனை நினைத்துநாங்கள்மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் இன்றும் சகல இடங்களிலும் குறித்த குளிர்பானங்களே விற்பனை செய்யப்படுகின்றன. பாதீனியம் தொடர்பில்எடுக்கப்பட்டதொடர்நடவடிக்கை என்ன என்பது இது வரையில் தெரியவில்லை.

கூட்டுறவுத் துறையில் நூறு நாள் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் போது நஷ்டத்தில் இயங்கும் சங்கங்கள் பொறுப்பேற்கப்படும் என்று தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரையில் அவ்வாறு நடந்ததாகத்தெரியவில்லை.

மோசடிகள் இடம் பெற்ற சங்கங்கள் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டதாகவும்தெரியவில்லை.

5 லட்சம் மரக்கன்றுகள் விநியோகிக்கப் படும் என்று சொல்லப்பட்டது. அதற்கு என்ன நடந்தது என்பது இதுவரையிலும் வெளிப்படுத்தப்படவில்லை - என்றார். (ற-ஜ-5-ரி5)

## நினைவுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.23

பேராசிரியர்க.கைலாசபதியின் 33 ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் விசேட கருத்தரங்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின்கவிஞர்முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் உப அதிபர் வே. சேந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விசேட உரையை யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் சிரேஷ்ட விரி வுரையாளர் இ. குமரன் வழங்கவுள்ளார். (ற-ஜ-10)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ் கொட்டடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும் என நிலையத்தின் செயலாளர் க.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ற-ஜ-10)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41,322 குடும்பங்கள் இதுவரை முல்லைத்தீவில் மீள்குடியமர்வு

## மாவட்டச் செயலகம் தகவல்

முல்லைத்தீவு, டிசெ.23
முல்லைத்தீவு மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டுவரை 41 ஆயிரத்து 322 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 733 பேர் மீள் குடியேறியுள்ளனர் என்று மாவட்டச் செயலகப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின் பின்னரான காலப்பகுதியில் மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 41 ஆயிரத்து 322 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 733 பேர் மீள் குடியேறியுள்ளனர்.

> போரின் பின்னரான காலப் பகுதியில் மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 41 ஆயிரத்து 322 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 733 பேர் மீள் குடியேறியுள்ளனர்.

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் மூவாயிரத்து 738 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 741 பேரும், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் இரண்டாயிரத்து 867 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 58 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 823 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 63 பேரும், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 13 ஆயிரத்து 18 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 528 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 12 ஆயிரத்து 540 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 154 பேரும், வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் மூவாயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 189 பேரும் மீள்குடியேறியுள்ளனர் என்று புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ஐ-21,ரி7)



நெடுங்கேணியில் ஐயப்பன் ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா நான்கு மதங்களுக்குரிய மதகுருமார்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஐ)

# இயற்கை கூட்டுப் பசளை மன்னாரில் விற்பனை

மன்னார், டிசெ.23
மன்னார் நகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தால் தயாரிக்கப்பட்ட மன்னார் கொம்போஸ் எனும் இயற்கை கூட்டுப்பசளையின் விற்பனை, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் நகரசபையின் செயலாளர் பிரிட்டோலெம்பேடால் பண்டிகைக்காலதெருவோரவியாபார நிலையத்தில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பசளையானது நகரசபையால் சேகரிக்கப்படும் கழிவுகளில் இருந்து, உக்கிய மற்றும் உக்காத பொருள்கள் என தரம்பிரிக்கப்பட்டு, உக்கிய சேதன கழிவுகளுடன் மேலதிக சேர்மானங்களாக ஆடு, மாடு போன்ற விலங்குகளின் தோல் மற்றும் எச்சங்கள் போன்றவையும் சேர்க்கப்பட்டு பசளையாக்கல் செயன்முறையின் கீழ் மீள் சுழற்சி செய்யப்பட்டு 3 மாத காலப் பதப்படுத்தலுக்குப் பின்னர் விற்பனைக்காக பொதி செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், இந்தப் பசளை 100 வீத இரசாயன பதார்த்தமற்றதுடன், பக்க விளைவற்ற, பரிசீலிக்கப்பட்டு வெற்றிஈட்டிய, நம்பகத்தன்மை வாய்ந்த இயற்கைப் பசளையாகும்.

இந்த உற்பத்தியானது இயற்கை சம நிலையுடன் இணைந்தவாறு பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் வீட்டுத் தோட்டங்களுக்காகவும், அழகு சாதன வளர்ப்புச் செடிகளுக்காகவும் மன்னார் நகர சபையால் தயாரிக்கப்பட்டுள்ளது.

> இந்தப் பசளை 100 வீத இரசாயன பதார்த்தமற்றதுடன், பக்க விளைவற்ற, நம்பகத்தன்மை வாய்ந்த இயற்கைப் பசளையாகும்.

மன்னார் கொம்போஸ் பசளைளைப் பெற்றுக் கொள்ள ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை பண்டிகைக்காலதெருவோர வியாபார நிலையத்திலும், அதன் பின்னர் நகர சபை அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-56)

# விடுதலைப்புலி சந்தேகநபர் மட்டக்களப்பில் விடுதலை

அம்பாறை, டிசெ.23
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் இருந்து வரும் விடுதலைப் புலிகள் சந்தேகநபர் ஒருவரை மட்டக்களப்பு மேல்நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திருக்கோவில், தம்பிலுவிலைச் சேர்ந்த இராசலிங்கம் பார்த்தீபன் என்பவர் மீது மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

1999 டிசெம்பர் முதல் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து ஆயுதப் பயிற்சி, போர்ப் பயிற்சி என்பவற்றைப் பெற்று தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அத்துடன் உரிய நபரான இராசலிங்கம் பார்த்தீபன் சுயமாக வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் மட்டுமே வழக்கில் வழக்கு தொடுநர் தரப்பில் சாட்சியமாகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில், நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் நடைபெற்றபோது, நம்பத்தகுந்த சாட்சியங்களின்மையால், குறித்த குற்றச்சாட்டிலிருந்து இராசலிங்கம் பார்த்தீபனை விடுதலை செய்வதாக நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் தீர்ப்பு வழங்கினார். (ற-ஐ-30)

# சிவில் பாதுகாப்புப் பிரதிநிதிகள் முன்மாதிரியாக திகழ வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, டிசெ.23
சமூகத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளைக்கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக மற்றவர்களுக்கு முன்மாதிரியாக சிவில் பாதுகாப்புப் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். – இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுவில் உள்ளவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;
சமூகத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தக் குழுக்களால் அதிகளவான சட்டவிரோத செயற் பாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இவர்கள் வழங்கும் தகவல்களைக் கொண்டு பொலிஸார் சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்து வருகின்றனர். எனவே, இந்தக் குழுக்களில் உள்ளவர்கள் சமூகத்தில் முன்மாதிரியாகவும் நற்பிரசைகளாகவும் இருக்கவேண்டும். – என்றார். (ற-ஐ-ரி3)

# வன்னியில் 12 பாடசாலைகளைக் கல்வி அமைச்சு புறக்கணிப்பு

## சாடுகின்றார் சாந்தி எம்.பி.

கிளிநொச்சி,டிசெ.23
கல்வி அமைச்சால் கொண்டுவரப்பட்ட "அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் வேலைத்திட்டத்தில், வன்னி மாவட்டத்துக்குட்பட்ட 12 பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இந்தநடவடிக்கைவன்னி மாவட்ட பாடசாலைகளின் கல்வி சார் உட்கட்டமைப்புக்கான அபிவிருத்தியை முற்றாகப் பாதிப்படையச்செய்யும்.–இவ்வாறுவன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்காந்தராசா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடக அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;
கல்வி அமைச்சின் "அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் வேலைத்திட்டத்தினூடாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலிருந்தும், இரு பாடசாலைகளை அபிவிருத்தி திட்டங்களில் வன்னிப்பிரதேச பல பாடசாலைகள் நிராகரிக்கப்பட்டுள்ளமையை கடுமையாக எதிர்க்கின்றோம்.

இந்தத் திட்டத்தில் வன்னிப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள 30 பாடசாலைகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதிலும், மேற்படி திட்டத்துக்கு 18 பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன.



வவுனியாவில் 8 பாடசாலைகளில் 7 பாடசாலைகளும், மன்னாரில் 10 பாடசாலைகளில் 5 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பாடசாலைகளில் 6 பாடசாலைகளுமே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் காரணமாக வன்னிப் பிரதேசத்தில் 12 பாடசாலைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 30 ஆண்டு காலப் போராட்ட காலத்தில் எமது கல்வி வளங்கள் மற்றும் உட்கட்டுமான வசதிகள் என்பன அழிவடைந்த நிலையில் கல்விசார் அபிவிருத்திகளை முன்னெடுப்பது கட்டாயமான பணியாக மாறியுள்ளது.

இந்த நிலையில் இந்த வேலைத் திட்டத்தினூடாக பரிந்துரைக்கப்பட்ட பல பாடசாலைகள் நிரா கரிக்கப்பட்டமையானது எமது மாணவர்களுக்கான கல்வி உரிமையை மீறும் செயலாகும்.

வன்னிப் பிரதேச கல்வி அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு மிகப்பெரிய வாய்ப்பாக அமையக்கூடிய இந்தத் திட்டத்தை கல்வி அமைச்சு நிராகரிக்கப்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் வழங்க வேண்டும்.

இந்தத் திட்டத்தினூடாக வன்னிப் பிரதேச கல்வி அபிவிருத்தியை மேம்மபடுத்த வேண்டியது கல்வி அமைச்சின் கடமையாகும்– என்றுள்ளது. (ற-ஐ-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# சந்தைப்படுத்தல் வசதியின்றி வடக்கு விவசாயிகள் சிரமம்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.23
வடக்கு மாகாண விவசாயிகள் தமது விளைபொருள்களை சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதனால் அவர்களுக்கு வருமான இழப்பு ஏற்படுகின்றது. இவ்வாறான நிலைமை நீடித்தால் இளைஞர்கள் எப்படி விவசாயம் செய்வதற்கு முன் வருவார்கள்?. - இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் தர்மலிங்கம் கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் விரைவு உணவில் நாட்டம் கொண்டிருப்பது போல், இரசாயனப் பசளைகளிலும் அதிக நாட்டம் கொண்டிருக்கின்றோம். இதன் விளைவுகள் பற்றி விவசாயிகள் சிந்திப்பதில்லை. விவசாயிகள் எடுத்ததற்கெல்லாம் இரசாயன உரங்களை, எப்படி உபயோகிப்பது என்று தெரியாமலே பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர். மண்ணை நஞ்சாக்கி அழித்துக் கொண்டிருக்கின்றோம். - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதைவிட விவசாயிகளின் முக்கியமான பிரச்சினை சந்தைப்படுத்தல். விவசாயிகள் தமது பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதால், வருமானம் இல்லாத பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். அப்படியானால் இளைஞர்கள் எவ்வாறு விவசாயம் செய்ய வருவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த அமைச்சு மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன் -

விவசாயச் சட்டங்களுக்கு அமைய விவசாயத் தேவைக்குரிய நிலத்தை - வயல் நிலங்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது. ஆனால் இன்று பல விவசாயக் காணிகள் கட்டடங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. இதற்கான அனுமதிகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்று தெரியவில்லை.

விவசாயத்துறையில் வருமானம் குறைவு என்ற நிலையால், பலர் அந்தத் தொழிலைக் கைவிட்டு வெளிநாடு சென்று கொண்டிருக்கின்றனர்.

> “மாகாணத்தின் சகல குளங்களும் உரிய முறையில் தூர்வாரப்பட வேண்டும். மாகாணத்தின் கூட்டுறவுத் துறையானது இயற்கைச் சாவை நோக்கிச் சென்று கொண்டிருக் கின்றது.”

இப்படியே தொடர்ந்தால் விவசாயத் துறை அழிவடைந்து விடும். எனவே விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்க அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்குரிய நியதிச் சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

மாகாணத்தின் சகல குளங்களும் உரிய முறையில் தூர்வாரப்பட வேண்டும். மாகாணத்தின் கூட்டுறவுத் துறையானது இயற்கைச் சாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. எமது சபை பொறுப்பேற்ற பின்னர் ஒழுங்காக இயங்கிக் கொண்டிருந்த கூட்டுறவுச் சங்கங்கள் கூட, தற்போது மோசமான நிலைக்குள் போய்க் கொண்டிருக்கின்றன - என்றார்.

ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான திருமதி அனந்தி சசிதரன் இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த போது -

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள சிவில் பாதுகாப்பு படைகளின் பண்ணைகளில் பணியாற்றுபவர்களை, கட்டாயமாக இராணுவ ஆள்சேர்ப்புக்கு உட் படுத்தும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் எமது இளைஞர் - யுவதிகள் பலர் அங்கு பணியாற்ற விரும்பவில்லை. எனவே குறித்த இளைஞர் - யுவதிகளுக்கு எமது விவசாய அமைச்சால், தொழில் முயற்சி வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஆளுங்கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர் அ.பரஞ்சோதி கருத்துத் தெரிவிக்கையில் -

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தக் கூடிய தூவல் நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம் போன்றவற்றை, விவசாயிகளுக்கு அமைச்சு அறிமுகப்படுத்த வேண்டும். இதற்கான ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும். முன்பு சமூக சேவைகள் திணைக் களத்தினூடாகவே உணவுவழங்கல்நடைபெற்று வந்தது. தற்போது விவசாய அமைச் சுக்குள் அது உள்வாங்கப்பட் டிருந்தாலும், அதற்கான நிதி ஒதுக் கீடு இல்லை.

பனைமரம் ஏறுவதற்கான ஊக்குவிப்புகள் வழங்கப்படவில்லை. பனை மரம் ஏறுதல் மற்றும் அதனோடு சார்ந்த தொழிலாளர்களுக்கு நவீன தொழில் நுட்ப வசதிகள் - பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அது மேற் கொள்ளப்படுவதில்லை - என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவிக்கும் போது:

வடமராட்சி கிழக்கில் மணல் விநியோகம் தற்போது சீராக நடைபெறுகின்றது. அந்தப் பகுதியிலிருந்து மணல் பெறுவதன் ஊடாக கிடைக்கின்ற வருமானத்தைப் பயன்படுத்தி, வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் நல்லின பசுமாடு விற்பனை நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். மலையகத்தில் அதிக பால் தரும் நல்லின பசுமாடுகளைப் பயன்படுத்துகின்றனர். அதே போன்று இங்கும் எமது பண்ணையாளர்கள் அதனைப் பயன்படுத்த, நல்லின பசுமாடு விற்பனை நிலையம் அவசியம் - என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் வே.சிவயோகன் கருத்துத் தெரிவிக்கும் போது:

நிலத்தடிநீரைப்பாதுகாப்பதற்காகமழை நீரைச் சேகரிக்கும் நடவடிக்கை மற்றும் மழை நீர் கடலுக்குள் செல்வதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். வடமராட்சியில் உள்ள உவர்நீர்த் தடுப்பணை திருத்தியமைக்கப்பட வேண்டும். விவசாயக் கிணறுகள் மேல் கட்டு இல்லாமல் உள்ளன. அவற்றை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

ற-ஐ-5-ரி5)

### இலங்கைக்கு அமெரிக்கா நிதியுதவி

கொழும்பு, டிசெ.23
அமெரிக்கா இலங்கைக்கு பல மில்லியன் டொலர் நிதியை அன்பளிப்புச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. மிலேனியம்ச்சிலேன்ச்எக்கவுண்ட் செயற்றிட்டத்தின் கீழ் இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் வறுமையை ஒழித்தல், ஜீவனோபாய மார்க்கங்களைஅபிவிருத்தி செய்தல்மற்றும்அடிப்படை வசதிகளை அபி விருத்தி செய்தல்ஆகிய தேவைகள் தொடர்பாகவே இந்த நிதி உதவிவழங்கப்படவுள்ளது. இதேவேளை இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஏற்பட்டு, நல்லாட்சிநிலைப்படுத்தப்பட்டு வருவதால் இலங்கைக்கு இது போன்ற பல பயன்கள் கிடைக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-ஐ-22)

### வாகனங்களால் மோதுண்ட வயோதிபர்கள் வைத்தியசாலையில்

சாவகச்சேரி,டிசெ.23
வாகனங்களால்மோதுண்டு காயமடைந்த வயோதிபர்கள் இருவர் சாவகச் சேரி வைத்தியசாலையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளனர். கைதடிப்பகுதிஏ-9வீதியில் சாவகச்சேரிச் சந் தைக்கு வியாபாரப் பெட்டியுடன் சைக்கிளில்வந்தவயோதிபரொருவரை வேகமாக வந்த ஓட்டோ மோதியதில் அவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

அதேவேளை சாவகச்சேரி ஏ-9வீதிப்பகுதியில் நடந்து வந்த கிளிநொச்சி இரத்தினபுரத்தைச்சேர்ந்த வயோதிபரொருவரை வாகனமொன்று மோதிவிட்டுதப்பியோடியுள்ளது. காயங்களுடன் காணப்பட்ட வரை அந்த வழியே வாகனத்தில் வந்தவர்கள் ஏற்றி வந்து சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர். (ஐ-9)

### தேசிய வாசிப்பு மாத நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வுகள்

சாவகச்சேரி,டிசெ.23
சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தின் தேசியவாசிப்புமாத நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வுகளும், பரிசில்கள் வழங்கலும் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மண்டபத்தில்நடைபெறவுள்ளன. பிரதேசசபைச்செயலாளர் திருமதி த.தயானந்தன் தலைமையில்நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், சிறப்புவிருந்தினர்களாக யாழ்.பிராந்திய உதவிஉள்ளூராட்சிஆணையாளர் ந.திருலிங்கநாதன், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பொது நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகள்,பாடசாலைகளின்மாணவர்கள், வாசகர்கள் ஆகியோரிடையே நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும், அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

### பெருந்திருவிழா

சாவகச்சேரி, டிசெ.23
மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திரு விழா கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (ற-ஐ-9)

### தடை தாண்டல் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23
ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் 3.i,3.ii தரஆசிரியர்களை 2.ii க்கு பதவியு யர்வு செய்வதற்கான தடை தாண்டல் பயிற்சி வகுப் புக்கள் எதிர்வரும் 28, 29, 30, ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக் கம் பிற்பகல் 5 மணி வரை யாழ். இந்துமகளிர்கல்லூரியில் அமைந் துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடை பெறவுள்ளது.(ற-ஐ-ரி6)

### பொதுக் கூட்டம்

தென்மராட்சி கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், எதிர் வரும்27ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் மேல் மாடி மண்டபத்தில் சங்கத் தலைவர் செ.அமரசேகரம் தலைமையில்நடைபெறவுள்ளது. (ற-ஐ-122)

# யாழில் பின்தங்கிய பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்

## இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23
போரின் பாதிப்பில் இருந்து மீண்டுள்ள குடாநாட்டில், அபிவிருத்தி செய்யப்படாத பிரதேசங்களில் மக் களுக்கான தேவைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்பட வேண்டும். - இவ்வாறுயாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத் தின் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்தார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை, லங்கா ஐ.ஓ.சி. அமைப்பின் உதவியுடன் புதிதாக ஆரம்பித்து வைத்துள்ள எரிபொருள் நிலையத்தின் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ். கிளைத்தலைவர் கு.பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

போரின் பின்னர் குடாநாட்டில், எனது சேவைக் காலத்தில் மக்களுடன் கலந்துரையாட வாய்ப்புக் கிடைத்த போது, மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அறிய முடிந்தது. இந்த நிலையில் தீவுப்பகுதி உட்பட பல பிரதேசங்கள் இன்னமும் பின்தங்கிய பிரதேசங்களாகவே உள்ளன. அவற்றை அபிவிருத்தி செய்து மக்களின் தேவைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்பட வேண்டும்.

இது தவிர இந்தியாவின் நிதிப்பங்களிப்புடன் கட்டப்படும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் பணிகள் பெரும்பாலும் முடிவடைந்துள்ளன- என்றார். (ற-ஐ-7)

# வரணியில் களவுபோன பசு குடத்தனையில் மீட்கப்பட்டது

வரணி, டிசெ.23
வரணியில் களவு போன பசுமாடொன்று, மறுநாள் காலை குடத்தனை 6 ஆம் கட்டைப் பகுதிக்கு அண்மித்த பாதையில் வைத்து உரிமையாளரால் மீட்கப் பட்டுள்ளது.

மாசேரிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு நபர் ஒருவரின் பட்டியில் மாடொன்று களவு போயுள்ளது. உரி மையாளர் பல இடங்க ளிலும் மாட்டைத் தேடி அலைந்த நிலையில், குடத்தனை6ஆம்கட்டைக்கு அண்மையில் மாடொன்று கட்டப்பட்ட நிலையில் நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று குறித்த மாட்டை அடையாளம் கண்டு அதனை மீட்டுள்ளார்.



இதேவேளை அண்மைக் காலமாக வரணிப் பிரதேசத்தில் பகல் வேளை, இரவு வேளை என்றில்லாமல் மேய்ச்சலுக்குக் கட்டப்படும் கால்நடைகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (ற-ஐ-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன்கார்ட் கப்பலின் ஆயுதங்கள் கடலுக்குள்

## கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல்

கொழும்பு,டிசெ.23
அவன்கார்ட் கப்பலில் இருந்த ஆயுதங்கள் கடலில் போடப்பட்டுள்ளதாகவும், குறித்த ஆயுதங்கள் சர்வதேச தீவிரவாதிகளிடமிருந்து குறைந்தவிலைக்குக்கொள்வனவு செய்யப்பட்டவை என்றும் கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கடற்படையினரிடம் கப்பலை ஒப்படைப்பதற்கு முன்னர், காலி கடல் எல்லையிலிருந்து பத்து கடல் மைல் தொலைவில் வைத்து ஆயுதங்கள் கடலில் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த ஆயு தங்களை மீட்பதற்குக் கடற்படைச் சுழியோடிகள்விரைவில்அந்தப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

அத்துடன் அவன்கார்ட்டினால் பாதுகாப்பு வழங்கப்பட்ட சில வர்த்தகக் கப்பல்களின் பாதுகாப்புத் தரப்பினால் இந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டனவா? என்பது குறித்தும்விசாரணை நடத்தப்படவுள்ளது.

17 டொலர்களுக்கு ரி56 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் மொத்தவிலையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுதங்கள் பாதுகாப்பான முறையில் பொதியிடப்பட்டு காலி கடற்பரப்பின் கடலுக்கு அடியில் போடப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்களை மீளவும் எடுத்து பயன்படுத்தும் நோக்கில் இவ்வாறு ஆயுதங்கள் புதைக்கப்பட்டனவா? என்பது குறித்து கடற்படைப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட சந்தேகத்துக்கிடமான 50 ஆயுதங்களின் இலக்கங்கள் அழிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த ஆயுதங்களும் சட்டவிரோதமான முறையில் சர்வதேச தீவிரவாதிகளிடமிருந்துபெற்றுக்கொள்ளப்பட்டனவா? என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆயுதங்கள் தொடர்பில், அரச இரசயான பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைஎடுக்கப்படஉள்ளதாக பாது காப்பு அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (த-ஐ-10)




யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு ஆதரவு வழங்குமாறு கோரும் சுவரொட்டிகள் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இவை பிரதான நகரப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (த-ரி5-9)

# யாழ். பல்கலை திட்டமிடல் அலகு விரைவில் துறையாகத் தரமுயரும்

யாழ்ப்பாணம், டிசெ.23
யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறையின் கீழ் இயங்கும் திட்டமிடல் அலகு விரைவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் திட்டமிடல் துறையாகக் கொண்டு வரப்படும்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் என்.ஞானகுமாரன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத் திட்டமிடல் சார்ந்த கற்கைநெறி திட்டமிடல் அலகின் ஊடாக நீண்டகாலமாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்தக் கற்கைநெறியைத் திட்டமிடல் துறையாக முன்னெடுக்குமாறு பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலைப்பீடாதிபதியைக் கோரியிருந்தார்.

இதன் முதற்கட்டமாகத் திட்டமிடல் அலகு விரைவில் திட்டமிடல் துறையாக முன்னெடுக்கப்படும். இதனைத் தொடர்ந்து தனித்த பீடமாக எதிர்காலத்தில் முன்னிறுத்தப்படும்.

இதன் ஊடாகப் பல்கலைக்கழகத்தில் இருந்து திறன் வாய்ந்த திடடமிடல் மாணவர்கள், திட்டமிடலாளர்கள், திட்டமிடல் நிபுணர்கள் வெளியேற வாய்ப்புண்டாகும்.

2016 இல் யாழ். பல்கலைக்கழகத்துக்குத் திட்டமிடல் துறை செயற்படுவதற்கு அனுமதி கிடைக்கப் பெறலாம் எனவும் தெரியவருகிறது. (த-ஐ-50)

# மத்தியஸ்தர் சபைக்கு ஆட்சேர்ப்பு; தகவல்கள் வெளியிடப்படவில்லை

யாழ்ப்பாணம்.டிசெ.23
மத்தியஸ்தர் சபைக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை, யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற போதும், இதுவரை தெரிவு தொடர்பான உத்தியோகபூர்வத் தகவல்கள் வெளியிடப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி தொடர்பான விசேட மத்தியஸ்தர் சபைக்கான நேர்முகத் தேர்வு கடந்த ஒக்ரோபர் மாத இறுதி வாரத்தில் இரு நாள்கள் யாழ்.செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நூற்றுக் கணக்கான கல்விமான்கள், சமாதான நீதிவான்கள், அரச அதிகாரிகள், ஓய்வு பெற்றவர்கள் எனப்பலரும் இதில் கலந்து கொண்டனர்.

எனினும் மேற்படி விசேட மத்தியஸ்தர் சபைக்கான பெறுபேறு குறித்து அறியச் சம்பந்தப்பட்டவர்கள் யாழ்.செயலகத்துக்கு வந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விசேட மத்தியஸ்தர் சபைநியமணங்கள்நீதிஅமைச்சால் மேற்கொள்ளப்படவுள்ளதோடு, முதன்முதலில் யாழ்.மாவட்ட பிரதேச செயலக ரீதியாக இந்தக் குழு நியமிக்கப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ-50)

# பெற்ற குழந்தையை கொலை செய்த தாய்

கொழும்பு, டிசெ 23
பெற்ற குழந்தையை தாயே கழுத்து நெரித்துக் கொலை செய்த சம்பவம் ஒன்று நடந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னதாகக் காசல் மருத்துவமனையில், சுகவீனம் காரணமாகச் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காகக் குழந்தையின் தாய் சேர்க்கப்பட்டார். குழந்தை பிறந்து சில நாள்களேயான நிலையில், தாயின் அருகிலேயே அந்தக் குழந்தை வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு சிகிச்சை பெற்றுக்கொள்ளும்போதே நேற்றுமுன்தினம் இரவு குறித்த பெண் சிசுவைக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தாய், புதுக்கடை பிரதான நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவானால் உத்தரவிடப்பட்டுள்ளது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ராணுவத்துக்கு பயிற்சி; ஆராய கொழும்பு வந்த சீனக் குழு

கொழும்பு, டிசெ 23

இலங்கை இராணுவத்தினருக்குத் தேவையான பயிற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்காக அண்மையில் சீன இராணுவக் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பயிற்சிப் பிரிவைச் சேர்ந்த, மேஜர் ஜெனரல் லி டெசியூ தலைமையிலான இந்தக் குழுவில், ஐந்து மூத்த கேணல் தர அதிகாரிகளும், ஒரு லெப்டினன்ட் கேணல் தர அதிகாரியும் இடம்பெற்றிருந்தனர்.

இவர்கள் இலங்கையின் உயர் மட்ட இராணுவ அதிகாரிகளையும் கூட்டுப் படைகளின் தளபதி எயர் சீப் மார்ஷல் கோலித குணதிலகவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதோடு, சபுகஸ்கந்த, பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் கல்லூரிக்குச் சென்று இராணுவத்துக்குத் தேவையான பயிற்சிகள் குறித்து ஆராய்ந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் இலங்கையுடன் சீனா கொண்டிருந்த நெருங்கிய உறவானது, ஆட்சி மாற்றத்தின் பின்னர் சரிவை எதிர் கொண்டது. இந்த நிலையில், இலங்கையுடன் கொண்டிருந்த உறவைத் தொடர்ந்தும் பேணும் முயற்சியில் சீனா ஈடுப ட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-சி

# பாடசாலை மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகம்

கொழும்பு, டிசெ. 23

அடுத்த வருடம் தரம் 1, தரம் 7 மற்றும் தரம் 11 ஆகிய வகுப்புக்களுக் குரியதாகப் புதிய பாடத் திட்டங்கள் அறி முகம் செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சமூகத்தின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்தப் புதிய பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய பாடத் திட்டத்தில் மூன்று தரங்களுக்குமான கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள சுமார் 136 பாடப் புத்தகங்களை கல்வி வெளியிட்டுத் திணைக்களம் அச்சிட்டுள்ளது.

புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையிலான பாடப் புத்தகங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி நடை பெறவுள்ள பாடப் புத்தகங்களை வழங்கும் தேசிய நிகழ்வில் மாணவர்களுக்கு விநியோகப்படவுள்ளன. (த-4)

# சிவனொளிபாத மலைக்கு யாத்திரை நாளை ஆரம்பம்

## விசேட போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் தயார்

கொழும்பு, டிசெ 23

இவ்வருடத்தின் சிவனொளிபாதமலைக்கான யாத்திரை பூரணை தினமான நாளை வியாழக்கிழமை காலையில் ஆரம்பமாகி எதிர்வரும் 2016 மே மாதம் 22ஆம் திகதி வெசாக் பூரணை தினத்துடன் முடிவடையுமென ஸ்ரீபாத விகாராதிபதியும், ஊவ வெல்லஸ்ச பல்கலைக்கழகத்தின் வேந்தரும், சப்ரகமுவ மாகாணத்தின் பிரதம சங்க நாயக்கருமான பெங்கமுவே தர்மதின்ன நாயக்க தேரர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆறு மாத காலப்பகுதியில் சிவனொளிபாதமலைக்கு யாத்திரையை மேற்கொள்ளவுள்ள இலட்சக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு யாத்திரிகர்களின் நலனுக்காக போதுமான சுகாதார வசதிகள், குடிதண்ணீர், போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை ஏற் படுத்தித் தரப்பட்டுள்ளதாக நுவரெ லியா அரச அதிபர் திருமதி ஹெலன் ஏ.மீகஸ் முல்ல தெரிவித்துள்ளார்.

இன்று புதன்கிழமை அதிகாலை பெல்மதுளை கல்பொத்தாவல ரஜமஹா விகாரையிலிருந்து புறப்படும் விசேட வாகனப் பேரணி கித்துல்கல, ஹற்றன், நோர்வூட், மஸ்கெலியா ஊடாக அன்று மாலை நல்லதண்ணியைச் சென்றடையும்.

வழக்கம்போலவே இம்முறை யாத்திரைக்கான விசேட பஸ்சேவைகளை ஹற்றனிலிருந்து நல்லதண்ணிவரை நடத்த ஹற்றன் இலங்கை போக்குவரத்துச் சபை ஏற்பாடு செய்துள்ளது எனவும், இதற்கென டிப்போவின் கையிருப்பிலுள்ள ஒரு கோடி ரூபாவை மூலதனமாக்கி குத்தகை அடிப்படையில் பத்து புதிய பஸ்களைக் கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஹற்றன் டிப்போ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும் கொழும்பு, கண்டி, மாத்தளை, மாத்தறை போன்ற தூர இடங்களிலிருந்து ரயில்கள் மூலம் ஹற்றனுக்கு வரும் யாத்திரிகளுக்கான விசேட ரயில் - பஸ் ஒருங்கிணைப்பு சேவையொன்றும் நடத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (த-சி)

ஒளிப் படச் செய்தி





# வருடங்களாகியும் தீராத அவலநிலை



வவுனியா தெற்கிலுப்பைக்குளம் முதலாம் குறுக்குத் தெரு வீதி பாவிக்க முடியாத அளவுக்கு அண்மைய மழையால் சேமடைந்துள்ளது. வவுனியா நகரிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் இந்த வீதியானது, கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது. உரியவர்கள் இதனைக் கவனத்தில் எடுப்பார்களா என அப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (த-ஜ-402)



# ஆங்கிலக் கற்கையைப் பூர்த்தி செய்த இராணுவத்தினருக்குச் சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 23

ஆங்கில மொழிப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த கனிஷ்ட அதிகாரிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை பலாலி பாதுகாப்புக் கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

தமிழ் மொழியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த கனிஷ்ட நிலை அதிகாரிகள் 60 பேர் தெரிவு செய்யப்பட்டு குறித்த அடிப்படை ஆங்கிலப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலப்பகுதியில் ஆங்கிலப் பத்திரிகைகள் வாசித்தல், ஆங்கில மொழி வானொலிச் சேவை மற்றும் தொலைக் காட்சிகள் பார்வையிடுதல் பயிற்சி வழங்கப்பட்டது.



பலாலி பாதுகாப்புக்கட்டளைத்தலைமையகத்தின் கீழ் பணியாற்றும் கனிஷ்ட அதிகாரிகளுக்கான இரண்டாம் மொழியான தமிழ் பாடநெறி அனைவருக்கும் வழங்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. தற்போது கட்டளை அதிகாரி மே[illegible] நந்தன உடவத்[illegible] காட்டலில் பலாலி பாதுகாப்புக் கட்டளைத் தலைமையகப் பிரிவுக்குள் கடமையாற்றும் [illegible] [illegible] ஆங்கில மொழி அடிப்படைக் கற்கைப் பயிற்சி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-107)

# உடும்பு பிடித்தவருக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ 23

காரைநகர் கசூரினா கடற்கரையில் உடும்பு ஒன்றைப் பிடித்து மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைச் சுற்றுலா பொலிஸாரினால் கைதான யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த நபரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல அனுமதியளித்த ஊர்காவற்றுறை நீதிவான் செல்வநாயகம் லெனின்குமார் மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

கசூரினா கடற்கரைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பர்களுடன் குளிக்க வந்த குறித்த நபர் அங்கு பற்றைக்குள் இருந்த உடும்பைப் பிடித்து தன் உடைமையில் வைத்திருந்துள்ளார். இதனை அவதானித்த ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையச் சுற்றுலாப் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்திருந்தனர். அவரை நேற்று முன்தினம் ஊர்காவற்று றை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரைப் பிணையில் செல்ல அனுமதியளித்தார். (த-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டில் நல்லாட்சி மேலெழ சமஷ்டி ஆட்சி முறையே தேவை

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் தலையாய பிரச்சினைகளில் ஒன்றாக ஓங்கி உயர்ந்து நிற்பது அவர்களின் புனர்வாழ்வு.

புனர்வாழ்வுக்குப் போதிய நிதி ஒதுக்கப்பட்டால் மட்டுமே, அவர்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்ய இயலும். அதனூடாகவே அவர்களின் உடல் நலமும் உளநலமும் ஓரளவேனும் மேலோங்கும்.

உளநலம், அபிவிருத்தி அனைத்தினதும் மூலாதாரம் எனலாம். அதனை எந்த வகையிலும் தட்டிக் கழிக்கக் கூடாது என்பது நவீன சித்தாந்தம் என்று கொள்ளத்தக்கது.

அதேவேளை, சமாந்தரமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியது இன்றியமையாதது.

கணவர்களை இழந்த பெண்கள், போர் வேளையில் அங்கவீனமானவர்கள், இடம் பெயர்ந்து அல்லற்படுவோர், உறவுகளையும் உடைமைகளையும் இழந்தோர் என்று மிகப் பல தரப்பினரும் புனர்வாழ்வு வேண்டி நிற்பவர்களே; அதற்காக ஏங்குவோரே.

தமது சொந்த நிலத்தில் வாழ்ந்து, உழைத்து வருவாய் தேடியவர்கள், இப்போது ஆணிவேரோடு புரட்டப்பட்டு, புறந்தள்ளப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு உதவுவதற்கு, புலம் பெயர்ந்த உறவுகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கைகொடுப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

ஆனால், இத்தகைய மனிதநேய உதவிகளுக்குத் தடுப்பணை போடுவதற்குக் காத்திருப்போரும் உள்ளனர் என்ற பாதகநிலை ஊன்றித் தொட்டுக் காட்டப்பட வேண்டியதே.

வடக்கு மாகாணத்தின் நொந்து நொடிந்து போய் வாடும் மக்களின், புனர்வாழ்வு மற்றும் மகளிர் மேம்பாட்டுக்கு நிதி ஒதுக்கீடு எதுவும் வெளிப்படவில்லை.

அந்தோ பரிதாபம் என்ற நிலையைப் போக்குவதற்கு, மாகாண சபையின் வாகனக் கொள்வனவுக்கு ஒதுக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியில் இருந்து ஐம்பத்தொரு மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வடக்கு மாகாண சபைக்கு, முதல்வர் நிதியம் உருவாக்க, உண்டாக்க அங்கீகாரம் வழங்கப்பட்டால்--

புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி, பேரிடர்களின்போது வடக்கு மக்களின் இன்னல் போக்கவும் வாய்ப்பு உண்டாகும்.

மாகாண சபைகள் வெறுமனே உள்ளூராட்சி சபைகளின் தரத்துக்கு ஒத்த நிலையில் இல்லாமல், நாடாளுமன்றுக்கு சமதையான மக்கள் நலன் காக்கும் மன்றங்களாக அமைவதே மிகப்பொருத்தம். அவற்றின் அதிகாரங்கள் சமஷ்டி ஆட்சியைப் பலப்படுத்தும் தூண்களாக்கப்பட வேண்டும். அதுவே இனப்பூசல்களைத் தடுப்பதற்கான, பயன் தரும் கேடயமாகவும் விளங்க வல்லது. மொத்தத்தில் நாட்டில் நல்லாட்சி நிலைபெற வேண்டுமானால், அதற்குச் சமஷ்டி ஆட்சி முறையே மிகப் பொருத்தமானது எனலாம்.

நல்லாட்சி என்ற பெயர் சூட்டுவதால், மக்கள் ஆட்சி மேலெழும் என்று கருதுவது முற்றிலும் அபத்தமானது. நாட்டின் பிரசைகள் அனைவரும் அவர்களுக்குச் சேரவேண்டிய சகல ஜனநாயக உரிமைகளையும் முழு அளவில் அனுபவிக்க வகை செய்யப்படுதலே இன்றைய முதன்மைத் தேவை.

# பொதுமக்கள் கருத்துக்களுக்கு அரசு அளித்துள்ள மதிப்பு வரவு- செலவுத் திட்டத்தில் மாற்றங்களும் சலுகைகளும்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

கடந்த வாரம் புதன் கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரி இல்லாத வாகன அனுமதிச்சிட்டைபற்றிநிதிஅமைச்சர் முன்வைத்த திட்டம் குறித்த பிரச்சினையை, ஊடக மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் கயந்த கருணாரட்ண கிளப்பினர். நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க பதில் அளிக்கையில்வாகன அனுமதிசிட்டைகளுக்குப்பதிலாகஅவர்களின்மாதாந்தக் கொடுப்பனவுப் படிகளை அதிகரித்துக் கொடுப்பது தொடர்பாக கட்சித் தலைவர்களுடன் தாம் ஏற்கனவே ஆலோசனை நடத்தியிருக்கிறார் எனத் தெரிவித்தார். இவைகளுடன் அவர்கள் இப்போது பயன்படுத்தும் கார்களை இந்தத் தவணைக் காலம் முழுவதும் பயன்படுத்திவிட்டு பிறகு அதற்கான விலை குறைப்புடன் சொந்தமாக வாங்கிக் கொள்ளலாம் என்றும் கூறினார். இதற்காக 15 மில்லியன் ரூபா கடன் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கட்சித் தலைவர்களுடன் சபாநாயகர் கருஜெயசூரியவின் தலைமையில் நடந்துள்ள கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்தப் படிகளை 400,000 ரூபாவாக உயர்த்துவ தற்கான ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டிருந்துள்ளது. இப்பொழுது அவர்களுக்கு 55,000 ரூபாவே படியாக வழங்கப்படுகின்றது. அதேசமயம் ஒவ்வொரு அமர்வுக்கும் 500 ரூபா மேலதிகமாக வழங்கப்படுகின்றது. இவைகளுடன் ஒரு செயலாளரை அமர்த்திக் கொள்ளவும், அலுவலக தளபாடங்களுக்காகவும் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன எனவும் நிதி அமைச்சர் அங்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

வாகன இறக்குமதி அனுமதிச் சிட்டைமுறைமையைஒழிப்பதற்கு அது முறைகேடாகப் பயன் படுத்தப்படுவதே காரணம் என்றும் அமைச்சர் கூறியிருந்தார்.

அந்தக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அங்கீகாரத்துடனேயே நடைபெற்றதாக அதில் கலந்து கொண்டிருந்த பலரும் எண்ணியிருந்தனர்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தாம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் படிகள் தொடர்பான விடயங்களை முடிவு செய்திருப்ப [illegible] [illegible] அறிவித்தபோது பிரதமர்ரணில்விக்கிரமசிங்க அதற்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார். தாமும்ஒருகட்சியின் தலைவர்தான் என்று கூறிய பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் படிகளை அதிகரிப்பதையும் அதற்கு மேலாக வாகனக் கொள்வனவுக்காக கடன் வழங்குவதையும் தாம் ஆதரிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இப்படியான ஒரு செயற்பாட்டை மக்கள் விரும்பமாட்டார்கள்.

> "கூட்டத்தின் முடிவுகளின்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் வரிகளற்ற வாகன அனுமதி சிட்டைகளை (பேர்மிட்) பெற்றுக் கொள்வார் கள் என்று தெரிகின்றது. அதாவது இப்போது இருக்கும் நடைமுறையே தொடரும்."

அவர்கள் கோபமுற்று அரச உறுப்பினர்கள் மீது கற்களை வீசினாலும் தாம் ஆச்சரியப்படப் போவதில்லை என்றார் பிரதமர். இந்தப் புதிய திட்டத்தை செயற்படுத்துவது சாத்தியமில்லை. அதற்கான காலம் இதுவல்ல என்றும் தெரிவித்தார்.

அந்த கூட்டத்தின் முடிவுகளின் படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் வரிகளற்ற வாகன அனுமதிச் சிட்டைகளை (பேர்மிட்) பெற்றுக்கொள்வார்கள் என்று தெரிகின்றது. அதாவது இப்போது இருக்கும் நடைமுறையே தொடரும்.

பிரதமரின் கருத்தை ஏற்றுக் கொண்டு பழைய (பேர்மிட்) அனுமதிச் சிட்டை முறையை தாம் தொடர்ந்து செயற்படுத்துவார் என்று நிதி அமைச்சர் பின்னர் தெரிவித்தார். அந்த வகையில் நாடாளுமன்ற உறுப்பி னர்களின் கொடுப்பனவுகளை அதிகரித்துக் கொடுக்கும் யோசனை அப்படியே கிடப்பில் இருக்கும். ஆனால், அவர்களுக்கான வரிகளற்ற வாகன 'பேர்மிட்' விரைவிலேயே வழங்கப்படும் என்று தெரிகின்றது.

### பிரதமருடன் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் சந்திப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள், பிரதி மற்றும் ராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடந்த வியாழக்கிழமை சந்தித்து வரவு–செலவுத் திட்டம் தொடர்பாகத் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். நிதி நிலை அறிக்கையின் உத்தேச முன்மொழிவுகள் தொடர்பாக அவர்கள் கடுமையான எதிர்ப்புகளை முன்வைக்கப் போகிறார்கள் என்பதற்கான முன் எச்சரிக்கையாகவே இந்தச் சந்திப்பு கருதப்பட்டது. அவர்களின் பேச்சாளரான அமைச்சர் டிலான் பெரேரா கூறுகையில்;

ஜனாதிபதி தாங்கள் தெரிவித்த கருத்துக்களை வரவேற்றதுடன், பிரதமருடனான தங்களின் சந்திப்பொன்றுக்கும் ஏற்பாடு செய்தார்–என்றார்.

பின்னர் பிரதமருடன் தாங்கள் நடத்திய சந்திப்புப் பற்றியும் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பிரதமரிடம் பல விடயங்களை நாங்கள் முன்வைத்தோம். எமது கருத்துக்களை பிரதமர் மிகக் கவனமாகக் கேட்டார். அவைகளில் பலவற்றை ஏற்றுக்கொண்டார். பிரதமர் மாற்றம் செய்வதாக ஒப்புக்கொண்ட விடயங்களில் ஊழியர் சேமலாப நிதியையும் ஊழியர் நம்பிக்கை நிதியையும் ஒன்றாக இணைக்கும் யோசனை கைவிடப்படுவதும் அடங்கும்.

இறப்பர், தெங்கு மற்றும் மரக்கறி, பழங்கள் உற்பத்தித் துறைக்கான உரமானியம் தொடரும். வாகனப் புகை வெளியீடு தொடர்பான சோதனைகளுக்கான கட்டணம் 5,000 ரூபாவில் இருந்து 1,500 ரூபாவாகக் குறைக்கப்படும். *(14ஆம் பக்கம் பார்க்க)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லாலங்கடி


# பழைய குருடி கதவைத் திறவடி

காலச் சுழற்சியின் வேகம் பலரையும் பலவற்றையும்மறக்கவைக்கின்றது. அரசியல்வாதிகள் பலருக்கு மக்களின் மறதி என்பது வாய்ப்பாக அமைந்து விடுகின்றது. தாம் எதைச் சொன்னாலும் மக்கள் நம்புவார்கள் என்கின்ற அசாத்திய துணிச்சல், அரசியல்வாதிகளை வாய்கூசாமல் எதையும் பேச வைக்கிறது.

அத்தகையவர்கள்தான் இப்போது தமிழ் மக்கள் பேரவைக்குள் ஒடுங்கிக் கொண்டுள்ளார்கள். அந்த அமைப்பில் இணைந்து கொண்டவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவர்களும் அதன் அதிருப்தியாளர்களுமே. கூட்டமைப்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சி அதிகாரமிடுக்குடன் செயற்படுகின்றது, ஏனைய கட்சிகளுக்கு உரிய அங்கீகாரம் கொடுக்கவில்லை என்று அடிக்கடி குற்றம் சுமத்திக் கொண்டிருந்தவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன். ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு பற்றிய சகல கலந்துரையாடல்களிலும் கட்சித் தலைவர் என்ற ரீதியில் அவரும் பங்கெடுத்திருந்தார்.

சுரேஷ் பிரேமசந்திரன், கூட்டமைப்பின் தலைமை மீது, குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீது பல்வேறு அதிருப்திகளைக் கொண்டிருந்தார். பல சந்தர்ப்பங்களில் அவர் நேரடியாகவே அதனை வெளிக்காட்டியிருந்தார். கூட்டமைப்பின் முடிவுகளை, அதன் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரனே பெரும்பாலான நேரங்களில் எடுக்கிறார்கள் எனவும், சில நேரங்களில் சுமந்திரனே தனித்து எடுக்கிறார் என்றும்கூட குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வரையில், இவை புகைந்து கொண்டிருந்தன. தேர்தலில் சுரேஷ் பிரேமசந்திரன் தோற்றமையும், சுமந்திரன் வெற்றி பெற்றமையும் விடயத்தை பகிரங்க முரண்பாட்டுக்குக் கொண்டு வந்தது. தேர்தலில் கிடைத்த இரு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்று தனக்குத் தரப்பட வேண்டும் என்று சுரேஷ் எதிர்பார்த்தார். அந்தப் பதவியில் தனக்கும் ஒரு கண் இருக்கிறது என்கிற செய்தியை கூட்டமைப்பின் தலைமைக்கு எட்டச் செய்துமிருந்தார். ஆனால் அது கண்டுகொள்ளப்படவில்லை.



இதன் பின்னர், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுள் ஒருவர் என்ற நிலையையும் வைத்துக் கொண்டு, எடுத்ததற்கெல்லாம் கூட்டமைப்பின் தலைமையைக் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினார். சின்னக் கீறல் விழுந்தாலே, அதைப் பிளவாக்கி கூட்டமைப்பை சிதைக்க காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு, சுரேஷ் பிரேமசந்திரனின் நடவடிக்கைகளும் வரப்பிரசாதமாகின.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர்களுள் ஒருவர் சி.க.சிற்றம்பலம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட்டமைப்புக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தில் ஒன்று தனக்குக் கிடைக்கும் என்று நம்பியிருந்தவர். தேர்தலுக்கு முன்னர் தேசியப் பட்டியல் ஆசனத்தின் முதல் பெயராக அவரது பெயர்தான் குறிப்பிடப்பட்டுமிருந்தது. ஆனால் கடைசியில் அவருக்குக் கொடுக்கவில்லை. 2010இலும் அதேதான் நடந்தது. அவருக்குக் கிடைத்திருக்க வேண்டியது என்று கருதப்பட்ட தேசியப் பட்டியல் ஆசனமே எம்.ஏ. சுமந்திரனுக்குஅப்போது வழங்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

சம்பந்தனை விடவும் கட்சியின் மூத்த தலைவர் தானே என்கிறவர் சிற்றம்பலம். ஆனால், அந்த மதிப்பு கட்சியில் தனக்கு வழங்கப்படுவதில்லை என்ற குறை அவருக்கு நீண்டகாலமாகவே உண்டு. தமிழ் நாட்டின் சுப்பிரமணியம் சுவாமி மாதிரி, இங்கே தன்னையும் கட்சிக்காரர்கள் ஒரு ஏமாளியாக்கி வைத்திருக்கிறார்கள் என்கிற கோபமும்அவருக்குஇருக்கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும், கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிரான நிலையெடுத்து அதனைப் பகிரங்கமாகவும் அறிவித்தவர் அவர். பல சந்தர்ப்பங்களில் தனது தலைமையின் முடிவுகளை எதிர்ப்பதையும் விமர்சிப்பதையுமே வழக்கமாகக் கொண்டவர்.

இப்படி தங்களுக்குரிய அங்கீகாரங்களை கூட்டமைப்புத் தரவில்லை என்று உள்ளேயே குமைந்து கொண்டிருந்தவர்களை, தருணம் பார்த்து ஒன்றிணைத்து புதிய கூட்டுக்கான முத்தாய்ப்பு போடப்பட்டது.

இந்தக் கூட்டுக்கான முன்முயற்சி இரகசியமாக மேற்கொள்ளப்பட்டதுடன், கலந்துரையாடலும் இரகசியமாகவே நடைபெற்றது. தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் - இதயசுத்தியுடன் இந்த முயற்சி நடந்திருந்தால், அதில் இரகசியம் பேணப்பட வேண்டியதன் அவசியம் ஏன் என்கின்ற கேள்வி தவிர்க்க முடியாதது.

ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரவை மீது சீறிவரும் விமர்சன அம்புகளைத் தொடர்ந்து, தாங்கள் கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் அல்லர் என்றும், கூட்டமைப்புக்கு குடைச்சல் கொடுக்க உருவாக்கப்பட்டவர்கள் இல்லை என்றும் ஆளுக்காள் அறிக்கை விடத் தொடங்கியிருக்கின்றனர். கூட்டமைப்புக்கு எதிரான அமைப்பு இல்லையென்றால் இதுவும் பத்தோடு பதினொன்றுதான் என்கிற

> “கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வரையில் இவை புகைந்து கொண்டிருந்தன. தேர்தலில் சுரேஷ் பிரேமசந்திரன் தோற்றமையும், சுமந்திரன் வெற்றி பெற்றமையும் விடயத்தை பகிரங்க முரண்பாட்டுக்குக் கொண்டு வந்தது.”

நிலையில் கணிப்புக்கே அப்பாற்றட்டது இந்த அமைப்பு, அப்படிப்பட்ட இந்தப் பேரவைதான் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கப் போகிறது என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார். தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்கள் மத்தியில் வைத்துச் சரியானதா பிழையானதா என்று ஆராய வேண்டும். அதனை விடுத்து, கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் தெரியாமல் ஒன்று அல்லது இரண்டு பேர், தாங்கள் விரும்பியவாறு அர சுடன் பேசுவதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. (15ஆம் பக்கம் பார்க்க)

## எங்கள் வயிறுகள் பற்றி எரிகின்றன!

1.12.2015 உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகத்தில் இளைப்பாறிய அலுவலர் மு.கணபதி, வெற்றிடங்களை நிரப்பவும் எனும் தலைப்பில் முக்கிய விடயம் ஒன்றை வெளிப்படுத்தியிருந்தார்.

இதற்குப் பொருத்தமான பதில், பொருத்தமான அமைச்சிடமிருந்தோ அல்லது பொருத்தமான செயலாளரிடமிருந்தோ உதயன் ஊடாக வெளிப்படுத்தப்படவேயில்லை. அதிகாரிகள், அமைச்சர்கள், மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்கிற அடிப்படையைக்கூட தமிழ் ஆட்சிப் புலம் கொண்டிராதமை கவலையளிக்கிறது. இதற்கிடையில் நாம் சிங்களவர்களைப் பார்த்து எப்படிக் குற்றஞ்சாட்ட முடியும்?

உரிய தரப்பினரின் பதிலுக்காக விழித்திருந்த என்னைப் போன்ற பலர் வேதனையடைந்தனர். ஆட்சி நிர்வாகத்தின் இத்தகைய அசமந்தப் போக்கு நிச்சயம் களையப்பட வேண்டும். அதற்கு ஆட்சியாளர்கள் நேர் சீரானவர்களாக இருப்பதும் அவசியம்.

வடமாகாண பொது நிர்வாக செயலகத்தின் ஆள்சேர்ப்பு திட்டத்துக்கு இணங்கவும், சேவை விதி பிரமாணங்களுக்கு ஏற்பவும் ஆயிரக்கணக்கான ஆளணி வெற்றிடங்கள் வடமாகாணத்தில் பல்வேறு பதவிப் பெயர்களில் நிரப்பப்படாது உள்ளன. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆட்சியைப் பொறுப்பேற்ற வடக்கு மாகாண சபை, கடந்த இரண்டரை ஆண்டு காலங்களில் அதுவும் தமக்கு இசைவான மத்திய ஆட்சி அமைந்து ஒரு வருடம் முழுமையாகக் கடந்த நிலையிலும், இந்த வெற்றிடங்களை நிரப்ப ஏன் துரித நடவடிக்கை எடுக்கவில்லை என்பது புரியவில்லை.

ஒவ்வொரு தமிழ் பேசும் தமிழ் மகனும் வேலை பெறுவதற்காகவும், பதவி உயர்வு பெறுவதற்காகவும் கீழ்மட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரை நாயாய் அலைந்து திரிகின்றான். ஆனால் ஆட்சி அதிகாரம் அதைப் பற்றிக் கண்டுகொள்வதில்லை. ஆட்சியை நடத்துபவர்களோ தாங்கள் மக்களுக்குத்தான் சேவையாற்றுகிறோம் என்று கூறித் திரிகிறார்கள்.

இந்த வேலை வாய்ப்புக்கள் இங்கு நிரப்பப்படாமல் கிடக்க, வடக்கு மாகாணத்தில் வேலை கிடைக்காத இளைஞர்கள் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு வெளிநாடு செல்கின்றார்கள். சிலர் தற்கொலைக்கும் முயற்சிக்கிறார்கள். அரச வேலை கிடைத்துவிடாதா என்று தரம் 8 படித்தவன், ஜிசீ.ஈ சாதாரண தரம், ஜி.சீ.ஈ உயர்தரம், பட்டதாரி, முதுமாணி, முது தத்துவமாணி படித்தவர்கள் வரை பலரும் ஏங்கி ஏங்கியே முதுமையை எட்டிவிடுகிறார்கள்.

மாகாண சபையில் உள்ள வெற்றிடங்கள் ஏன் நிரப்பப்படாது உள்ளன? இதற்கு திறைசேரியின் அனுமதியில்லையா? மீளளிப்பு நிதி வருவதில்லையா? சேவை பிரமாணக் குறிப்பு இல்லையா? அல்லது வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்தால் தமிழனுக்கு வேலை கிடைத்து விடும் என்ற பயமா? அல்லது வேறு என்ன காரணம்? எங்கே இருக்கிறது தடை?

உங்களால் செய்ய முடியவில்லை என்றால், அதையாவது வெளிப்படுத்துங்களேன். அல்லது தடைகள் இருந்தால் கூறுங்கள்.

வடக்கு மாகாண சபை அமைந்ததால், அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்கள் கிடைத்தன. ஓய்வு பெற்ற காலத்திலும் கூளையாக லடசம் ரூபாய்க்கும் மேலும் பணம் கிடைக்கிறது. உறுப்பினர்களுக்கும் ரூபாய் 60,000க்கும் மேலும் கிடைக்கும்போது வேலையில்லாத எங்கள் [illegible] உங்களுக்குப் புரியாது [illegible]. எங்கள் வயிறுகள் பற்றி எரிகின்றனவே!

இரா.ரிஷாந், வேலையற்ற பட்டாதாரி

## ஆசிரியர் தர உயர்வுப் பிரச்சினைக்கு கல்விப் புலம் விடைதருமா?

நீண்ட காலத்தின் பின்னர் வடக்கு மாகாண ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. வடமாகாண சபை, வந்ததன் பின்னர் இவ்வாறான நிகழ்வுகளை ஆசிரியர்களாகிய நாம் முழு மனதுடன் வரவேற்கின்றோம். எனினும் ஒருசில விடயங்கள் முடிவேதும் இல்லாமல் தொடர்கின்றன. ஆசிரியர்களது மனநிலையை பாதிக்கும், அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் கல்விப் புலத்தில் இடம் பெறுவதையிட்டு யாரை நோவது? 15.07.1998 இல் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு வருடப் பயிற்சியின் பின்னர் 15.07.1999இல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

நிரந்தர நியமனம் 3-1 தரத்தில் வழங்கப்பட்டது. பின்னர் வடக்கு மாகாண கல்வி அமைச்சு எமக்கு 15.07.1998 முற்திகதியிட்டு பதவியிலும் உறுதிப்படுத்தப்பட்டோம். தற்போது நீண்ட காலமாக 2-2 தரத்தில் உள்ளோம்.

எமக்கு 1 தர பதவி உயர்வு தரப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அதற்கான கடிதங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

ஆசிரியர்களான எமக்கு 15.07.1998 முதல் முற்திகதியிட்டு பதவி உறுதிப்படுத்தப்பட்டு வகுப்பு 2-2 தர பதவி உயர்வு வழங்கப்பட்டது. எனவே முற்திகதியை அடிப்படையாகக் கொண்டு எமக்கான தரம் 1 பதவி உயர்வை காலம் தாழ்த்தாது வழங்க கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண பணிப்பாளர், வலயக் கல்வி பணிப்பாளர்கள் ஒருங்கிணைந்த வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எமது பதவி உயர்வைத் தொடர்ந்து புறக்கணிப்பது மனிதன் அடிப்படை சிறப்புரிமையை மீறும் செயலாகும். எனவே தயவுடன் உரிய பதவி உயர்வை வழங்க உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அது பற்றிய விவரங்களை உதயன் ஊடாக அறியத் தந்தாலும் மகிழ்ச்சி அடைவோம்.

ப.உ.கண்ணா, வடமராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் மேன்மை

சு.சிவாஜினி

சாமானியர்களின் வாழ்க்கை பொருளாதார நெருக்கடி நிறைந்ததாகவே காணப் படுகின்றது. தேவைகளுக் கேற்ற பணவசதியின்மை காரணமாக கடன் சுமைகள் எம்மை மூடிக் கிடக்கின் றன. வருவாய் எட்டாக இருந்தால் செலவு பத் தாகி விடுவதன் காரணமாகவே கடன் சுமைக்குள் மூழ்கி மூச்சு விடமுடியாமல் தத்தளிக்கின்றோம்.

இதற்குக் காரணம் என்னவாக இருக் கும்? எம்முடைய செலவுக்கேற்ப நாம் உழைக்கத் தயாரில்லை. அதேசமயம் செலவுகளை குறைக்கவும் முடியவில்லை. இந்த இரண்டையும் செய்யாதபோது உண்மையில் கடன் என்ற பிசாசு எம்மை விழுங்கிவிடும்.

இதனை எவ்வாறு தீர்ப்பது? குடும்பப் பெண்கள் இதற்குப் பங்களிப்பு வழங்க லாம். வீட்டிலிருந்தவாறே எமக்குத் தெரிந்த சுயதொழில்கள் மூலமாக நாளாந்தம் சிறு வருமானத்தைத் தேட முடியும். அப்படிச் செய்கின்றபோது எமது வாழ்வில் கொஞ்சம் என்றாலும் பணப் பற்றாக்குறை தீர வாய்ப்பு இருக்கின்றது.

வீட்டுப் பெண்கள் சமைப்பதும், சாப்பிடு வதும், தொலைக்காட்சி பார்ப்பதும் கடமை என்று வாழாமல், சுயதொழிலுக்கு முயற்சிக்க வேண்டும். எமது முன்னோர் கள் அப்படித்தான் உழைத்தார்கள். அவர்கள் வீட்டில் இருந்தே கணிசமான வருவாயைத் தேடிக்கொண்டார்கள். எம க்கு எந்தத் தொழில் தெரியுமோ அதை நேர்மையான முறையில் செய்வதில் என்ன வெட்கம் இருக்க முடியும்?

அடுத்தவரிடம் போய் பிச்சை கேட்பது போல கேட்டு இரந்து வாழ்வதைவிட, எமக் குத் தெரிந்த சுயதொழிலைச் செய்வது எவ்வளவோ மேன்மையானது. அந்தந்தக் காலங்களில் செய்ய வேண்டியவற்றை அந்தந்தக் காலங்களில் செய்து கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். வெறுமை யாக இருந்தால் வாழ்வில் எதுவும் மிஞ் சாது. குறிப்பாக எந்தத் தொழிலும் தெரி யாமல் பெண்கள் இருக்கமாட்டார்கள். அப் படித் தெரியாது போனாலும் பரவாயில்லை. இனி என்றாலும் பழகலாம். அது லாபம் தான். சிலர் நினைப்பார்கள் எனது படிப்புக்கு என்ன வேலை செய்ய இயலும் என்று. சுயதொழிலுக்கு முறைசார் கல்வி அவசியமற்றது. மனம் இருந்தால் மார்க் கம் கிடைக்கும்.

எங்கள் தொழிலைப் பார்த்து அடுத்தவர் என்ன நினைப்பார்கள் என்று தயங் காதீர்கள். அவர்களா எமக்கு சோறு போடப் போகின்றார்கள்? நாங்கள் செய்யும் தொழில் நேர்மையானது எனில் ஒருநாள் எல்லோரும் அதற்குத் தலைகுனிவார்கள். 'இடியப்பம் வித்துத்தான் அந்த மனிசி பிள்ளையளைப் படிப்பிச்சது. இப்ப பிள்ளையள் எல்லாம் டொக்டர் இன்சினி யரா இருக்குதுகள்' என்று ஊரில் சொல் லக் கேட்டதில்லையா நீங்கள்? அப்படித் தான் மெய் வருத்தக் கூலி தந்தே தீரும். பதிலாக, உதாரணமாக 'என்ர தம்பி வசதி யாக இருக்கிறான், நான் கூலி வேலையோ சுயதொழிலோ எப்படிச் செய்வது' என்று எண்ணக்கூாது. உண்மையில் உங்கள் கஷ்டத்தில உதவாத உறவுகளுக்காக நீங் கள் ஏன் வெட்கப்படவேண்டும். நாங்கள் ஒன் றும் கேவலமாக நடந்துகொள்ளவில்லை. தொழில்தானே செய்கின்றோம். அந்த நினைப்பு ஒவ்வொரு பெண்ணின் மனதி லும் எழ வேண்டும்.



> “என்னிடம் பெரு மூலதனம் இல் லாது போனா லும், எதையும் செய்து முடிப்பேன் என்ற தன் னம்பிக்கை இருந்தது. அத்தோடு என்னுடைய கை விரல்கள் தான் எனக்கு மூலதனம். பத்து விரல்களும் பத்துக் கோடிக ளுக்குச் சமன்.”

நான் வன்னியில் இருந்து போர் முடிந்த பின்னர்தான் யாழ்ப்பாணம் வந்தேன். விடுதலைப் போராட்டத்தில் போராளியாக இருந்ததன் காரணமாக எனது குடும் பத்தைப் பிரிந்து புனர்வாழ்வு நிலையம் செல்லும் நிலை ஏற்பட்டது. எனது கணவரும் பிள்ளைகளும் எனது தாய் தந்தையருடன்தான் இருந்தார்கள். புனர்வாழ்வு பெற்று பல கனவுகளுடன் வீடு வந்த எனக்குக் காத்திருந்தவை யாவும் கடும் துயரங்களே! தாய் இல்லாது இருக்கின்ற நிலையில் குடும்பம் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லத் தேவை யில்லை.

எமக்கென்று வீடு இல்லை. தொழில் இல்லை. பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. கணவரும் நோயாளியாக இருந்தார். உண்மையில் புனர்வாழ்வு முடித்து வீடு வரும்போது நான் நினைத்தேன் இனி என்றாலும் நல்ல நித்திரை கொள்ளலாம் என்று. ஆனால் நிலைமை அதற்கு இடமளிக்க வேயில்லை.

புனர்வாழ்வில் இருந்த நிம்மதி கூட வீட்டில் இல்லை. சமூகத்தின் கேள்விக்குறியான பார்வைகள், தொழில் தேடிப்போகும் இடங்களில் எல்லாம் ஏமாற்றம். வெளி நாட்டு உறவுகளிடம் கேட்டால் இன்று, நாளை காசு தாறம் என்பார்கள். ஆனால் வடிவேலு சொன்னமாதிரி, வரும்; ஆனால் வராது.

இந்த நிலையில் நான் எடுத்த முடிவு. பாடசாலை மாணவர்களுக்கான காலை உணவு செய்தல். காலையில் மூன்று மணிக் கெல்லாம் எழும்பி அப்பம், தோசை என்று எனக்குத் தெரிந்த உணவு வகைகளைச் செய்வேன். அதை எனது தந்தையாரின் கடையில் கொடுத்து விற்பேன். அதில் எனக்கு நல்ல வருவாய் கிடைத்தது. உண்மையில் ஒரு சோப்பெக்கல் வாங்கவே கையில் காசு இல்லாமல் இருந்த எனக்கு ஒரு நாளைக்கு 500, 600 ரூபா இன்று வருகிறது என்றால் மகிழ்ச்சி எப்படி இருக் கும். அத்தோடுமட்டும் நான் நிற்கவில்லை. எனக்கு பன்ன வேலையும் தெரியும். அதையும் செய்வேன். இப்பவும் எனது சுயதொழிலைக் கைவிடவில்லை.

அப்பம், தோசை சுட்டு விற்று ஒரு கடை சொந்தமாகக் கட்டியிருக்கிறேன். அந்தக் கடையை இரண்டாகப் பிரித்து கண வருக்கு பலசரக்குக் கடை, எனக்கு சாப்பாட்டுக் கடை. இப்ப றோள்ஸ், வடை என்றெல்லாம் செய்கிறேன். சாப்பாடும் ஓடர் எடுத்துசெய்வேன். அடுப்பில் அரிசியை போட்டுவிட்டு சும்மா இருக்க மாட்டேன். நீத்துப்பெட்டி இழைப்பேன். ஒரு நாளைக்கு இரண்டு மூன்று என்று செய்வேன். திருகணி, தொப்பி என்று செய்து கிடைக்கும் நேரங்களை வீணாக்காமல் காசாக்க வேண்டும் என்பதுதான் எனது திட்டம். மாடு, ஆடு, கோழி வளர்ப்பு என்று கணவரும் நானும் சேர்ந்து பாடுபடுகி றோம். ஒரு காலத்தில் நானும் வசதி யாகத்தான் இருந்தேன். அப்போது என் னிடத்தில் வந்து ஆறிய உறவுகள் எனக்கு வறுமை வந்தபோது என்னைப் புறக்கணித்தனர். அவர்கள் நினைக் கலாம் தங்களிடம் பணம் இருக்கிறது, இவள் துன்பப்பட்டவள் என்று. உண் மையில் நான் அது தொடர்பில் எந்தக் கலக்கமோ, வெட்கமோ படவில்லை. என்னிடம் பெரு மூலதனம் இல்லாது போனாலும், எதையும் செய்து முடிப்பேன் என்ற தன்னம்பிக்கை இருந்தது. அத்தோடு என்னுடைய கைவிரல்கள்தான் எனக்கு மூலதனம். பத்து விரல்களும் பத்துக் கோடிக ளுக்குச் சமன்.

நிச்சயமாக ஒரு நாளைக்கு உழைப்பால் உயர்ந்த பெண் கோடீஸ்வரியாக வரு வேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கின்றது.

வாழ்க்கையில் நான் என்னைத்தவிர எவரையும் நம்பவில்லை. முயற்சி செய்து பெரிய ஆளாக வரவேண்டும் என்பது எனது இலட்சியம்.

கடும் பசியோடு இருக்கும்போது சோறு போட மனம் இல்லாத உறவுகள், வசதி வாய்ப்புக்கள் வரும்போது எப்படியம்மா இருக்கிறாய் என்று கேட்கிறார்கள். இதுதான் உலகம்.

சகோதரிகளே! நீங்களும் முயன்று பாருங்கள். முடியாது என்று ஒன்றும் இல்லை. கிடைக்கிற நேரங்களைப் பொன்னாக்க முயலுங்கள். சும்மா தேவையில்லாமல் பொழுதைக் கழிக் காமல் பயனுள்ளதாக்குங்கள். அப் போதுதான் உங்கள் வாழ்வு மலரும்.

நாம் பிறக்கும்போது எதனையும் கொண்டு வருவதில்லை. பிறந்த பின்னர்தான் எல்லாவற்றையும் சம்பாதி த்தோம். எனவே சம்பாதிக்க முடியும் என்று நம்புங்கள். எதை வேண்டுமா னாலும் சம்பாதிக்க முடியும்.

இன்று எங்களைவிட கால் கையை இழந்து கடும் நோயாளிகளாக இருப் பவர்கள் எப்படித் தன்னம்பிக்கையோடு உழைக்கிறார்கள் என்று பாருங்கள். அவர்களிடத்தில் கற்றுக் கொள்ள வேண்டியவை நிறையவே இருக் கின்றன.

# பொதுமக்கள் கருத்துக்களுக்கு அரசு அளித்துள்ள மதிப்பு
# வரவு- செலவுத் திட்டத்தில் மாற்றங்களும் சலுகைகளும்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அரசுத்துறை ஊழியர்கள் ஓய்வுபெறும்போது வரி இல் லா 'பேர்மிட்' டுக்கள் வழங்கப்படுவது நிலை நாட்டப்படும். அடுத்த ஆண்டு ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு இரண்டாயிரம் ரூபா அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் சேர்க்கப்படும். அரசுத் துறை வங்கிகளினால் தொடர்ந்து லீசிங் வழங்கப்படும்.

இவையெல்லாமும்கூட அந்தச் சந்திப்பில் இனம் காணப்பட்ட விடயங்கள் என்று டிலான் குறிப்பிட்டார்.

வரவு-செலவுத் திட்டத்துக்கான இந்தப் புதிய மாற் றங்களால் செவினங்கள் பெருமளவில் அதிகரிக்கும் என்றும், அது குறித்த விரிவான விவரங்கள் தயாரிக்கப் பட்டு வருவதாகவும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமருடனான இணக்கமான சந்திப்பின் பெறுபேறுகள் தொடர்பாக அமைச்சர் டிலான் பெரேரா கூறுகையில், ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்பட முடியும் என்பதை இது காட்டுகின்றது.

இதே ஒத்துழைப்பு புதிய அரசமைப்பு, தேர்தல் சீர்தி ருத்தம் மற்றும் மீள்குடியேற்றம் போன்ற தேசிய பிரச்சினைகளின் போதும் நீடிக்கும்-என்றார்.

அரசால் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை.

இந்த மாற்றங்களைக் கொண்டு வர ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தொழிற்சங்கங்களும் காரணமாக இருந்துள்ளன. விரைவில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது இவை பிரதி பலிப்பைக் காட்டும்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு பொதுமக்கள் கருத்துக்கு பதவியிலிருக்கும் அரசொன்று சாதகமாக செவிசாய்த்து பல மாற்றங்களைச் செய்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுரந்து ஓயாத சுடுகண்ணீர்க் கிணறுகள்!

ஸூடோ ஸ்வாமி

காதலனைப் பிரிந்தவளின் மனம் போல ஒன்று,
கவிபாடிப் பரிசு பெறான் மனம் போல ஒன்று,
தீது பழி கேட்டவன்தன் மனம் போல ஒன்று,
செய்த பிழைக் கலங்குபவன் மனம் போல ஒன்று,
நீதி பெறா வேளைதுயர மனம் போல ஒன்று,
நிறைபழித்த கற்புடையாள் மனம் போல ஒன்று,
காது மழுக் காறுடையான் மனம் போல ஒன்று,
கனலேறு மெழு நீர்கள் உண்டு கிண்ணியாவில்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கன்னியாய் பிரதேசத்தின் வெந்நீரூற்றுக்கள் பற்றி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய பாடல் வரிகளே மேலே நீங்கள் கண்டது.

அங்கு உள்ள ஏழு கிணறுகளின் உள்ள நீரின் வெப்ப நிலையை அல்லது சூட்டின் அளவை வெப்பமானி கொண்டு அளவிடாமல், தெரிந்த விடயங்களை வைத்துக் கொண்டு விளங்கப்படுத்த கவிஞர் எடுத்துக் கொண்ட உவமானங்களே மேற்சொன்ன ஒவ்வொரு வரியிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. நம்மவர்களால்சுடுதண்ணீர்க் கிணறு என்றழைக்கப்படும் வெந்நீரூற்றுக்கள் கிண்ணியாவில் அருகருகே அமைந்து காணப்பட்டாலும், அவற்றின் வெப்பநிலையில் கணிசமான அளவுமாறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் எல்லாம் சூடானவையே.

துரதிர்ஷ்டவசமாக அத்தகைய சிலசில சென்றிகிரேட் அளவிலான வேறுபாட்டைக் காண்பித்த அதேவேளை, எல்லாமே சூடான தண்ணீரைச் சுரந்த கிணறுகள் பலவற்றை கடந்த 11ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் யாழ்ப்பாணக் குடாநாடெங்கிலும் காணமுடிந்தது. அவை ஒன்றும் புதிதாக இனங்காணப்பட்ட கிணறுகள் அல்ல. ஏற்கெனவே பலமுறை சூடான நீரைச் சுரந்த கிணறுகள்தான். அதுவும் சுரந்து களைத்த கிணறுகள். ஒரே காரணத்துக்காக மீண்டும் மீண்டும் சுரந்து களைத்த கிணறுகள் அவை!

அந்தச் சூடான தண்ணீரில் எந்த விதமான கழிவு எண்ணெய்க் கலப்படமோ, வேறெந்த தீங்கு பயக்கும் வேதிப்பொருளின் கலப்போ இருந்திருக்கவில்லை. இருந்தது எல்லாமே, காணாமற் போனோர் பற்றிய கவலை! கவலை! கவலை மட்டுமே!!!

சுடுதண்ணீர்க் கிணறுகள் என்று இங்கு உவமானம் காட்டப் பட்டவை வேறொன்றுமல்ல. காணாமற் போனோர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சாட்சியமளிப் பதற்காக காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் வந்து சாட்சியமளித்தவர்களின் கண்ணீர் சுரப்பிகளே!



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்டு, காலம் காலமாகக் காணாமற் போனோர் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவினர் நடத்தி வரும் பொதுமக்கள் அமர்வின் ஒரு பகுதியாக, அண் மை யில் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருந்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர் பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் இவர்கள் சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது இது இரண்டாவது முறை. கடந்த ஆண்டு மாசி மாதத்தில் இவர்கள் தமது முதல் அமர்வை நடத்தியிருந்தார்கள். முன்னர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவில் அங்கம் வகித்த சில உறுப்பினர்கள் உள்ளடங் கலாக அமைக்கப்பட்ட இந்த ஆணைக் குழு, முறைப்பாடுகளை ஏற்றுக் கொண்டபின் தற்போது கட்டம் கட்டமாக அந்த முறைப்பாடுகள் தொடர்பான சாட்சியங்களைப் பதிவு செய்து வருகின்றது. ஏற்கெனவே வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பொதுமக்கள் அமர்வுகளை இந்த ஆணைக்குழு நடத்தியிருந்தது.

### படையினரிடமிருந்தும் முறைப்பாடுகள்

ஆணைக்குழு இயங்கத் தொடங்கியது முதல் கடந்த ஐப்பசி மாதம் வரையான காலப்பகுதி வரை 18,000இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை பொதுமக் களிடமிருந்து பெற்றுள் ளது. ஆணைக் குழுவுக்கு, காணாமற் போன படையினர் தொடர்பிலும் முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என அறிவிக்கப்படுகி றது. கிட்டத்தட்ட 5,000 வரையிலான முறைப்பாடுகள் படையின ரின் உறவினர் க ளால் பதியப்பட்டுள்ளன. ஆனால், வடக்கிலும் கிழக்கிலும் கிடைக் கப்பெற்ற பெருமளவிலான முறைப்பாடு கள் படையினரை நோக்கி சுட்டுவிரல் நீட்டும் தன்மையையே கொண்டிருக்கின்றன.

### சர்ச்சைக்குள் ளாகும் சான்றிதழ் விவகாரம்

வாய்மூல ஒப்பு வித்தல்களின் பிரகாரம், காணாமல்ஆக்கப்பட்ட தமது உறவுகள் இன்னமும் எங்கோ உயிருடன் வாழ்கின்றார்கள். அவர்களைத் தம்முடன் ஒன்று சேர்க்குமாறு கோரியே பகிஷ்கரிப்புகளுக்கு மத்தியிலும் பலர் சாட்சியமளிக்க முன்வந்திருந்தனர். சில நூறு புதிய முறைப்பாடுகளும் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்றிருந்தன. எனினும் ஆணைக்குழு வின் விசாரணைகளின் போது, இறப்புச் சான்றிதழைப் பரிசளிப்பது பற்றியதான யோசனைகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு இருக்கும் நம்பிக்கையையும், ஆணைக்குழு வினர் கையாளப் போகும் பொறிமுறை மீதான எதிர்பார்ப்பைத் தகர்க்கும் விதத் திலும், இறப்புச் சான்றிதழ் பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் விசாரணைகள் மற்றும் பதிலளிப்புகள் இருந்ததாகவும் விசனம் வெளியிடப்பட்டிருக்கிறது.

### புறக்கணிப்பு

விசாரணைகளை முன்னெடுப்பதற்குப் போதுமான தராதரத்தை இந்த ஆணைக்குழு கொண்டுள்ளதா எனச் சந்தேகம் எழுப்பப்பட்ட நிலையில், சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைக்குப் பதிலாக இத்தகைய பகிரங்க வாய்மூல சாட்சியங்கள் மூலம் சாட்சியாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக்கூடிய நிலையும் காணப்படுகிறது. இது பலரிடமும் ஆணைக் குழுவைப் புறக்கணிக்கும் மனநிலையைத் தோற்றுவித்திருந்தது. கட்டம் கட்டமாகக் கால நீடிப்பைப் பெற்று இயங்கி வரும் இந்த ஆணைக் குழு, கண்ணீர் துடைக்கும் பொறி முறை யைக் கொண்டுள்ளதா, கண்துடைக்கும் பொறிமுறையைக் கொண்டிருக்கிறதா என்பதை அறிவதற்கு இன்னும் சில காலம் காத்திருக்கவேண்டி இருக்கிறது.

# பழைய குருடி கதவைத் திறவடி

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்களின் தலைவிதி ஓரிருவரின் கைகளில் இல்லை. இதனை சம்பந்தன் சரியாகக் கையாண்டிருந்தால் தமிழ் மக்கள் பேரவை உருவாக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார் சுரேஷ். தீர்வுத் திட்டமானது, பொதுமக்கள், புத்திசாலிகள் மற்றும் வல்லுநர்களின் கருத்துக்களுக்கமைய உருவாக்கப்பட்டு முன்வைக்கப்படும் என்றும் கூறுகிறார்.

மக்கள் தமது பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்த ஓரிருவர் அரசுடன் பேசுவதையே ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று சுரேஷ் கூறுகையில், மக்களால் தெரிந்தெடுக்கப்படாத (வலிந்திழுக்கப்பட்ட முதலமைச்சரைத் தவிர்த்து) தமது தேவைகளுக்காக ஒன்றிணைந்த இரகசியமாகச் செயற்படும் ஒரு 29 பேர் முன்வைக்கப்போகும் தீர்வுத் திட்டத்தை மட்டும் மக்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள் என்று சுரேஷ் எதிர்பார்க்கிறார்? இவர்கள் எந்த வகையில் மக்களின் விருப்பத்தை பிரதிபலித்துவிடப் போகிறார்கள்?

இதே சுரேஷ் பிரேமசந்திரன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, அதுவும் கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கையில் தமிழ் மக்களிடத்தில் ஒரு வேண்டுகோளை முன்வைத்திருந்தார். 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி, நீர்வேலியிலுள்ள தனது அலுவலகத்தில் வைத்து நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் அதனை முன்வைத்தார். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு பொது அமைப்புக்கள், பொதுமக்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களிடமிருந்து கருத்துக்கள் கோரப்படுகின்றன என்பதே அந்தச் சந்திப்பில் அவரது அறிவிப்பாக இருந்தது. தமது நீர்வேலி அலுவலகத்திற்கோ அல்லது மார்ட்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்திற்கோ கருத்துக்களைத் தபாலில் அனுப்பலாம் என்றும் அல்லது மின்னஞ்சல் ஊடாகவும் அனுப்பலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

அவரது அந்த அழைப்புக்கு கிடைத்த பயன் என்ன என்பது பற்றி அவர் இதுவரையில் எதுவுமே தெரிவிக்கவில்லை. இப்போதோ, தமிழ் மக்கள் பேரவை தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கப் போவதாகக் கூறுகிறார். இது என்ன விளையாட்டு?

மக்களின் [illegible] அரசியல் வாதிகள் [illegible] முடியுமா? 2014ஆம் ஆண்டு தான் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் சுரேஷ் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார். 2011ஆம் ஆண்டு மகிந்த அரசின் பிரதிநிதிகளுக்கும் – கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சின் போது தீர்வுத் திட்டம் ஒன்று கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டது எனவும், அதில் தமது கருத்துக்களையும் உள்வாங்கியிருக்கலாம் என்று புத்திஜீவிகள் கேட்டுக் கொண்டமையினாலேயே புதிய தீர்வுத் திட்டத்துக்கான யோசனைகள் கோரப்படுகின்றன என்றும் தெரிவித்திருந்தார்.

அவரது கோரிக்கைகளை ஏற்க அப்போது புத்திசாலிகளும் வல்லுநர்களும் மறுத்துவிட்டார்களா அல்லது அவர்கள் முன்வைத்த யோசனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்தனவா என்பதையெல்லாம் சுரேஷ் வெளிப்படுத்தவில்லை. ஆனால் மீண்டும் அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிப்பதற்காக தமிழ் மக்கள் பேரவையை ஆரம்பித்திருப்பதாகக் கூறுகிறார். ஆக, அரசியல் தீர்வுத்திட்டம் தயாரிக்கின்றோம் என்ற லேபிளை மட்டும் பயன்படுத்தி தங்கள் நலன்களை இவர்கள் மீண்டும் மீண்டும் நிறைவேற்றிக்கொள்ள முற்படுகிறார்களே தவிர, மக்கள் நலனில் இவர்களுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீ விபத்தில் மியூசியம் நாசம்

பிரேசிலின் முக்கிய நகரமான ஸா போலோவில் உள்ள அருங்காட்சியகத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. 19ஆம் நூற்றாண்டுக்கான தொடருந்து நிலையம் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டிருந்தது. இங்கு போத்துக்கேய மொழி சார்பான அரிய ஆவணங்கள் பல இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை தீக்கிரையாகியுள்ளன. அருங்காட்சியகத்தின் கூரை முற்றாக எரிந்தது.
தீயை அணைக்க வீரர்கள் போராடிக் கொண்டிருந்த சமயத்தில் திடீர் வெடிப்பு ஏற்பட்டு வீரர் ஒருவர் உயிரிழந்தார்.



ஸ்ரேன் ஒப் லைட் எனப் பெயர் கொண்ட இந்தக் கட்டடம், 1901 ஆம் ஆண்டு கோப்பி ஏற்றுமதிக்காக பிரித் தானியரால் கட்டப்பட்டது. நகரின் புதிய தொடருந்து நிலையம் எரிந்த கட்டடத்திற்கு அருகில் இருந்தமையால், பாதுகாப்புக் கருதி மூடப்பட்டுள்ளது. (உ-ரி4)

## கொடுத்து வைத்த நாய்

இங்கிலாந்தில் வசிக்கும் எம்மா பட்டாரஸ்ஸி, தன் செல்ல நாய் பிரின்ஸின் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்கு 12 லட்சம் ரூபாய்க்குப் பொருள்கள் வாங்கியிருக்கிறார்.
பட்டாடைகள், நத்தார் தாத்தா ஆடை, விலையுயர்ந்த கற்களால் செய்யப்பட்ட மாலை என்று ஏராளமான பொருள்கள் இதில் அடங்கும் பிரிட்டனில் ஒரு சராசரி மனிதனின் கிறிஸ்மஸ் செலவுகள் ரூபா 8 ஆயிரத்துக்குள் முடியும். 24 வயது எம்மா, இவனை நாய் என்று பார்த்தால் அநியாயமாகத் தோன்றலாம். குடும்பத்தில் ஒருவனாகப் பார்த்தால் நியாயமானது - என்கிறார்.

# 2ஆம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பாவில் பெரும் அகதிகள் அலை

## 10 லட்சத்தைத் தாண்டியது எண்ணிக்கை

இந்த வருடத்தில் ஐரோப்பாவுக்குள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்தைத் - ஒரு மில்லியனைத் - தாண்டியுள்ளது என்று புலம்பெயரிகளுக்கான சர்வ தேச அமைப்பு (ஐஓஎம்) அறி வித்துள்ளது. இரண்டாம் உல கப் போருக்குப் பின்னர் இடம் பெற்ற மிகப்பெரும் அகதிகள் அலை என்று இது வர்ணிக்கப் படுகிறது.
21ஆம் திகதியுடன் முடிந்த நாள் வரையில் ஐரோப்பாவுக்குள் 10 லட்சத்து 5 ஆயிரத்து 504 பேர் அகதிகளாக நுழைந்துள்ளனர் என்கிறது அந்த அமைப்பு. அவர்களில் பெரும்பாலானவர்கள் - 8 லட்சத்து 16 ஆயிரத்து 752 பேர் - கிறீஸ் நாட்டுக் கடல் வழியாகவே நுழைந்துள்ளனர் என்றும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.
2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 4 மடங்கு அகதிகள் ஐரோப்பாவுக்குள் நுழைந்துள்ளனர். சிரிய உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்தவர்களின் அதிகரிப்பே இதற்கான மூல காரணம் என்று தெரிவிக்



கப்படுகிறது. ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் எரித்திரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் அகதிகளா ஐரோப்பாவுக்குள் வந்துள்ளனர்.
என்றாலும் மத்திய கிழக்கு நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஐரோப்பாவிற்குள் நுழைந்த அகதிகளின் எண்ணிக்கை குறைவானதுதான் என்கிறது புலம்பெயரிகளுக்கான சர்வதேச அமைப்பு. துருக்கியில் மட்டும் 22 லட்சம் சிரிய அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர் என்று அது சுட்டிக்காட்டுகின்றது. லெபனானில் 11 லட்சம் சிரிய அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். இது அந்த நாட்டின் மக்கள் எண்ணிக்கையில் ஐந்திலொரு பகுதியாகும். ஜோர்தானில் 6 லட்சத்து 33 ஆயிரம் பேர் தம்மை அகதிகளாகப் பதிவு செய்துள்ளனர். இந்த நாடுகளில் அகதிகளுக்கு வேலை செய்வதற்கான உரிமை உள்ளிட்ட பல உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதே அவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குத் தொடர்ந்து படையெடுப்பதற்கான காரணம் என்று மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
இதற்கிடையில், ஐரோப்பாவில் குளிர் காலம் ஆரம்பித்துள்ளதால் அதனை எதிர்கொள்வதற்கான ஆயத்தம் ஏதுமில்லாத அகதிகள் பெரும் இடர்களை எதிர்கொள்ளப் போகிறார்கள் என்று எதிர்வு கூறப்படுகின்றது. அடுத்த பெரும்பிரச்சினையாக இது உருவெடுக்கும் என்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

# சோவியத்தை மீண்டும் உருவாக்கமாட்டோம்

## புடின் தெளிவாக அறிவிப்பு

சோவியத் ஒன்றியத்தை மீண்டும் கட்டமைக்க முயற்சிக்கவில்லை. ஆனால், பிரச்சினை என்னவெனில் அதை எவரும் நம்பத் தயாராக இல்லை என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.
ரஷ்ய தொலைக் காட்சியில் உலக ஒழுங்கு என்ற ஆவண ஒளிபரப்பில் இதுதொடர்பாக புடின் தெரிவித்ததாவது:




உக்ரைன் உள்ளிட்ட பல பகுதிகள் முந்தைய சோவியத் ஒன்றியத்துக்கு உட்பட்டவை. மேற்கத்திய நாடுகள் உக்ரைனின் நலனுக்காகச் செயற்படவில்லை என்பதை உறுதியாகச் சொல்வேன். சோவியத் ஒன்றியம் மீண்டும் உருவாகிவிடக்கூடாது என்பதற்காக அவர்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். எவரும் எங்களை நம்பத் தயாராக இல்லை. நாங்கள் மீண்டும் சோவியத் ஒன்றியத்தைக் கட்டமைக்க முயற்சி செய்யவில்லை என்பதை எவரும் நம்பத் தயாராக இல்லை.
வடஅமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளில் மேற்கு நாடுகள் தலையிடுகின்றன. வேறு கலாச்சாரம், மரபுகளைக் கொண்ட மக்கள் மீது உங்களின் ஜனநாயக முறையைத் திணிக்கக்கூடாது. மேற்கத்திய மக்கள் தாங்கள் தவறே செய்யாதவர்கள் என நினைக்கிறார்கள். ஆனால், செய் தவற்றுக்குப் பொறுப்பேற்க வேண்டிய தருணம் வரும்போது அவர்கள் காணாமற் போய்விடுவர் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ)



கம்போடியா கிராமங்களில் மருத்துவம் குறித்து சரியான விழிப்புணர்வு இல்லை. சேலைன் போத்தலுடன் சர்வசாதாரணமாக மக்கள் வலம் வருவதைக் காணமுடியும். காய்ச்சல் வந்த மகனின் கையில் சேலைன் ஏறிக்கொண்டிருக்கிறது. சேலைன் போத்தலைப் பிடித்தபடி அம்மாவும் பையனும் சாலையில் நடந்து செல்கிறார்கள். பைக்கில் பின்னால் உட்கார்ந்திருப்பவர் கையில் சேலைன் ஏறிக்கொண்டிருக்கிறது. சிறிய நோய் என்றாலும் ஓர் ஊசியும் ஒரு சேலைன் போத்தலும் ஏற்ற வேண்டியது அவசியம் என்கிறார்கள் மக்கள்.

# கிலா
# மீண்

அடுத்த அமெரிக்க
தேர்தலில் குடியரசு
பில் வேட்பாளராகப்
வார் என எதிர்பார்
டொனல்ட் ட்ரம் மீ
சர்ச்சையில் மாட்
முன்னாள் அதிபர் கி
மனைவியும் கடந்த
ஜனநாயகக் கட்சி
வேட்பாளருக்கான
தோல்விய டைந்த
கிலாரி கிளிங் ர
ட்ரம் கூறிய கரு
சையை ஏற்படுத்தி
கடந்த தேர்தலின்
நாயகக் கட்சியை
பரக் ஒபாமாவா
தைய அதிபர் கிளிங்
டுத் தாக்கப்பட்டா
இரட்டை அர்த்தம்
கூடிய வகையில்



னாவின் ஜ...
மீட்கப்பட்டு வ
காரிகள் அஞ்சுகி
அஞ்சப்படுகிறது
உயிருடன் மீட்க
இந்த வருடம் சீ
எனத் தெரிவிக்
ரத்துக்கு சேறும்
இந்த நிலச்சரிவு
சரிந்தது ஆகும் எ
மண்மேடு உரு
பட்ட கட்டடக்
தன்மை இன்றி
வளங்களின் அ
தொடர்ச்சியாகப்
தது போன்றிருக
மனித நடத்தைத்
வித்தார். நிலச்ச
தால் வெடிவிப
னங்களின் அளவு
ஆயிரக்கணக்கா
வருகின்றன.

# கிறிஸ்மஸ்
# 5 ஆண்டு

புருணேயில் சட்ட
டங்களில் ஈடுபட்டா
டனை விதிக்கப்படு
தான் அறிவித்துள்
எண்ணெய் வளம்
ஆண்டு கிறிஸ்மஸ்
தது. பகிரங்கமாக
தப்பட்டால் நாட்டில்
மாறிவிடக்கூடும் எ
முஸ்லிம்கள் அல்
டங்களில் ஈடுபட
களில் மட்டுமே அ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# லாரி தொடர்பான மலின கருத்தால் ண்டும் சர்ச்சையில் சிக்கினார் ட்ரம்

அமெரிக்க ஜனாதிபதித் ல் குடியரசுக் கட்சி சார் பாளராகப் போட்டியிடு ன எதிர்பார்க்கப்படும் ட் ட்ரம் மீண்டும் ஒரு யில் மாட்டியுள்ளார். ள்அதிபர் கிளிங்ரனின் யும் கடந்த தேர்தலில் பகக் கட்சியின் அதிபர் ருக் கான போட்டியில் திய டைந்தவருமான கிளிங் ரனைப் பற்றி றிய கருத்தே சர்ச் ஏற்படுத்தியுள்ளன. தேர்தலின்போது, ஜன கட்சியைச் சேர்ந்த பாமாவால் (தற்போ திபர்) கிளிங்ரன் – போட் க்கப்பட்டார் – என்று அர்த்தம் தொனிக்கக் வகையில் பரப்புரை ஒன்றில் எள்ளி நகையாடியுள் ளார் ட்ரம்.

ட்ரம் இதற்கு முன்னரும் பெரும் சர்ச்சைக்குள் சிக்கிக் கொண்ட வர். அமெரிக்காவிற்குள் முஸ் லிம்கள் நுழைவது முற்றாகத் தடைசெய்யப்படவேண்டும் என்று அவர் தெரிவித்திருந் தார். இதற்கு பல தரப்புகளிடம் இருந்தும் கடும் கண்டனம் தெரி விக்கப்பட்டிருந்தது.

அடுத்த தேர்தலில் ஜனநாய கக் கட்சி சார்பில் அதிபர் வேட் பாளராகப் போட்டியிட உள்ள கிலாரி கிளிங்ரனும் அதனைக் கண்டித்திருந்தார். – ட்ரம் இஸ் லாமிய அரசு ஆயுததாரிகளின் சிறந்த ஆட்சேர்ப்பாளர் – என்று கிலாரி விமர்சித்திருந்தார்.

முஸ்லிம்களுக்கு எதிரான ட்ரம் பின் கருத்துப் பதிவு செய்யப் பட்ட வீடியோக்களைக் காட்டிக் காட்டியே இஸ்லாமிய அரசு அமைப்பினர் புதிய ஜிகாதி களைப் பிடித்து விடுவார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டி யிருந்தார்.



இதன் பின்னரே ட்ரம் பின் கிலாரி பற்றிய எள் ளி நகையாடல் வெளி வந்தது. 'ஒபாமாவுடனான போட் டியில் அவர் (கிலாரி) வெற்றி பெற்றிருக்க வேண்டும். அவர்களில் யார் மோச மாக இருந் திருப்பார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்தான் வெல்வார் போன்றும் இருந் தது. ஆனால் ஒபாமாவால் 'போட்டுத்தாக்கப்பட்டதில்' தோற் றுப் போனார்" என்று தெரிவித் தார் ட்ரம். ஒபாமாவால் போட்டுத் தாக்கப்பட்டார் என்பதைக் குறிப்பிட அவர் பயன்படுத்திய ஆங்கிலச் சொல் மலினமான பாலியல் எள்ளல் தொனிப்பது. இப்போது இது புதிய சர்ச்சையை அமெரிக்காவில் உருவாக்கி யுள்ளது. ஆனால் இதற்கெல் லாம் அசருபவராக ட்ரம் இல்லை. தன்னைப் போன்ற துணிச் சலான அதிபர்களே இப்போது அமெரிக்காவுக்குத் தேவை என்று அவர் பரப்புரை செய்து வருகிறார். "எனது கருத்துக் களை துணிச்சலுடனும் உறு தியுடனும் வெளிப்படுத்துகின் றேன். அமெரிக்காவுக்குப் பலம் வாய்ந்த, துணிச்சலான, சாமர்த் தியம் மிக்க அதிபர்தான் தேவை" என்று தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார் அவர். தனது வீடியோ தொடர்பிலான கிலாரியின் குற்றச்சாட்டும் ஆதாரம் ஏதுமற்றது என்று கண்டித்தார் அவர். (உ)

## இஸ்ரேல் குற்றச்சாட்டு

லெபனான் பகுதியிலிருந்து இஸ்ரேலை நோக்கி 3 ஏவு கணைகள் ஞாயிற்றுக் கிழமை வீசப்பட்டதாக இஸ் ரேலிய அதிகாரிகள் தெரி வித்தனர்.

அந்தத் தாக்குதலுக்குப் பதி லடியாக, லெபனானில் குறிப் பிட்ட இலக்குகளைக் குறி வைத்து இஸ்ரேலின் எறி குண்டுத் தாக்குதல் நிகழ்த் தப்பட்டதாக அவர்கள் கூறி னர்.

ஏவுகணைத் தாக்குதலுக்கு லெபனான் ராணுவமே கார ணம் என இஸ்ரேலிய ராணு வம் தெரிவித்தது. லெபனா னின் ஹிஸ்புல்லா அமைப் பைச் சேர்ந்த சமீர் காந்தார் என்பவர், சிரியாவில் இஸ் ரேல் நிகழ்த்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட் டார். இதனை ஹிஸ்புல்லா உறுதி செய்தது.

இதனால் இஸ்ரேல் – லெப னான் இடையே பதற்றம் நிலவி வரும் நிலையில், லெபனான் பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது ஏவுகணை வீசப்பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது. இஸ்ரேலியக் காவ லரையும், 4 வயது சிறுமி மற்றும் அந்தச் சிறுமியின் தந்தையையும் 1979ஆம் ஆண்டு படுகொலை செய்த குற்றத்துக்காக சமீர் காந் தார் இஸ்ரேலியச் சிறையில் 30 ஆண்டுகளாக அடைக் கப்பட்டிருந்தார். இஸ்ரேலும், ஹிஸ்புல்லாக்களும் மேற் கொண்ட சர்ச்சைக்குரிய கைதிகள் பரிமாற்ற ஒப்பந் தத்தின்கீழ் இஸ்ரேல் அவரை விடுதலை செய்திருந்தது.



ின் ஜுன்சென் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் தொடர்ந்து ப்பட்டு வருகின்றன. இறப்பு எண்ணிக்கை 100ஐத் தாண்டும் என்று அதி ள் அஞ்சுகின்றனர். இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்கலாம் என ப்படுகிறது. மேற்கொள்ளப்பட்ட தேடலில் இதுவரையில் எவரும் டன் மீட்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வருடம் சீனாவில் இடம்பெற்ற பெரும் இடர்களில் இது நான்காவது தெரிவிக்கப்பட்டுள்ளது. பல கட்டடங்களின் மேல் 10 மீற்றர் உய கு சேறும் சகதியுமான மண் மூடிக்கிடக்கிறது.

நிலச்சரிவுக்குக் காரணம் கட்டடக் கழிவுகளால் ஏற்பட்ட மண்மேடு து ஆகும் என்கிறார்கள் அதிகாரிகள். மனிதச் செயற்பாடுகளினால் பெரும் மேடு உருவாக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக சேர்க்கப் கட்டடக் கழிவுகள் குவியல் குவியலாகக் கொட்டப்பட்டு உறுதித் ம இன்றிய நிலையில் நகரின் மீது சரிந்துள்ளதாக நிலம் மற்றும் களின் அமைப்பு தெரிவித்துள்ளது.

ர்ச்சியாகப் பெய்த மழையினால் பெரும் குன்று நகருக்குள் சரிந்து வீழ்ந் பான்றிருக்கின்றது. இந்த இடர் இயற்கை இடர் இல்லை எனவும், நடத்தைதான் இந்த அழிவுக்கு காரணம் எனவும் உள்ளூர்வாசி தெரி ார். நிலச்சரிவின்போது இயற்கை வாயுக்குழாயில் ஏற்பட்ட விபத் வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த நிலச்சரிவால் 50 காற் பந்து மைதா ளின் அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மீட்புப்பணியில் தொடர்ந்து க்கணக்கானோர், ஈடுபட்டுள்ளனர். மோப்ப நாய்களும் பணியாற்றி ின்றன. (உ-ரி4)

# புகைக்க வயது 21 வருகிறது இறுக்கம்

### ஆஸியின் தாஸ்மானியா மாகாணத்தில்

சிட்னி,டிசெ.23

ஆஸ்திரேலியாவில் உள்ள தாஸ்மா னியா மாகாணத்தில் புகை பிடிக்கக் கூடிய ஆகக்குறைந்த வயதெல்லை 21 என அறிவிக்கத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இந்தத் திட்டம் செயற்பாட்டுக்குள் வந் தால் உலகின் புகைத்தல் தொடர் பான கடுமையான சட்டங்களுள் இது வும் ஒன்றாகக் கருதப்படும். தற்போது 18 வயதிக்கு மேற்பட்டோர் புகைக்க லாம் எனும் சட்டம் அங்கு நடைமுறை யில் உள்ளது. எனினும் அது இளை ஞர்களால் மீறப்படுவதாக குற்றச் சாட்டு எழுப்பப்படும் நிலையில், இந்த வயதெல்லை அதிகரிப்பு அறிவிக்கப் படவுள்ளது.

இதற்கிடையில் உலகளாவிய ரீதி யில் ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே புகைத்தலுக்கு எதிரான வலிமையான சட்டங்கள் உள்ளன. அங்கு ஒரு சிக ரட்டின் விலை 20 ஆஸ்திரேலிய டொலருக்கு விற்பனை செய்யப்படு கிறது. 21 வயதில் இருந்துதான் புகைக்க முடியும் என ஏற்கனவே குவைத்தில் சட்டம் உண்டு. ஹவா யில் அடுத்த ஆண்டிலிருந்து இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள் ளது. மூன்றாவது இடமாக ஆஸ்திரே லியாவின் மாகாணமும் உருவாகி யுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்குள் தஸ்மா னிய மாகாணத்தை ஆரோக்கியமா னதாக மாற்றுவதற்கு அந்த மாகாண அரசு 5 வருட திட்டத்தை அறிவித் துள்ளது. இந்த மாகாணத்தில் 5இல் ஒருவர் புகைப்பழக்கத்திற்கு அடிமை யாகவுள்ளார். அவற்றிலும் 25 வய துக்கு உட்பட்டவர்களே அதிகம். எனவே தான் முதற்கட்டமாக புகைத்தலில் கை வைத்துள்ளது அந்த மாகாண அரசு. (உ-ரி4)

## ட்ரோன்கள் வாங்குகிறது இந்தியா

ஆளில்லாது, தரைக் கட் டுப்பாட்டு இயக்கத்தில் செயற் படும் 'ட்ரோன்' ரக 100 விமா னங்களை அமெரிக்காவி டம் இருந்து கொள்வனவு செய்ய இந்தியா தீர்மானித் துள்ளது.

# அரசஎதிர்ப்புஊர்வலத்தில்பங்கேற்றதற்காக சிறுவனின் தலையைத் துண்டித்துத் தண்டனை

### நிறைவேற்றத் துடிக்கிறார்கள் அதிகாரிகள்; சவூதியில் கொடூரம்

ரியாத், டிசெ.23

சவூதி அரேபியா நாட்டை சேர்ந்த அப்துல்லா – அல்– சகீர் தனது 15ஆவது வயதில் அரசுக்கு எதி ரான ஊர்வலம் ஒன்றில் கலந்து கொண்டமைக்காக சாவுத் தண்டனை நிறைவேற்றப்படும் நிலையில் உள் ளார்.

2012ஆம் ஆண்டு அரசுக்கு எதி ராக நடத்தப்பட்ட ஊர்வலத்தில் கலந்துக்கொண்ட குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்ட சகீர் தொடர்பான வழக்கு விசாரணை 2014ஆம் ஆண்டு நீதிமன்றத்திற்கு வந்தது. குற்றம் நிரூபிக்கப்பட்டதாகத் தெரி வித்து சிறுவனின் தலையை வெட்டி சாவுத் தண்டனை வழங்குமாறு நீதி பதிகள் தீர்ப்பளித்தனர்.

பின்னர் சிறுவன் தொடர்பில் எழுப் பப்பட்ட கரிசனைகளை அடுத்து தண்டனை 2015ஆம் ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது 18 வயதாகும் அந்த இளைஞனுக்கு வரும் தினங்களில் எப்போது வேண் டுமானாலும் தண்டனை நிறைவேற் றப்படலாம் என்ற தகவல் வெளி யாகியுள்ளது. சகீர் தற்போது தனி மைச் சிறையில் அடைக்கப்பட்டுள் ளார்.

அவருக்கு சாவுத் தண்டனை நிறை வேற்றப்படவுள்ளதான செய்தி வெளி யானதை தொடர்ந்து அவரது தந்தை ஹசான்–அல்–சாகீர் மக னைக் காப்பாற்றுமாறு மன்றாடி யுள்ளார்.

"எனது மகன் அரசுக்கு எதிராக செயற்படவில்லை. உண்மையில் அது அரசுக்கு எதிரான ஊர்வலம் என்பதுகூட அவனுக்குத் தெரியாது. சாவை எதிர்நோக்கியுள்ள எனது மகனைக் காப்பாற்றுங்கள்" என ம னித உரிமைகள் ஆணையத்திடம் அவர் முறையிட்டுள்ளார்.

சிறுவன் கைது செய்யப்பட்டபோது, அவனை பல சித்திரவதைகளுக்கு உட்படுத்தி ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியுள்ளனர் என்று மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட் டுகின்றன. அவன் கைது செய்யப் பட்ட உடனேயே அவனைப் பேச விடாமல் பல ஆவணங்களில் அதி காரிகள் கையெழுத்து வாங்கியுள் ளனர் என்றும் கூறப்படுகின்றது. சவூதி அரேபியாவின் நட்பு நாடு களான அமெரிக்கா, பிரிட்டன் என் பன இந்த விவகாரத்தில் உடனடி யாகத் தலையிட்டு தண்டனையி இருந்து சிறுவனைக் காப்பாற் வேண்டும் என்று வலியுறுத்தப்ப கின்றது. (உ-ரி4)

## ஸ்மஸ் கொண்டாடினால் ண்டுகள் வரை சிறை

யில் சட்டவிரோதமாக கிறிஸ்மஸ் கொண்டாட் ல் ஈடுபட்டால் 5 வருடங்கள் வரை சிறைத் தண் விதிக்கப்படும் என்று நாட்டின் தலைவரான சுல் அறிவித்துள்ளார்.

ணய் வளம் மிக்க சிறிய நாடான புருணே கடந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்குத் தடை விதித் ரங்கமாக கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் நடத் ால் நாட்டின் இஸ்லாமியர்களான மக்கள் மதம் டக்கூடும் என்கிற அச்சமே அதற்குக் காரணம். ம்கள் அல்லாதவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாட் ல் ஈடுபட முடியும் என்றாலும் தங்களது வீடு மட்டுமே அவற்றைச் செய்ய முடியும்.

## விமான விபத்தில் 10 பேர் சாவு

புதுடில்லி விமான நிலை யம் அருகே இந்திய எல்லை பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று விபத் துக்குள்ளானதில் அதி லிருந்த 10 பேர் உயிரி ழந்தனர். நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடந் தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாருங்கள் வந்து வணங்குங்கள் பொலிகண்டி கந்தவன வேலனை

கே.எஸ்.சிவஞானராஜா

"பொலிகண்டியில்கந்தவனப்பொன்மலை
ஒன்று உண்டு
வாருங்கள் வந்து வணங்குங்கள்
போயதைப் பார்"
"இலையென்றிரங்கி யிரக்கப் புகுந்து
நிலையொன்றி நீ வருந்த வேண்டாம்,
அலையொன்றி மன்னுதுறைக்
கந்தவனத்தருகே ஆறுமுகப்பொன்மலை
யொன்றுண்டங்கு போ"

இவ்வாறு நவாலியூர் சோமசுந்தரப் புலவர் 1925 ஆம் ஆண்டிலே இயற்றியருளிய நான்மணிமாலையிலே இந்த அருமையான அற்புதமான பாடல் வெண்பாவாக அருளப்பட்டுள்ளது.

"திருவாரூர் தேரைப்பாரு
கந்தவனத் தெருவைப்பாரு"

தேரும் - தெருவும் , ஊரும் -உறவும், பேரும் - புகழும் , சீரும் - சிறப்பும், பாரும் - விசும்பும், வேரும் - மரமும் , தேரும் - தெருவும், நாரும் - மணமும், அருவும் - உருவும், ஊரும் - உறவும், ஏரும் - எருதும், ஆரும் - வரவும் , காரும்-கடலும், நீரும்-கிணறும், மோரும் - மிளகும், போரும் - பிறகும் பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி, பொன்மலை ஈந்தருளும், பொன்னாகும் வாழ்வு தரக் காத்திருக்கின்றார். கந்தவனநாதர் நான்மணிமாலையின் காப்பினில் முதலாவது பாடலாக வரம் தருகிறது. சோமசுந்தரப் புலவரின் தரமான பாடலிது

"திருமேவுங் கல்வி சிவஞானம் உண்டாம்
குருமேவும் வீடுங் கைகூடும் - உருமேவுங்
கந்தவனக் கஞ்சமுகக் கந்தமுரு கன் கருணைக்
கந்தவனஞ் சிந்தை செய்தக் கால்"

கந்தவனக் கடவை வள்ளி தேவ சேனா சமேத ஶ்ரீகலியாண வேலனைத் தரிசிக்க அவன் அழைக்க வேண்டும். முன்பு கதிர்காமம் செல்வதாயின் முருகன் அழைக்கின்ற சம்பிரதாயம் காலம் காலமாக இருந்து வந்துள்ளது. கந்தவனமும் அவ்வாறே. பொன்மலையது.

## பூர்வீகம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் விசேடம் பெற்ற இந்த ஆலயம் திக்கம் செல்லையாபிள்ளை குடும்பத்தவர்களால் அன்று முதல் இன்றுவரை பராமரிக்கப்பட்டு வருகிறது.

1925 இல் இயற்றி அருளப்பட்ட நவாலியூர் க.சோமசுந்தரப்புலவரின், கந்தவனநாதர் "நான் மணிமாலையும் பதிகமும், திருப்பள்ளியெழுச்சியும்" தேன்பாயும் அருட்பாக்களாகும்.

இலங்கையில் பாடப்பெற்ற திருப் பள்ளியெழுச்சிகளில் கந்தவனநாதர் திருப்பள்ளி எழுச்சியானது, ஏனைய பாடல்களுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளது. ஒரு பாடலைப் பார்ப்போம்.

சங்கரன் நுதல்விழி பிறந்தமை பாடி
சரவண வாவியில் வளர்ந்தமை பாடி
பங்கயன் றனைச்சிறை விடுத்தமை பாடி
பாதகச் சூரனைப் படுத்தமை பாடி
மங்கைய ரிருவரை மணந்தமை பாடி
மன்னுயிர்க் கருள்புரி வண்ணமும் பாடி
இங்குனை யடைந்தன மெழிற்கந்த வனஞ்சேர்
எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே.

திக்கம் சி.செல்லையாபிள்ளை குறிப்பிட்டருளிய முன்னுரையில்,

"பரம கருணாநிதியாகிய குமாரக்கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருப்பதிகள் பலவற்றுள் தட்சிணகைலாய மான்மியம் ஒன்பதாம் அத்தியாயத்தில் விதந்தெடுத்துக் கூறப்பட்டிருக்கின்ற ஈழநாட்டின் கண்ணுள்ள திருப்பதிகள் ஆறினுள் ஒன்றாகியும், அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் பெற்றதாயும், திருமால், பிரமன் முதலிய தேவர்களால் அர்ச்சிக்கப் பெற்றதாயும், மூர்த்தி தல தீர்த்தம் எனப்படும் மூன்று விசேடங்களும் ஒருங்கமையப் பெற்றதாயும், இருக்கின்ற கந்தவனம் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் கந்தவனநாதர் மீது, கல்வி செல்வம் எனப்படும் இருநலனும் நிரம்பப் பெற்ற நன்மக்கட் கிருப்பிடமாகிய யாழ்ப்பாணத்து நவாலியூர் திருவாளர் க.சோமசுந்தரப் புலவரால் சொன்னயம், பொருணயம் பொலிய ஆன்றோர் செய்யுள் நடை அமைய, பக்திச்சுவை ததும்பித் ததும்பி வழிய, திருப்பள்ளியெழுச்சி எனப் பெயர் கொண்ட இத்திவ்யப் பிரபந்தம் பாடப்பட்டது.

திருவருளின் தலைநின்று பாடிய இந்தப் பிரபந்தம் தண்ணருள் பொலிய நவில் தோறும் நவில் தோறும் நவமயமாகிய நற்பொருள் பயப்பதாகும். பாராயணஞ் செய் வோர்க்குப் பேரானந்தத்தை விளைவிப்பது. ஆதலினால் இதனையும், நான் மணிமாலையும் படித்துச் சகல பேறுகளையும் பெறுவீர்களாக.

> கந்தவனக் கடவை வள்ளி தேவ சேனா சமேத ஶ்ரீகலியாண வேலனைத் தரிசிக்க அவன் அழைக்க வேண்டும். முன்பு கதிர்காமம் செல்வதாயின் முருகன் அழைக்கின்ற சம்பிரதாயம் காலம் காலமாக இருந்து வந்துள்ளது. கந்தவனமும் அவ்வாறே. பொன்மலையது

## பேறுகள்

ஒரு வருடத்தில் ஒரு தடவையாவது பொலிகண்டி கந்தவனத்துக்கு வந்து மனதார வணங்குவீர்களாக இருந்தால்,
கல்விச் செல்வம் கொழிக்கும்
தானியச் செல்வம் பொலியும்
தொழில் வாய்ப்புப் பெருகும்
ஆரோக்கியம் விளங்கும்
ஆயுள் நிறையும்
பரீட்சைகளில் சித்தியாகலாம்
பாதுகாப்பு மேலிடும்
நோய்களிலிருந்து விடுபடலாம்
நவக்கிரக தோஷ நிவாரணம் பெறலாம்
குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்
திருமணம் இனிதே நிறைவேறும்
சகோதரத்துவம் ஏற்படும்
சமாதானம் ஏற்படும்
சைவசமயம் புத்துயிர் பெறும்.

## இருப்பிடம்

புராதன வரலாற்றுப் பெருமை கொண்ட இந்த ஆலயம், வல்லிபட்டினத்துறைக்கு (வல்வெட்டித்துறைக்கு) கிழக்கே பருத்தித் துறைக்குப்போகும்வழியில், பொலிகண்டி என்னும் ஊரில் பெருங்கடலருகே, வானோங்கு மரங்களின் நடுவே வன்னிமரச் சோலையும் விருட்சங்களும் குளிர்விக்க மாதவர் மடங்களும் ஓதனச் சாலையும், நறுநீர்க் கூவலும் மறுவின்றி விளங்க, கேணிகளும், மணிமண்டபங்களும், பென்னாம் பெரிய தூண்களும், அற்புதம் தந்த பழையவரும், காஞ்சிமா மரமும், காலங் கணிக்கவொண்ணா வன்னி மரங்களும் அழகிய கட்டுத்தேரும், ஆகமவிதிப்படி அமைந்த கோயிலமைப்பும், பாரிவார மூர்த்திகளும், மூலவரும், ஆறுமுகசுவாமியும், நவக்கிரக வாலாயமும் கந்தவன கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானத்தைக் கவினுற அழகு சேர்ப்பதில் கட்டியம் கூறுவதாக மிளிர்கின்றன.

"வேறென்ன வேண்டும்
இந்த ஆலயத்தில்'' என்றுமில்லாத, எங்குமில்லாத ஒரு சுகம் இருக்கிறது. இதை அனுபவிக்கும் போது தான் அது விளங்கும்.

தமிழ்நாடு கா. கோ. வேங்கடராமன் எம். ஏ. (தமிழ்த் துணைப் பேராசிரியர்) அவர்கள் ஆக்கி அருளிய கந்தவனக் கலம்பகம் எனும் நூலில் வரும் பாடலிது.

"பிணிமருந் துதவிடும் ஒருகை
அணியவர்க் கலர்தரும் ஒருகை
அயிழை அணைதரும் ஒருகை
தாயெனும் தமிழொடும் ஒருகை
மயக்கது மாற்றிடும் ஒருகை
துயர்க்கணீர் துடைத்திடும் ஒருகை
குரவையிற் குழைந்திடும் ஒருகை
புரிமணம் புணர்த்துமுன் ஒருகை
பகைவரைச் சுட்டிப் பதைத்திடும் ஒருகை
நகைவரச் செவ்வேல் நடத்திடும் ஒருகை"
கொடியினிற் சேவல் கூவிடும் ஒருகை
அடியவர் வாழ்த்துக் கருளிடும் ஒருகை

பன்னிரண்டு கரங்களுக்கும் பன்னிரண்டு வரங்களை அளிப்பதாகப் பார்சிறக்குமோர் ஆலயமான கந்தவனம், செல்வச்சந்நிதி, கதிர்காமத்தையும் வரமாக்கும் அற்புத பதியாக விளங்குகிறது.

கந்தவன மணிமாலை புலவர்மணி கா.நீலகண்டன் இயற்றிய கந்தவன மணிமாலையானது பாடிப்பாடிப் பரவசமடையக்கூடியது. உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் இலங்கையிலே முதுபெரும் புலவராக மிளிர்ந்தவர். பின்னடி காலத்தில் கண்களில் பார்வை தெரியாமல் போகவே, சுந்தரமூர்த்திநாயனார் எவ்வாறு இழந்த கண்களைத் திருப்பதிகம்பாடி மீண்டும் பார்வையை பெற்றுக்கொண்டாரோ, அவ்வாறே, கந்தவனப் பெருமானை மனமுருகிப் பாடிப்பாடி மீண்டும் இழந்த கண்ணொளியையும் பார்வையையும் பெற்றுக்கொண்டவர்.

அவ்வாறு இழந்த சக்தியையும் பார்வையையும் பொருளையும் பெற்றுத் தருபவர் கந்தவனப் பெருமானாவார். அத்தகைய (ஆலயத்தின்) வரலாற்றுப் பெருமையை உலகறிய வைத்த சிவசம்புப் புலவரின் பூட்டன் தமிழ் அறிஞர் புலவர் மணியே கா.நீலகண்டன் ஐயா அவரது 213 பாடல்களும் பக்திச்சுவை ததும்புவன.

"கந்த வனத்தான் வேலுண்டு
கதிகொள் நீல மயிலுண்டு
கந்த மலர்த்தா ளிணையுண்டு
கருது வேறு படையுண்டு
நந்தலில் சீர் நாவுண்டு
நவிலின் சுவைத்தேன் பாவுண்டு
எந்த வகையா மிடர்த் தொகையு
மெம்மை யென்ன செயுமினியே"

பொலிகண்டிக் கந்தவனம் திருவருள்மிகு ஶ்ரீ கல்யாண வேலவ சுவாமி (பழையவர்) ஆலயத்தில் 10.10.2015 சனியன்று நவக்கிரக ஹோம பூசை வெகு சிறப்பாக நடைபெற்றது.

சிவப்பிரம்மஶ்ரீ குமரகுருமணி ச.வைத்தியநாதக் குருக்கள் மேற்படி தேவஸ்தான குருவாக இருப்பதனால் மிக மிக அர்த்தபுஷ்டியோடு பூசை நடைபெற்றது. புகழ்பெற்ற செவாலியரும் தேவஸ்தான ஆதீன கர்த்தாவாகவும் விளங்கும் திருமதி சிவயோகநாயகி இராமநாதன் அந்த ஆலயத்தை திறம்பட நிர்வகித்து வருகின்றார். திக்கம் செல்லையா குடும்பத்தவர்களின் புனிதமான தொண்டினால் 'கல்யாண வேலவன் ' யாவருக்கும் அருள்தரக் காத்திருக்கின்றான். வாருங்கள், வந்து வணங்குங்கள். வரம் பெறுங்கள். நீங்கள் வீடு திரும்பும்போது வீட்டில் ஏதோவொருவரம்காத்திருக்கும். பொன்மலை வரங்களினால் பொலிகிறது. பொலிகண்டியல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைஞர் விருதுகளுடன் வடமாகாண பண்பாட்டு விழா

இனியன்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய 2015 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா கடந்த வாரம் நல்லூர் ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபத்தின் கலாபூசணம் இராதாகிருஷ்ணன் அரங்கில் இடம் பெற்றது.

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவைத் தலைவரும் நல்லூர் பிரதேச செயலாளருமாகிய ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தும், கலாசாரப் பேரவை கீதமும் நல்லூர் கீதவாகினி இசைக்கல்லூரி மாணவர்களினால் பாடப்பட்டதைத் தொடர்ந்து அரங்கத் திறப்புரையை கலாசாரப் பேரவை உறுப்பினர் திருமதி வாஸ்பதி ரஜீந்திரன் ஆற்றினார்.

தொடர்ந்து கோண்டாவில் முருகானந்தம் பிரேமானந்தா குழுவினரின் மங்கல இசைக் கச்சேரி இடம்பெற்றது. அடுத்து, வரவேற்புரை இடம்பெற்றது. இதனை உதவிப்பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் நிகழ்த்தியதுடன் வரவேற்பு நடனத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களும் வழங்கினர்.

நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் உரை இடம்பெற்றது. அத்துடன் நிகழ்வின் ஆசிஉரையை நல்லூர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆற்றினார்.





**மலர் வெளியீடு**

கலைஞானச்சுடரின் முதலாவது மலரை நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறியிடமிருந்து நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், சிறப்பு மலரை வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணமும் பெற்றுக் கொண்டனர்.

**கலைஞானச்சுடர் விருது**

பிள்ளையினார் நடராஜா (நாயன்மார்கட்டு) சிறுவர் இலக்கியத்துக்காகவும், திருமதி.புஷ்பவதிமேரியோசப்அந்தோனியின் (அரியாலை) எழுத்துத்துறைப் பணியை கௌரவிக்கும் முகமாகவும், கார்த்திகேசு சச்சிதானந்தன் (கோண்டாவில்) புனைகதை எழுத்துத்துறைப் பணியை கௌரவிக்கும் முகமாகவும், திரு மதி. கோமதிதேவி செல்வநாதன் (நல்லூர்) ஓவியத்துறைப் பணியை கௌர விக்கும் முகமாகவும், திருமதி பேரின்பநாயகி கனகரத்தினம் (அரியாலை) இசை நாடகத்துறைப் பணியை கௌரவிக்கும் முகமாகவும், சண்முகம் புஸ்பராஜாவின் (அரியாலை) நாடகத்துறைப் பணியைக் கௌரவிக்கும் முகமாகவும், செல்வி. மலர் சின்னையா (நல்லூர்) கவிதைத்துறைப் பணியைக் கௌரவிக்கும் முகமாகவும் பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரசர்மா நித்தியானந்தசர்மா (கொக்குவில்) சங்கீத கதா பிரசங்கத்துக்காகவும், இராமமூர்த்தி முருகானந்தம் (கோண்டாவில்)தவில் வாத்தியத்துறைக்காகவும் கலைஞானச் சுடர் விருதுகள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.

இந்த விருதுகளை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் வழங்கிக் கௌரவித் தார்.

தொடர்ந்து பண்பாட்டுப் பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுகான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

சிறப்பு நிகழ்வுகளாக திருநெல்வேலி சாகித்திய மாணவிகள் வழங்கிய இசையரங்கு வீணாகானமும், அரியாலை நிருத்திய கீதாலயா மாணவிகள் வழங்கிய நாட்டியார்ப்பணமும், கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் வே.சிவராஜா, இ.சு.முரளிதரன், இ.சர்வேஸ்வரா ஆகியோர் நிகழ்த்திய 'பார் எட்டுத் திக் காய்ப் பரந்து கிடக்கிறது' என்னும் கவியரங்கமும் இடம்பெற்றது. இறுதியில் நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தரும் கலாசாரப்பேரவையின் செயலாளருமாகிய திருமதி கு. ரஜனியின் நன்றி கூறுதலுடன் விழா சிறப்புற நிறைவுபெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்கையை அலங்கரிக்கும் புதன் மகிமை

கருடன்

உளடகங்கள் ஒவ்வொன்றும் வாரத்தில் ஒரு நாளை வெகுசிறப்பாக வெளியிடுவது அதனதன் மகிமைகளைப் பேறாக்குவதற்கே ஆகும். அந்த வகையில் உதயன் நாளிதழானது புதன் கிழமையை வழமையான சம்பிரதாயங்களோடு, காத்திரமான படைப்புக்களைத் தாங்கும் புதன்பொய்கையையும் வெளியிட்டு, வாசகர்களை மகிழ்விப்பது யாவரும் அறிந்த விடயமே.

குறிப்பாக, கலை, கலாசார, பண்பாட்டு லௌகீக, ஆண், பெண் சமத்துவ, சமய, சம்பிரதாய, விமர்சன, பொது விடயதானங்கள் புதன்பொய்கையை அலங்கரிக்கின்றன.

29.10.2014 புதன் பொய்கையில் "ராஜராஜன்" எழுதிய, "மனிதர்களை ஆட்டிப் படைக்கும் பதவியும் அதிகாரமும்" என்ற கட்டுரை மாணவர்கள், பெரியோர்கள் எல்லோரும் வாசித்து உணரவேண்டியதொன்றெனச் சட்டெனப் பட்டிருக்கும்.

நில்லாதவற்றை நிலையென்றுணரும் எமக்கு அது மிகவும் பயனுள்ளதொரு கட்டுரையாகும். பதவியும், அதிகாரமும் அதையொட்டிய மோகமும், வேட்கையும் மனிதர்களைப் பீடித்துள்ள மிகமிகப் பெரிதான வியாதிகள் என்று கூறப்பட்ட செய்தி, நெஞ்சில் உறைக்கக்கூடிய கட்டுமானச் சொற்கட்டாகிறது.

இந்தக்கட்டுரையை ஒவ்வொரு பதவியில் இருப்பவர்களும் உணர்தல் வேண்டற்பாலது. ஆனால் அவ்வாறானவர்கள் இந்தக் கட்டுரையைப் படித்தேயிருக்கமாட்டார்கள். எல்லாம் வல்ல ஆண்டவனைச் சொல்லியே கதிரையைப் பிடித்து விடமாட்டோமா? என்று அடம்பிடிக்கிறார்கள். ஆன்மிகமும் அப்படியாய்ப் போச்சுது. அரசியலும் அப்படியாய்ப் போச்சுது. காமமும் அப்படித்தான். கனவு காணக் காண, நனவு படப்படும். சும்மா இருக்க விடாது. ஏதாவது செய்யச் சொல்லும். பதவி, அதிகாரம், காமம், மோகம் களவு, பிறர்மனை, மது, பணம் இவற்றால் வரும் சந்தோசம் எல்லாம் நிரந்தரம் அல்ல என்பது பெரியோர்களின் முடிந்த முடிவு. இந்த விடயம் பாமரருக்கு மிக எளிதாகப் புலப்படுகிறது. படித்தவருக்கு இது காலம் தாழ்த்தியே புலப்படுகிறது. தயவு செய்து எல்லோரையும் சொல்வதாகக் கருதக்கூடாது. நீங்கள் உங்களைத்தான் என்று யோசிக்காதீர்கள்.

### படித்தவன் யார்?

"பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ உனது கடமை எதுவோ அதைச்செய்தாயானால் நீ படித்தவன் என்று பொருள்" இதனை ஹெபர்ட் ஸ்பென்ஸர் சொன்னதாகப் புதன்பொய்கை உறுதி செய்கிறது.

பதவிகள் எம்மைத் தேடிவர வேண்டுமேயொழிய, நாம் அவற்றைத் தேடிச் செல்வது ஆகவே ஆகாது. இந்தப் பண்பு யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, முழு இலங்கையிலும் விளைய வேண்டும். நான் குறிப்பிடுவது எல்லோரையுமல்ல. ஒரு சிலரை மட்டுமேயாகும்.

> மக்கள் பணத்தில் அல்லது பொதுப் பணத்தில் சவாரி செய்வது அழகும் அல்ல. அறிவும் ஆகாது. அரசியல் என்றாலும், ஆன்மிகம் என்றாலும் பள்ளிக் கூட நாளில் ஏழு, எட்டு, மணிக்கு ஏதோவொரு பஸ்ஸில் பயணம் போனால் முறையாக விளங்கும் என்பது எனது சொந்த அபிப்பிராயம் ஆகும். வருத்தம் இல்லாதவர்களுக்கு வருத்தம் வந்தே தீரும்.

எனக்குத் தெரிந்த ஒருவர் வெளியில் பார்த்தால் பசுமாதிரியாக இருப்பார். உள்ளத்தைத் திறந்து பார்த்தால் புலியும் அல்ல. (அ)சிங்கம் என்று சொல்லலாம். அத்தனை குழப்படியும் செய்தவர் மட்டுமல்ல. அத்தனை குளறுபடியும் செய்தவர். அவருக்குக் குறுக்கு வழியென்றால் அத்துப்படி.

ஒரு கதிரையைக் கைப்பற்ற வேணுமென்றால், எப்படிப் பொறி வைக்கவேண்டுமென்று, என்னென்ன சடங்கு செய்ய வேணுமோ அத்தனையையும் வலுகச்சிதமாகச் செய்துவிடுவார். பிறகென்ன விழுந்தவரைத் தூக்கி விடவும் ஓடி வருவார். எந்த அரசு வந்தாலும் தான் தான் பெரிய ஆள் என்று ஏதாவது ஒரு பதவிக்குச் சொந்தக்காரராகி விடுவார். அது என்னவென்றால், தனக்குக் கீழே ஒரு தொகுதி அடிமைகள் இருந்து கொண்டேயிருக்க வேண்டும் என்ற அவரது விருப்பேயாகும். தான் யார் என்று அடிக்கடி உறுதிப்படுத்திக் கொள்வார். பாவம். அவரது பலவீனமே அதுதான்.

ஒருமுறை பதவியையும் அதிகாரத்தையும் தமது கைகளில் எடுத்துக்கொண்டவர்கள், மீண்டும் மீண்டும் அவற்றைப் பெறுவதற்கு முயல்வார்கள். ஏனென்றால், அவை இல்லாமல் அவர்களால் வாழவே முடியாது. அந்த அளவுக்கு பதவி அவர்களை அடிமைகளாக்கி வைத்துள்ளன. அருமையான கருத்துப் பொக்கிசங்கள்.

மேலும், மனிதர்களுக்கு இந்த உலக வாழ்க்கை எவ்வாறு நிரந்தரம் அற்றதோ, அதேபோன்றுதான் இந்தப் பதவி, அதிகாரம் என்பனவும் நிரந்தரமற்றவை. இதைச் சுடலை ஞானம் என்றும் கூறலாம். சாதாரண வாழ்க்கை வாழ்ந்த சிலர், பதவியும், அதிகாரமும் கிடைத்து விட்டால், தமது நிலை மறந்து, தறிகெட்டு நடப்பதைக் காண்கிறோம். இறுதியில் இத்தகையவர்கள், மக்களால் வெறுத்து ஒதுக்கப்படுகின்றனர். சில இடங்களில், சமயம், சங்கக்கடை போன்று மனேஜர் வேலை பார்ப்பதாகவே உணரப்படுகின்றது. வேதனையில் தத்தளிக்கின்றது.

சாமிதான் என்ன செய்ய முடியும்? சாமியைப் பேச விட்டால்தானே. சாமிக்கு இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? ஆசாமிகள் இருக்கும் வரை நாம் அடிமைகள்தான். கொஞ்சம் இறங்கி நடவுங்கள் எல்லாம் புரியும்.

### இன்னுமொன்று

மற்றுமொரு முக்கியமான விடயத்தை நாம் உணர்ந்தேயாக வேண்டும். அரசியல் என்றாலும், ஆன்மிகம் என்றாலும் சரி, அதற்குள் செல்வதற்கு முன்னதாக உள்ள அசையும் அசையாத சொத்துக்களின் விவரத்தையும், அதிலிருந்து விடுபட்டுவிலகும்போது, அவர்வசமுள்ள அசையும் அசையாத சொத்துக்களின் விவரத்தையும் பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்பதைச் சம்பந்தப்பட்டோர் கண்டிப்பாக உணர வேண்டும். இதுவும் ஒரு தரும காரியமாகும்.

மக்கள் பணத்தில் அல்லது பொதுப் பணத்தில் சவாரி செய்வது அழகும் அல்ல. அறிவும் ஆகாது. அரசியல் என்றாலும், ஆன்மிகம் என்றாலும் பள்ளிக் கூட நாளில் ஏழு, எட்டு, மணிக்கு ஏதோவொரு பஸ்ஸில் பயணம் போனால் முறையாக விளங்கும் என்பது எனது சொந்த அபிப்பிராயம் ஆகும். வருத்தம் இல்லாதவர்களுக்கு வருத்தம் வந்தே தீரும். வருத்தம் உள்ளவர்களுக்கு வருத்தம் சுகமாகும். சுகமானவர்களுக்கு சுகமில்லாது மருந்தெடுக்க வேண்டி வரும்.

### நோபல்

2014 ஆம் ஆண்டு, இந்தியாவின் கைலாஷ் சத்யாத்தியும், பாகிஸ்தான் மலாலாவும் எந்தவித உள்நோக்கமும் இல்லாமல் சிறுவர் நலன் காக்கப் போராடியமையால் இவர்களைத் தேடி நோபல் பரிசு தேடி வந்துள்ளது. இன்னும் பல பரிசுகளும், பட்டங்களும் இனியும் தேடிவரும் என நம்பலாம்.

இன்னுமிங்கு ஒரு சிலர் சிறுவர் துஷ்பிரயோகங்களின் போதோ, கைதிகள் தொடர்பாகவோ, மீளக்குடியமர்தல் தொடர்பிலோ, ஆலய ஊழல் தொடர்பாகவோ, மௌனமாக இருப்பார்கள். ஏனென்றால் இவற்றையெல்லாம் எதிர்த்தால் கேட்டுப் பெற்றுக்கொண்ட பதவிகள் பறிபோய்விடும் என்பதால், உரத்துச் சொல்ல வேண்டியவற்றை ஏனையவர்களிடம் விட்டு விடுவார்கள். தாம் தப்பி விடுவார்கள். இவர்களுக்கும் நோபல் அல்ல நோமல் பரிசுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இனத்துக்காக, மதத்துக்காக, மொழிக்காகப் போராட வேண்டும்.

இந்தியாவின் தேசத்தந்தையென்று போற்றப்படும் அண்ணல் மகாத்மாகாந்தி இந்தியாவுக்குச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவர். ஆனால் அந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்க அடியோடு மறுத்தவர். ஆதலால்தான் அவரைத் தெய்வமாகப் போற்றி "மகாத்மா" என்கிறார்கள். உண்மையான காந்தியவாதி இந்த நாட்டில் பிறக்க இறைவனிடம் வரம் கேட்போம். காரணம் அடுத்த சந்ததிக்கான உதாரணத்துக்காக.

ஆம், ராஜராஜன் குறிப்பிட்டதுபோல, பதவி ஆசை பிடித்தவர்கள், தமக்குக் கீழ் பணியாற்றுபவர்களை வறுத்தெடுத்து விடுகிறார்கள். ஈற்றில் நீதிமன்றத்தில் எதிரிக் கூண்டில் ஏறி நிற்பதையும் ஒரு கௌரவமாக எண்ணுகிறார்கள். இது பலமா? பலவீனமா? பென்னம்பெரிய உலகின் கண், தனது அலுவலகத்தில் பணிபுரிந்த இளம் பெண் ஒருவரிடம் தகாத உறவு வைத்திருந்த ஒரு தலைவரின் சாதகம் எப்படித்தான் மறைக்க முயன்றாலும் உலக சமூகம் பசுமரத்தாணி போல் மறக்காமல் ஞாபகப்படுத்திக் கொண்டேயுள்ளது. இந்த மண் சாட்சியாக உள்ளது. ஊர்க்குருவி உயரப் பறந்தாலும் அது பருந்தாக முடியுமா? இல்லையே.

ஆம், புதன் பொய்கையிலே, அதில் எதுவாக இருந்தாலும் ஒருமுறையென்ன, பல தடவை மூழ்கி அதிலே உலகைக் காணுங்கள். அந்தப் பொய்கையில் நீர் உண்டு, நிலவுண்டு,நெறியுண்டு, நூல் உண்டு, நூதனம் உண்டு, அறிவுண்டு, அழகுண்டு, ஆறுதலுண்டு, ஆற்றுகையுண்டு, இதம் உண்டு, எழில் உண்டு, பதிவுண்டு, பகிர்வுண்டு, பயபக்தியுண்டு, பெண் தொண்டு, பேறுண்டு, வடிவுண்டு, வாழ்வுண்டு, வற்றாக்கையுண்டு, படைப்புண்டு, பலதுமுண்டு, வேறென்ன வேண்டும் புதன்பொய்கை வீட்டையே அலங்கரிக்கும். அதுவேதான் அதன் மகிமை.

## "செருப்பு" குறும்படம் வெளியீடு

முள்ளியவளை நண்பர்கள் வட்டத்தால், படைப்பாளிகள் உலகத்தின் அனுசரணையுடன், முல்லை வர்மனின் 'செருப்பு' குறும்படம் கடந்த வாரம் முள்ளியவளை மத்தி பொது நோக்கு மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் ஈழத்துப் படைப்பாளிகளான நோயல் யராட் மற்றும் நிலாந்தன் , படைப்பாளிகள் உலக நிறுவுனர் ஐங்கரன் மற்றும் கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-433)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ப.ஜீபனா, கொடிகாமம்

# நட்புக்குப் பின்னால் என்ன இருக்கின்றது?



"நட்பு' என்ற மூன்றெழுத்துக்குப் பின்னால் என்ன இருக்கின்றது? இந்தக் கேள்விக்குப் பதில் புரியாமலோ அல்லது அறியாமலோ நட்பு என்ற பெயரில் ஏமாற்றமடைந்து தமது வாழ்க்கையை அல்லது படிப்பைப் பாழாக்கியோர் பலர். அதிலும் பள்ளிப்பருவ மாணவர்களும் இளைஞர்களுமே இதில் அதிகம்.

காதல் என்ற ஒன்றால் செய்யமுடியாத பலவற்றை 'நட்பு' என்ற ஒன்றினால் செய்துவிடலாம். ஆம், அது உண்மை தான். 'நட்பு' என்ற சொல்லுக்கு அத்தனை பெரிய சக்தியுண்டு. இந்த நட்பு என்ற மூன்றெழுத்துக்குள் அன்பு, பாசம், பணிவு, பண்பு, அமைதி, உண்மை, உறவு, உயிர் என்று பல மூன்றெழுத்து முத்துக்கள் அடங்கியுள்ளன. இவையே நட்புக்கு அத்திபாரமாக அமைபவை.

இன்றைய சமுதாயத்தினருக்கோ அதிலும் குறிப்பாக இளைஞர்களுக்கோ நட்பின் அருமையும் அதன் உண்மைத் தன்மையும் புரிவதில்லை. 'நட்பு' என்ற சொல்லைப் பலர் தமது சுயநலத்துக்காக பயன்படுத்துகின்றனர். தமது தேவைகளுக்காக மட்டும் ஒருவரை நண்பன் என்று சொல்வது, பின்னர் தேவை முடிந்ததும் அவனுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை எனத் தூக்கி எறியும் அளவுக்கு இன்றைய நட்பு சீரழிந்து விட்டது. உண்மையான நட்பென்பது உடலில் உயிர் இருக்கும் வரை எந்தவித களங்கமுமின்றித் தொடர்வதுதான்.

உண்மையான நண்பன் ஒருவன் தனது நண்பனைப் பிரியும்போது அல்லது தனது நண்பன் தன்னை தனது சுய நலத்துக்காக பயன்படுத்தினான் என்பதை அறியும்போது அல்லது தனது நட்பை பொழுதுபோக்காக பயன்படுத்தினான் என்பதை உணரும்போது அவன் அனுபவிக்கும் வேதனையும் வலியும் சொல்லில் அடங்காது. ஒரு காதல் இணை பிரியும்போது ஏற்படும் வலியை விட, உண்மையான நண்பர்கள் இருவர் பிரியும்போது ஏற்படும் வலி எப்பொழுதும் கொடுமையானது. உயிரோடு வாழும் வரை அந்த வலியும் சரி, உண்மையான நட்பும் சரி அவர்களை விட்டுப் பிரியாது.

இன்றைய காலகட்டத்தில் உண்மையான நட்பைக் காண்பதென்பது அரிது. நீங்களும் உங்களது நட்பு உண்மையா இல்லையா? என்பதை முதலில் அறியுங்கள். உண்மையான நட்பாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்காக உயிரைக் கொடுப்பதில் கூடத் தவறில்லை.

> “இன்றைய காலகட்டத்தில் உண்மையான நட்பைக் காண்பதென்பது அரிது. நீங்களும் உங்களது நட்பு உண்மையா இல்லையா? என்பதை முதலில் அறியுங்கள். உண்மையான நட்பாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்காக உயிரைக் கொடுப்பதில் கூடத் தவறில்லை”

நீங்களும் முதலில் உங்கள் நட்பு உண்மையானதா? உங்கள் நண்பர்கள் உண்மையானவர்களா? என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதற்கான வழிகள் சில:

**1. நண்பர்கள் உங்களுடன் பேசும் விதம்**

உண்மையான நண்பர்கள் எப்பொழுதும் தனது நண்பன் மீதோ அல்லது நண்பி மீதோ குற்றம் கண்டு கொண்டு இருக்கமாட்டார்கள். உங்களை ஊக்கப்படுத்துபவர்களாக இருப்பார்கள். உங்கள் மீது தமது கருத்துக்களைத் திணிக்க மாட்டார்கள். உங்களைக் கட்டாயப்படுத்தமாட்டார்கள். உங்கள் மீது பொறாமைப்படமாட்டார்கள். உயர்வுக்காக உங்களுக்கு அறிவுரை கூறுவார்கள்.

எனவே உங்கள் நண்பன் எப்பொழுதும் உங்களிடம் உங்கள் செயலை தப்பெனக் கூறி உங்களை மாற்ற முயற்சித்தால், அவர்களிடமிருந்து விலகுங்கள். ஏனெனில் "நீங்கள் உங்கள் நண்பனை மாற்ற முற் சிக்கின்றீர்கள் என்றால் நீங்கள் அவரை முழுமையாகப் புரிந்துகொள்ள வில்லை. அந்த நட்பை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை" என்பதே கருத்தாகும்.

**2. நண்பர்களின் நடத்தைகள்**

அவர்களின் நடத்தைகள் உங்களுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும்படி அமைந்தால் அது உண்மையான நட்பல்ல. உண்மையான நண்பர்கள் எப்பொழுதும் தமது நண்பனுக்காக தாம் எந்தவொரு அவமானத்தையும் தாங்குவார்கள். உங்களை அவமானப் படுத்த மாட்டார்கள்.

**3. நண்பர்களின் அன்பு**

உண்மையான நண்பர்களின் அன்பு தாய், தந்தையரின் அன்பிலும் உயர்ந்தது. ஏன் காதலர்களின் அன்பை விட உயர்ந்தது என்றே கூறலாம். தமது சொந்த விடயங்களை உங்களை நம்பி உங்களிடம் கூறுவார்கள். அதன் இரகசியத்தைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை. உங்களின் அன்புக்காக உண்மையான நண்பர்கள் ஏங்குவார்கள். உங்களை எவருக்காகவும் இழக்கமாட்டார்கள்.

**4. நண்பர்கள் உங்களுக்குத் தரும் முக்கியத்துவம்**

அவர்கள் தமக்கென பல சொந்தங்கள் இருந்தபோதும், உங்களுக்கென தனியான ஓர் இடத்தை வைத்திருப்பார்கள். எவருக்காகவும் உங்களை விட்டுக்கொடுக்கமாட்டார்கள். தமது காதலுக்காக உங்களை இழக்கமாட்டார்கள். தமது சுயநலத்துக்காக உங்களைப் பயன்படுத்துவார்கள். அவர்கள் எப்பொழுதும் தமது காதலுக்கு உதவி செய்யவே உங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்றால், அது உண்மையான நட்பில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். ஆரம்பத்திலேயே அவர்களை விட்டுவிலகுங்கள்.

**5. நண்பர்கள் உங்களுக்குத் தரும் மதிப்பு**

எப்பொழுதும் உண்மையான நண்பர்கள் உங்களுக்காகச் செய்யும் உதவிகளைச் சொல்லிக்காட்ட மாட்டார்கள். அவர்கள் உங்களுக்கு செய்யும் உதவிகளைத் தமது குடும்பத்தில் ஒருவராக நினைத்து செய்வார்கள். அவர்கள் உங்களுக்கு செய்த உதவிகளை சொல்லிக்காட்டுகிறார்கள் எனின், அது உண்மையான நட்பில்லை என்பதை உணர்ந்து விலகிக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் நண்பர்களை உண்மையாக நம்பி, அவர்கள் மீது அளவு கடந்த அன்பைக் கொண்டிருக்கும் நிலை அவர்கள் உங்களை ஏமாற்றுகிறார்கள் என்பதை நீங்கள் அறியும்போது அனுபவிக்கும் வேதனைக்கு எல்லையே இல்லை. எனவே ஆரம்பத்திலேயே நீங்கள் உங்களது உண்மையான நட்பை இனம்கண்டு கொள்ளும் போது உங்கள் வாழ்க்கை இனிமையாகின்றது.

இன்றும் தனது நண்பனைத் தவறாகப் புரிந்து கொண்டு, அடுத்தவர்கள் சொன்ன கதைகளை நம்பித் தனது நட்பைத் தூக்கி எறிந்துவிட்டு பிரிந்து வாழும் நண் பர்களும் உள்ளனர்.

முதலில் உங்கள் நண்பர் களை முழுமையாக நம்புங்கள். அவர்கள் செய்யும் சிறு தவறுகளை மன்னியுங்கள். தப்பே செய்யாத மனிதர்கள் எவரும் உலகிலில்லை.

எனவே முதலில் மன்னிக் கக் கற்றுக் கொள்ளுங்கள். அவர்களது வார்த்தைகளுக்கு மதிப்பளியுங்கள். அவர்களதுநட்பை முழு மையாக ஏற்றுக் கொள்ளுங்கள். எவருக்காகவும் உங்களதுநட்பையோ, நண்பனையோ விட்டுக் கொடுக்காதீர்கள். எந்த நிலைமை வந்தபோதும், நீங்கள் கொண்ட நம்பிக்கையை இழக்காதீர்கள். கடைசியில் உங் களை நீங்கள் நம்பியவர்கள் விட்டுச் செல்லும் போது உங்களுக்குத் தோள்கொடுத்து உங்களை உயர்த்துவது நட்பென்ற ஒன்றைத்தவிர எதுவுமில்லை.

அப்துல்கலாமின் சிந்தனையில் நட்புக்காக உதித்த சில வரிகள்.

1. எவர் என்னுடைய உண்மையான நண்பன் எனக் கேள்வி கேட்காதே. பதிலாக நான் உண்மையான நண்பனா எனக்கேள். இதன்மூலம் உண்மையான நட்பைப் பெறுவாய்.
2. அதிக உயரங்களை எட்டுவதற்கு உதவும் நண்பரைப் பெற்றிருப்பது சிறந்தது. ஆனால் அதிக உயரங்களில் இருந்து விழும்போது தாக்குப்பிடிக்கும் நண்பனைப் பெற்றிருப்பது கடவுளின் பரிசு.
3. நீ மேலே உயரும்போது நீ யார் என்று உன் நண்பர்கள் அறிந்து கொள்வார்கள். நீ கீழே போகும்போதுதான் உண்மையான நண்பர்கள் எவர் என்று நீ அறிந்து கொள்வாய்.
4. நல்ல நண்பனை விரும்பினால் நல்ல நண்பனாய் இரு.

எனவே உண்மையான நண்பர்களை முதலில் அறிந்து கொள்ளுங்கள். அதன்பின் "நட்பு" என்ற மூன்றெழுத்துக்குப் பின்னால் என்ன அதிசயம் இருக்கின்றது என்பதை நீங்களும் அறிவீர்கள்.

## "என்னெஞ்சு நீ உலாவும் பூங்காவனம்" இறுவட்டு வெளியீடு



கவிஞர் சோ.பத்மநாதனால் எழுதப்பட்டு, திருமதி பவனுஜா கஜாகரனால் பாடப்பட்ட "என்னெஞ்சு நீ உலாவும் பூங்காவனம்" என் னும் இறுவட்டு கடந்த வாரம் யாழ்ப்பாணம் [illegible] எச்சாட்டி [illegible] ஆலயத்தில் வைத்து சின்னத்தம்பி தியாகராசா குடும்பத்தினரால் வெளியிட்டு வைக்கப் பட்டது. இந்த இறுவட்டுக்கு த.றொபேட் இசையமைத்துள்ளார். இதில் கீபோட்டினை த.றொபேட்டும், வயலின்வாத்தியத்தை அ.ஜெயராமனும் தாள ஒலியை வ.பானுதீபனும் வழங்கியிருந்தனர். (ஜ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியைப்பற்றித் தெரிந்து கொள்வோம்

1. பூமி தன்னைத் தானே ஒரு முறை சுழல எடுக்கும் காலம் - 0.99 நாள் அல்லது 23 மணி 56 நிமிடம் 4 செக்கன்
2. சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுக்கும் காலம் - 365.256366 நாள்கள் அல்லது 1.0000175 வருடம்
3. சூரியனைச் சுற்றி பயணிக்கும் வேகம் - 29.783 Km/s
4. பூமியின் சராசரி ஆரை: 6371 Km
5. துருவ ஆரை: 6356.8 Km (பூமி பந்துபோல் உருண்டையாக இல்லாது துருவப் பகுதி சற்றுத் தட்டையாக இருப்பதனால்)
6. சுற்றளவு (கிடை அச்சில்) : 40 075.02 Km
7. நீள் கோள மேற்பரப்பளவு : 510 072 000 $Km^2$
8. கனவளவு - 1.0832073 10 இன் வலு 12 $Km^3$
9. நிறை - 5.9736 10 இன் வலு 24 Kg
10. சராசரி அடர்த்தி : 5.5153 $g/cm^3$
11. மையத்திலிருந்து ஈர்ப்பு விசை : 9.780327 $m/s^2$ அல்லது 0.99732 g
12. தப்பு வேகம் : 11.186 Km/s
13. சாய் கோணம் : 23.439281 பாகை
14. எதிரொளி திறன் : 0.367
15. மேற்பரப்பு வெப்பம் : 184 K(குறைந்த), 287 K (மத்திய), 331 K (அதிக பட்ச)
16. வளிமண்டலத்தில் மேற்பரப்பு அழுத்தம் : 101.3 Pa
17. துணைக் கோள் : 1 (சந்திரன்)




## வரலாற்றில் இன்றைய தினம்

1916 - உலக மகா யுத்தம் 11 மஹ்தபா சண்டை. எகிப்து சினாய் குடா நாட்டில் துருக்கிய படையை கூட்டுப் படைகள் தோற்கடித்தன.
1941 - உலக மகாயுத்தம் – 1 எகிப்தின் கெய்ரோவை ஆஸ் திரேலிய நியூசிலாந்து படைகள் வந்தடைந்தன.
1958 - உலகின் முதலாவது உயர்ந்த உருக்குக் கோபுரம் 'டோக்கியோ கோபுரம்' அர்ப்பணம்.
1970 - 1368 அடி (417 மீற்றர்) உயரமான உலகவர்த்தக மைய வடக்குக் கோபுரம் 'நியூயோர்க்' உலக அதியுயர் கட்டடமாக நிர்மாணம்.
- நியூயோர்க் நகரில் உலக வர்த்தக நிலையத்தின் வடக்குக் கோபுரம் 1368 அடி (417) மீற்றர் உயரத்தை அடைந்தது. அந்தக் காலத்தில் உலகின் மிக உயர்ந்த கட்டடமாக அது விளங்கியது.
1972 - 6.5 அளவிலான நில நடுக்கத்தில் நிக்ககுவா தலைநகர் மனகுவாவில் 10,000 பேர் சாவு.
- அன்டீஸ் விமான பேரிடரின் 73 நாள்களின் பின் 16 பேர் நரமாமிசம் உண்டு தப்பிப் பிழைத்த நிலையில் மீட்பு.
- மத்திய அமெரிக்க நாடான நிக்கரகுவாவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் சுமார் 10,000 பேர் சாவு.
- சிலியில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிர் தப்பிய 16 பேர் 73 நாள்களின் பின் மீட்கப்பட்டனர்.
1979 - ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை சோவியத் யூனியன் துருப்புகள் கைப்பற்றின.
- ஆப்கானிஸ்தானில் சோவியத் போர். ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் சோவியத் படைகள் நிலைகொள்ளல்.
1986 - வானில் வைத்தோ தலையில் தரித்தோ எரிபொருள் நிரப்பப்படாமல் உலகைச் சுற்றி வந்த முதலாவது விமானம் 'வொயேஜர்' கலிபோர்னியா எட்வேட் விமானத் தளத்தில் தலையிறங்கியது டிக் றுட்டான், ஜீனா யூஹர் விமான ஓட்டிகளாவர்.
1990 - யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிவதற்கு ஆதரவாக ஸ்லோவேனியாவைச் சேர்ந்த 88 சதவீதமான மக்கள் வாக்களித்தனர்.
2002 - ஈராக்கின் மிக் 25 விமானத்தின் மூலம் ஆளில்லா விமானமொன்று சுட்டுவீழ்த்தப்பட்டது. உலகில் ஆளில்லா விமானமொன்று தாக்குதலொன்றில் சம்பந்தப்பட்டமை அதுவே முதல் தடவை.
2003 - சீனாவில் இயற்கை வாயு அகழ்வுக் களமொன்றில் ஏற்பட்ட வெடிப்பினால் 234 பேர் சாவு
- "பெற்றோசைனா" இயற்கை வாயு வயலில் வெடிவிபத்து 234 பேர் வரை சாவு.
2005 - அஸர்பைஜானில் ஏற்பட்ட விபத்தினால் 23 பேர் சாவு.
- சூடானுக்கு எதிராக ஆபிரிக்காவின் சாட் நாடு போர்ப் பிரகடனம் செய்தது.
2007 - நேபாவி இராச்சியம், பிரதம மந்திரி தலைமையிலான சமஷ்டிக் குடியரசாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



## வர்ணம் தீட்டலாம் வாங்க





## யானை

சுளகு போன்ற காது
சுவர் போன்ற உடம்பு.
தூண் போன்ற கால்கள்.
குஞ்சரம் போன்ற வால்.
யானை! யானை! யானை!
யானை வருகுது பார்!

வெள்ளைத் தந்தம் பார்!
வெள்ளைக்காரரும் விரும்புவார்!
சர்க்கஸ்காரரும் பழக்குவார்!
மரங்கள் இழுக்கும் யானை.
ஆலயத்திலும் இருக்கும்
ஆசி கூடக் கூறும்.

யானை யானை யானை
யானை வருகுது பார்!
சேனையும் கண்டு நடுங்கும்.
யானை முகம் பிள்ளையாருக்கு.
யானை நிறம் கறுப்பு.
ஐராவதம் பெயர் கொண்ட
வெள்ளை யானை.

# சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்

ஹொராங்கு நாட்டின் அரசன். போரில்தோல்வி அடைந்ததால் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனது படை எண்ணிக்கையில் மிகவும் சிறியதாக இருந்ததால் அவனால் போரில் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததால், அந்த அரசன் வெற்றி பெற்றான். தோல்வியுற்ற அரசனைக் கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் தோல்வியுற்ற அரசன் காட்டுக்கு ஓடிச் சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.



தோல்வியைக் கண்ட அரசன் மிகவும் மன வருத்தம்கொண்டான். மனச்சோர்வால்துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்தச் சிறிய சிலந்தியின் செயல் அவனது கவனத்தைக் கவர்ந்தது. அது குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. [illegible] போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது. இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தனது முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் இந்தச் சிறு சிலந்தியே பலமுறை தோல்வியடைந்தும் தனது முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்? நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணினான். மறுபடியம் தனது எதிரியுடன் போர் புரியத் தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டுக்கு வெளியே சென்று தனது நம்பிக்கையான ஆள்களைச் சந்தித்தான்.

தனது நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்துப் பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தனது எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தனது அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்தச் சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் தினம்

மருத்துவர் இ.சிவசங்கர்

பிரபஞ்சத்தின் தோற்றம், இருப்பு என்பவற்றின் காரணங்களையும் நோக்கத்தையும் பற்றி தொடர் தேடுதலில், மானிட சமூகம் வரலாற்றுக் காலகட்டங்களினூடு ஈடுபட்டு வருகின்றது. தத்துவவியலாளர்கள் என்போர் தத்தமது அறிவுக்கெட்டிய வகையில் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.


சமயவாதிகளோ, தத்தமது சமய நம்பிக்கை கட்டுமானங்களுக்கு அமைவான கருத்துக்களை மக்கள் முன்வைக்கின்றனர். உண்மையின் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள அகப்பார்வைக்கூடான அகத்தேடுதலே ஒரேவழி என்பதை உணர்ந்தவர்கள், அகத்தேடுதலில் தம்மை ஈடுபடுத்தி பிரபஞ்ச இருப்புசார் உண்மைகளை வெளிப்படுத்தினர்.

இவர்கள் ஞானிகள், ரிஷிகள் என வரலாற்றில் அறியப்படுகின்றனர். உண்மையை அறிந்தவர்களின் கூற்று "உண்மையை முழுவதுமாக அறியமுடியாது, ஆனால் உண்மையுடன் ஒன்றிணையலாம்" என்பதே ஆகும்.

பிரபஞ்சத் தோற்றம், இருப்பு என்பவற்றின் சாத்தியமான அறிதலின் எல்லையை அடைந்துவிட்ட ஞானிகள், அதன்பின் உயிர் வாழ்வின் நோக்கம் பற்றி உய்த்து அறிதலில் தமது கவனத்தையும் சக்தியையும் ஒருங்கு குவித்தனர். மனித உயிரி அடையக்கூடிய உயரிய நிலையை தம்மளவில் அடைந்து கொண்ட இவர்கள், ஏனையோருக்கும் அவற்றை வெளிப்படுத்தி வைத்தனர். பேரானந்த நிலையை அடைந்த இவர்கள் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பதாக நடந்து கொண்டனர்.

இத்தகையோரின் அனுபவ வெளிப் படுத்தல் என்ன? மனித வாழ்வு என்பது வெறுமனே ''பிறந்தோம்; உண்டு குடித்து காலத்தை கடத்தினோம்; இறுதியில் இறந்தோம்" என்ற நிலைக்கு அப்பால் உள்ளதாகக் கூறி நிற்கின்றனர். மனித வாழ்வின் பயன் இலக்கு என்பது பிரபஞ்ச முழுமையுடன் இணைவதான பேரானந்த நிலையை அடைந்து கொள்ளலேயாகும். மனிதர்கள் அனைவரும் ''சுகம்'' நிலையை அனுபவிக்கவே விரும்புகின்றோம். அதை அடைவதற்கே தேடி ஓடி அலைகின்றோம். வெளியில் தேடி அலைவதால் நாம் பெறவிரும்பிய சுகத்தை மேலும் இழந்து, விரக்தியும் சலிப்பும் அடைகின்றோம். வாழ்வு என்பது துன்பம் என்று முடிவெடுக்கின்றோம். எம்மை நாமே பரிதாபமாக்கிக் கொண்டு விடுகின்றோம். பேரானந்த நிலையை அடைவதற்கான பாதையில் எமது வாழ்வைப் பயணிக்க வைத்தலே புத்திசாலித்தனம் ஆகும். அத்தகைய பயணமே எமக்குச் சுகத்தை நல்கும்.

நாம் பிறந்தது, உலகத்து இன்பங்களை அனுபவிப்பது, உழைப்பது, சொத்துச் சேர்ப்பது பின்னர் அனைத்தையும் விட்டு விட்டு இறந்து போவது என்பதற்கல்ல. நாம் சுகத்தை அனுபவிக்கவே உழைக்கின்றோம். சொத்துச் சேர்க்கின்றோம். இன்பங்களை அனுபவிப்பதும், அதனூடாக நாம் சுகம் பெறவே என்று கருதுகிறோம். ஆனால் கவனித்துப் பார்த்தால் உழைத்தல், சொத்துச் சேர்த்தல், இன்பங்களை அனுபவித்தல் போன்ற செயற்பாடுகளால் சுகம் பெறவில்லை என்ற உண்மையை வாழ்வின் நடுக்கூற்றுக் காலத்தில் கண்டு கொள்கிறோம். மனித வாழ்க்கையின் நடுக்கட்டத்துக்கு நாம் வந்தடையும்போது நாம் பயணித்த பாதை தவறான பாதை என்பதைக் கண்டுணரும் சாத்தியம் உண்டு. ஆனாலும் எம்மில் பலர் நாம் பயணித்த, பயணிக்கும் பாதை எமக்கான சுகத்தைத் தரமாட்டாது என்பதை உணரமறுத்து, அந்தத் தவறான பாதையிலேயே தொடர்ந்தும் பயணித்து, சலிப்பு, விரக்தியுடன் இறப்பைச் சந்திக்கின்றனர்.



ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்ற கேள்வி இங்கு தேவையற்றது. வாழ்வில் நடுப்பகுதிக்கு வந்து விட்ட நிலையில் எமது வாழ்வை மீள்ஒழுங்குபடுத்தல் சாத்தியமாகும். வாழ் வின் நடுக் கூற்றுக் காலத்தில், நாம் வாழ்ந்து முடித்த வாழ்க்கையைத் திரும்பிப்பார்த்து, அசைபோட்டு ஒழுங்குபடுத்தி, ஒருங்கமைத்தல் நாம் மேற்கொண்டு வாழப்போகும் வாழ்வை பயனுள்ளதாக, சந்தோசமாக ஆக்குவதற்கு அத்தியாவசியம் என்று உளவியலாளர்களும் கூறுகின்றனர். கீழைத்தேய ஆச்சிரம பிரிவுகளுக்கமைய கிரகஸ்தம் எனும் குடும்ப வாழ்வுக் கடமைகள், வாழ்வின் நடுக்காலப்பகுதியில் நிறைவடைய, சந்நியாச நிலைக்குத் தயார்ப்படும் வானப்பிரஸ்த நிலை ஆரம்பமாகின்றது. உளவியல், ஆன்மிக நிலையாளர்களின் வழிகாட்டலின்படி வாழ்வின் நடுக்காலப்பகுதியுடன் எமது அகம் சார்ந்த செயற்பாடுகள் அதிகரிக்க வேண்டிய காலமாகும். வேலைகளிலிருந்து ஓய்வுபெற்ற காலமாக இது காணப்படுகின்றதேயன்றி வாழ்க்கைப் பயணத்தில் ஓய்ந்திருக்கும் காலமல்ல இது. மேலும் இதனுடன் சேர்த்து முதுமை நிலை என்று கூறி, முதுமைக்காலம் என்பது இயலாமையானது என்றுகூறி, வெட்டி வாழ்க்கை வாழ்ந்து வெறுமனே காலத்தைக் கடத்தி அழிக்கின்றோம். இயலாமைக்கும், ஓய்ந்திருத்தலுக்குமான காலமல்ல இந்தக் காலம்.

நடுவயது தாண்டிய நிலை, முதுமைக் காலமல்ல. இது முதிர்ச்சிக் காலமாகும். முத்தி முதிர்ந்த நிலையை அடைந்ததை, கனிகொடுக்கும் நிலையை ஏற்படுத்துவதே அவர்களின் கடமை செயற்பாடுகளாகும். கனிகொடுத்தல் இரு திசையில் அமையும். ஒன்று அக உலகத்தில் ஈடுபட்டு ஆன்மிகத்தில் பழுத்தல், மற்றையது, வெளிவாழ்வில் தனது அனுபவங்களை, வளங்களை சமூகத்துக்கு வழங்குதல் ஆகும். மேற்கூறிய வகையில் அகபுற பயன்களை நல்குவதற்கான பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடத் திட்டம் வகுத்து செயற்படவே இந்தக்கால வாழ்வுக் கட்டத்தினரின் தமக்கான, சமூகத்துக்கான கடமையாகக் காணப்படுகின்றது. இந்த மூப்படைதலை சரியாகக் கையாண்டால் இதுவே உண்மையான பூப்படைதல் காலமாகும் என்பதைக் கண்டு கொள்ளலாம். வெளிநோக்கிய சமூக செயற்பாடுகளால் ஒருவகை மலர்ச்சியையும், அகம்சார் செயற்பாடுகளால் ஆன்மிக மலர்ச்சி யையும் எம்மால் இந்தக் காலத்தில் அனுபவிக்க முடியும்.

மேற்கூறிய எமது அகப்புற செயற்பாடுகள் இரண்டுமே எமக்கும் சமூகத்துக்கும் பயன் நல்குபவைகளே. இந்தக் கால கட்டத்தில் எமது அனுபவங்களை சமூகத்துக்கு நல்குதல் என்பது எமக்கு ஆத்ம திருப்தியைத் தருவதுடன், எமது அகத்தையும் செழுமைப்படுத்தி கனியப் பண்ண உதவுகின்றது. மேலும் சமூகத்துக்கான நன்மை என்று பார்த்தோமானால் அகச் செழிப்படையாதவரைவிட அகச்செழிப்படைந்தவரால் வழங்கப்படும் செயற்பாடுகள், சேவைகள் சமூகத்துக்கு உண்மையான நின்று நிலைக்கும் பயனை நல்குவதைக் கண்டுகொள்ளலாம்.

தம்பட்டம், ஊழல் போன்ற அகங்கார சுயநல செயற்பாடுகள், அகநிலையில் செழிப்படைந்தவரின் செயற்பாடுகளில் காணப்படுவதில்லை. சமூகநோக்கு மட்டுமே அத்தகையவர்களிடம் செல்வாக்குச் செலுத்தும். மக்களின் நலன்களில் உண்மையான நேசம் கொண்டிருப்பர். ஆகவே முதிர்ச்சிக் காலத்தில் அகவாழ்வுக்கு தரப்படும் நேரமும் சக்தியும், சமூகத்துக்கு நன்மை பயப்பதாகவே அமைகின்றது.

வாழ்க்கையின் நடுக்காலப் பகுதிவரைக்கும் நாம் வாழ்ந்த வாழ்வால் எமக்கு ஏற்படும் அனுபவமும் முதிர்ச்சியுமே எமக்குக் கிடைக்கும் உண்மையான "ஓய்வூதியம்'' ஆகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஓய்வூதியமாக கிடைக்கும் இந்த அனுபவ முதிர்ச்சியை முதலாகப் போட்டுச் செயற்பட்டோமேயானால், நடுக்காலத்துக்கு பிற்பட்ட வாழ்வை நிறைவானதாக்கி ''சுகம்'' காணலாம். இதுவரை காலமும் பணம் பெற்றுக்கொள்வதற்காக உழைத்த நாம் இதன்பின்னர் நிறைவு, சுகம் பெறுவதற்கு உழைக்க வேண்டும். இத்தகைய வாழ்நிலையை அமைப்பதற்கு, பணத்துக்காக உழைக்கும் காலத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டியேற்படும். இதற்கு எமது உண்மையான தேவைகள் என்ன, ஆடம்பரத் தேவைகளும் எவை எவை என இனம் காணப்பட வேண்டும். தேவைக்கும், ஆசைக்குமான வேறுபாட்டைப் புரிந்து கொண்டால், பணத்தின் தேவையைக் குறைத்துக் கொள்ளலாம். இதனால் பணம் தேடலுக்கான நேரத்தை குறைத்து மிகுதியாக வருகின்ற நேரத்தை எமக்கும் சமூகத்துக்கும் நிறைவை, சுகத்தைத் தரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். எமது செயற்பாடுகள், செயல்களை அடிப்படையில் இரண்டு வகையாகக் கண்டு கொள்ளலாம்.

1. புலனின்பத்தை நாடுகின்ற, அதனால் எம்மை தலைப்படுத்துகின்ற கர்மங்கள். இவற்றை விடய கர்மங்கள் என்பர்.
2. எமக்கு விடுதலை அளித்து சுகத்தை நல்கும் ச்ரேயோ கர்மங்கள் ஆகும்.

விடய கர்மங்கள் எனப்படுபவைகளால் ஆனந்தமோ, அமைதியோ கிடைக்காது. மாறாக துன்பமும் குழப்பமுமே விளைவாகும். ஆனால் விடுதலை அளிக்கும் ச்ரேயோ கர்மங்களில் ஈடுபட்டால் சீரான ஆனந்தத்தையும், மங்கலத்தையும் அது விளைபொருளாகத் தரும். உலகியல் வாழ்வின் தேவைக்காகவும், இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவும் விய கர்மங்களில் ஈடுபட்டாலும் அதில் அதீத பற்று வைக்காது செயற்படுவோமானால் அதனால் ஏற்படும் கெடுதல் குறையும். வாழ்க்கையின் நடுப்பகுதி வரை விய கர்மங்களில் ஈடுபட்டிருந்தாலும், அதன் பின்னர் விய கர்மங்களை படிப்படியாகக் குறைத்து, விடுதலை அளிக்கும் ச்ரேயோ கர்மங்களில் நேரத்தையும் சக்தியையும் பயன்படுத்த முயலவேண்டும்.

வாழ்வின் நிலையாமையை உணர்ந்து கொள்ளாமையும், அதன் விளைவாக நாம் இதுவரை வாழ்ந்து வந்த வாழ்வே தொடர்ந்து நிலைக்கப்போகின்றது என்ற மாயையின் வசப்பட்ட மயக்கநிலையே, வாழ்ந்து வரும் வாழ்விலிருந்து விடுபட நாம் முயற்சிக்காமைக்கான காரணமாகும். அத்துடன் தற்போதைய வாழ்வில் ஏற்பட்டு விட்ட பற்று எனும் பிணைப்பின் காரணமாக, கடந்துவந்த வாழ்விலிருந்து விடுபட முடியாமல் அதிலேயே பிணைபட்டு, இழுபட்டுக் கொண்டு நிற்கின்றோம்.

கடந்து விட்ட பருவத்துடன் முடிந்துவிட்ட வாழ்விலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். இதுவே புத்திசாலித்தனமான பயன் விளைவிக்கும் நடவடிக்கையாகும். இவ்வாறு முடிந்து விட்ட வாழ்விலிருந்து எம்மை விடுவித்துக் கொண்டு விலகும்போதே வாழ்ந்து முடிந்த வாழ்வின் அனுபவங்களை அசைபோட முடியும். அத்தகைய அசை போடலுக் கூடாகவே எமது வாழ்வில் ஏற்பட்ட நன்மை தீமை, சுகதுக்கம், வெற்றி தோல்வி, போன்ற அனுபவங் களையும் அவை ஏற்படுத்திய எதிரெதிர் உணர்வுகளையும் ஒன்றிணைத்து முழுமையாக்குவதன் ஊடாகவே எமக்குள் நிறைவைக் காணமுடியும்.

> “ உளவியல், ஆன்மிக நிலையாளர்களின் வழிகாட்டலின்படி, வாழ்வின் நடுக்காலப்பகுதியுடன் எமது அகம் சார்ந்த செயற்பாடுகள் அதிகரிக்க வேண்டிய காலமாகும். வேலைகளிலிருந்து ஓய்வுபெற்ற காலமாக இது காணப்படுகின்றதேயன்றி வாழ்க்கைப் பயணத்தில் ஓய்ந்திருக்கும் காலமல்ல இது. ”

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூசணம் இராசையா ஸ்ரீதரனின்

# நர்த்தன விநாயகர் வரலாற்று நூல்

லக்ஸ்மன்

விநாயகப் பெருமான் எந்த வடிவத்தில், எந்த உருவத்தில், அம்சத்தில், எப்படி இருந்தாலும் எமக்குத் தெரிந்த ஒரே பெயர் பிள்ளையார். ஆனைமுகத்தோடும், மனித சரீரத்தோடும் அவதரித்தபோது இது யார் பிள்ளை என்று கேட்கப், பிள்ளையார் என்று பதில் வந்ததாம் எனக்குறிப்பிட்டு, அவர் தொடர்பான விடயங்களைத் தெளிவுற எடுத்துக் கூறியுள்ளது, அத்தியடிப் பதியுறையும் நர்த்தன விநாயகர் என்னும் நூல். கலாபூசணம் இராசையா ஸ்ரீதரன் எழுதிய இந்த நூல், கடந்தவாரம் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் கோயிலில் வெளியிடப்பட்டது. ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.ஜெயராசா தலைமை வகிக்க, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளிடமிருந்து நூலின் முதல் பிரதியை அத்தியடி கிராம அலுவலர் நா.சுந்தரராஜன் பெற்றுக்கொண்டார்.

அத்தியடிப் பிள்ளையார் கோயிலின் ஆரம்ப வரலாறு மற்றும் விநாயகர் திருவருள் குறித்த தத்துவ விளக்கங்கள், விநாயகருக்குரிய விரதங்கள், அருகம் புல்லின் பெருமை, வன்னி இலையின்







மகிமை குறித்த விடயங்கள் நூலில் நன்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்துக்கள் எந்தக் கடமைகளை ஆரம்பிக்கத் தொடங்குவதற்கு முன்பாகவும் விநாயகரைத் தொழுது தொடங்குவது மரபு. அந்த வகையில் அத்தியடியைச் சேர்ந்த மக்கள் உலகெங்கும் நிறைந்து விளங்கும் எல்லாம் வல்ல பரம்பொருளான ஓங்காரத்தின் உட்பொருளான அத்தியடி விநாயகர் குறித்த நூல் ஒன்று வெளிவர வேண்டும் என்ற அவாவுடையவர்களாக, நீண்ட நாள்கள் காத்திருந்தனர். அது தற்சமயம் நிறைவேறியுள்ளமை குறித்து மன நிறைவு கொண்டுள்ளனர். இன்று, பெரும்பாலான இந்து ஆலயங்களின் வரலாறுகள் மறைந்து வரும் நிலை காணப்படுகின்றது. இந்து மதத்தின் பெருமைகளுக்கும், தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு நெறிகள் பேணப்படுவதற்கும், மூலகாரணமாகவுள்ள ஆலயங்களின் வரலாறுகள் இன்றைய காலத்தின் தேவை என்பது யதார்த்தமாகும். அதற்கு இதுபோன்ற வரலாற்று நூல்கள் அவசியம்.

சைவ விழாக்கள், விரதங்கள் குறித்து பத்திரிகைகளூடாக தகவல்களை வழங்கும் ஆன்மிக எழுத்தாளரான இராசையா ஸ்ரீதரனின் ஆன்மிகப் பணியில் இந்த நூல் வெளியீடும் இடம்பெறுவது சிறப்பு அம்சமாகும்.

இது மிகவும் உன்னதமான பணியென நல்லை முதல்வரும், அத்தியடி விநாயகரின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக் கூறியிருப்பதன் மூலம் எமக்கான தேவை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என கு.சரவணபவானந்தனும் தெரிவித்துள்

> “இந்து மதத்தின் பெருமைகளுக்கும் தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு நெறிகள் பேணப்படுவதற்கும் மூலகாரணமாகவுள்ள ஆலயங்களின் வரலாறுகள் இன்றைய காலத்தின் தேவை என்பது யதார்த்தமாகும்.”

ளமை பொருத்தமானதே. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நா.யோகீஸ்வர சிவவாச்சாரி, யார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரின் ஆசிச் செய்திகளும் நூலின் அவசியத்தையும் சிறப்பையும் எடுத்துக் கூறியிருப்பது கலாபூசணம் இராசையா ஸ்ரீதரனின் அத்தியடி பதியுறையும் நர்த்தன விநாயக நூலின் கனதியான சிறப்புக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

# முதியோர் தினம்

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை அளிக்கும் கர்மங்களான யோகம், ஜபம், தியானம் என்பவற்றுடன் ரிஸ்காம கர்மம் எனும் பயன் கருதாத செயல் (சேவை) என்பனவும் அமைகின்றன. இத்தகைய வாழ்க்கை முறையை படிப்படியாக நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இதற்கான படிப்படியான தயார்ப்படுத்தலுக்கான காலத்தையே வானப்பிரஸ்த காலம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. உலகியல் வாழ்வு முறையிலிருந்து ஆன்மிக வாழ்வு நிலைக்கு எம்மைப் படிப்படியாக மாற்றி அமைத்து, சந்நியாச நிலைக்கு தயார் படுத்தலுமே வானப்பிரஸ்த காலத்தில் செய்யக் கூடியவையாகும்.

எமது குடும்பப் பொறுப்புக்கள் முடிவடையும் நிலையை, காலத்தைக் கண்டு கொள்ள வேண்டும். அந்தக் காலத்துடன் நாம் இவற்றிலிருந்து கழன்றுவிட வேண்டும். குடும்ப சமூக கடமைகளை பொறுப்பெடுத்து நடத்தும் காலமாக கிரகஸ்த காலம் அமைகின்றது. பின்னர் அதிலிருந்து கழறுகின்ற காலமாக வானப்பிரஸ்த காலம் அமைகின்றது. பிள்ளைகளுக்கு கல்வியூட்டி, தொழில் செய்யும் ஒழுங்குகளை செய்வித்து, மூத்த பிள்ளைக்கு திருமணம் முடித்து வைப்பதுடன் அந்தத் தம்பதியினரின் கிரகஸ்த கடமைகள் முடிவதாக எமது முன்னோர்கள் அந்தக்கால வாழ்வின் ஒழுங்குக்கமைய வகுத்தனர். அதனுடன் மூத்த பிள்ளை குடும்ப சமூகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார். தற்போதைய எமது சமூக வாழ்வு நிலையின்படி பார்த்தாலும் அனைத்துப் பிள்ளைகளின் திருமணங்களை முடித்து வைப்பதுடன், கிரகஸ்த கட மைகளை முடித்துக்கொள்ள வேண் டும். ஆனால் பேரப்பிள்ளைகள் பிறந்த பின்ன ரும் கிரகஸ்த தன்மைகளிலிருந்து விடு படாது வாழும் நிலையை பலரிடம் காணலாம்.

தொழில் செய்யும் வாய்ப்புள்ள ஆண், பெண் இருபாலாரும் கடைசி வரையில் (இறப்பு வரையில்) தொழில் செய்து பணம் ஈட்டுதலையும், பிள்ளைகளின் குடும்பப் பொறுப்புக்களைச் சுமந்து திரிவதுமே நடக்கின்றது. எமது அனுபவங்களை பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்வதனூடாக அவர்களை கிரகஸ்த (குடும்ப சமூக) கடமைகளைச் சரிவர ஆற்றுவதற்கு பழக்கி உதவலாம்.

மேலும் நோக்குவோமானால், சமூகப் பொறுப்புக்களிலிருந்து விடுபடும் செயல் முறைகளையும் காண்கிறோமில்லை. இறப்புவரையில்சனசமூகநிலையங்கள், கோயில் தர்மகர்த்தா சபை, அரசியல் போன்றவற்றில் ஈடுபட்டு கொண்டிருப்பதைக் காண்கிறோம். இத்தகைய நிலைப்பாடுவானப்பிரஸ்தநிலைக்கூடாக சந்நியாச நிலைக்கு போவதை தடுப்பதுடன் சமூக விடயங்களில் நடுவயதினரின் பங்களிப்பையும் குழப்புகின்றது. பொதுவாக பார்க்குமிடத்து இளைஞர்கள் செயல்வேகம் மிக்கவர்கள், முதியவர்கள் அனுபவம் நிரம்பப் பெற்றவர்கள், நடுவயதினரே இந்த இருவரையும் ஒன்றிணைத்து தலைமைப் பொறுப்பெடுத்து நடத்த வேண்டியவர்கள். அதுவே சிறந்த ஒழுங்கு.

இத்தகைய வாழ்வுநிலைக்குப்போவதற்கு, வாழ்வின் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொண்டு உலகியல் பற்றுக்களை படிப்படியாக குறைத்துக்கொள்ள முயல வேண்டும். உலகியல் பற்றுக்களே எம்மை ஆனந்தத்தை அனுபவிக்க விடாது அலைக்கழிக்கின்றன. எமக்கு உலகியல் மீது இருக்கும் பற்றின் காரணமே குடும்பக் கடமை, அது இது என்று சொல்லிக் கொள்வதெல்லாம். பற்றுக்களிலிருந்து விடுபடமனமில்லாமலே, உலகியல் விடயங்களை பொறுப்புக்கள் என்று கூறிச் சுமந்து திரிகின்றோம். எமக்கான உண்மையான கடமைகள் என்ன, என்ன பற்றின் நிமித்தம் கைவிட மனமில்லாமல், எமது தலையைவிட்டு இறக்க மறுக்கும் செயற்பாடுகள் எவையெவை? என்பதை உள்நோக்கி ஆராய்ந்து கண்டுகொள்ள வேண்டும்.

எமது உண்மையானதேவைகளும்கடமைகளும் எவையெவை என்று தெரிந்து, தெளிந்து கொள்வது வாழ்க்கையின் அடுத்த பகுதியை முழுமையாகப் பயனுள்ள வகையில் வாழ்வதை இலகுபடுத்தும், உறுதிப்படுத்தும். தற்போதைய வாழ்வு நிலையில் “எமக்கான வாழ்வு” என்பது அறுபதுகளில் தொடங்குகின்றது என்று கண்டுகொள்ளல் இந்தக் காலகட்டத்துக்கான எமது செயற்பாடுகளை தீர்மானித்து வரையறை செய்வதற்கு உதவியளிக்கும்.

பொதுவாக எம்மால் கூறப்படும் “இறுதிக் காலம், கடைசிக் காலம்” என்பவை இறப்பை எதிர்பார்த்து பயத்துடன் காத்திருக்கும் காலமாக எண்ணப்படுகின்றது. ஆனால், உண்மை அதுவல்ல. இறுதிக் காலம் என்பது இறுதிக்கட்டமாகும். வாழ்வின் முன்னைய கட்டங்களில் “சம்பாதித்த” அனைத்து அனுபவங்களையும் ஒழுங்கமைத்து வாழ்வின் நிறைவை சுவைத்து மகிழும் காலமாகவே இது அமைகின்றது.

“நான் யார்” என்ற தேடலே பிறிவியின் நோக்கம் ஆகும். எம்மை நாம் கண்டு கொள்ளும் வாய்ப்புக்காகவே பிறவி எடுக்கின்றோம். ஆனால் அனேகமானோர் அதைக் கண்டடையாமலேயே பிறவியை முடித்துக் கொள்கின்றனர். இது வருந்தத்தக்க விடயமாகும். இந்த “நான் யார்” என்ற தேடலை, இளமையிலேயே தொடங்க வேண்டும் என்பதே ஆன்மிக நிலைப்பாடாகும். ஏனெனில் இதற்காகவே நாம் பிறவி எடுத்துள்ளோம். ஆனால் வந்த இடத்தில் குடும்ப சமூகங்களின் பற்றில் தள்ளப்பட்டு வந்த விடயமாகிய “நான் யார்” என்பதைக் கண்டுகொள்ளாமலே சென்று விடுகின்றோம். பிறவி பயனற்றதாகி விடுகின்றது. எனவே தான் இத்தகைய தேடலை வாழ்வின் நடுக் காலங்களிலிருந்து ஆரம்பிக்க வகுப்பட்டுள்ளது. பிறவியின் இலக்கை அடைய வாழ்வின் பிற்பகுதிக் காலத்தை பயன்படுத்துவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு



## அப்பிள் நெட் போல்ஸ்

கிறிஸ்மஸ் தின கொண்டாட்டங்களுக்காக இந்த வருடம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் அலங்காரப் பொருள் அப்பிள் நெட் போல்ஸ். தற்போது அனேகமான அலங்காரப்பொருள்கள் ரேஜிபோமில் தயாரிக்கப்படுகின்றன. இந்த அலங்காரப் பொருள் ஒன்று - 60 ரூபாவுக்கும், ஏனைய பழங்கள் ஒரு பைக்கெட் 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 140 | – | 100 | 120 | 140 | 120 | 120 |
| கத்தரி | 160 | 180 | 160 | 160 | 160 | 160 | 110 |
| கரட் | 200 | 300 | 200–300 | 180 | 200–280 | 300 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 30 | 30 |
| பயிற்றை | 150 | 240 | 250–300 | 200 | 220–280 | 300 | 250 |
| பாகல் | 300 | 320 | 400 | 400 | 350–400 | 380 | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 80–90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 100 | 120 | 140–150 | 180 | 120 |
| பூசணி | 50 | 50 | 50 | 50 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 160 | 180 | 260 | 180–200 | 140 | 150 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 70 | 40–60 | 60 | 40 |
| கீரை | 40 | – | 50 | 30 | 40–50 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 50 | 30–40 | 40 | 60 |
| பச்சை மிளகாய் | 1000 | 650 | 700 | 700 | 700–800 | 1000 | 700 |
| புடோல் | 140 | 110 | 120 | 120 | 120–130 | 160 | 120 |
| கோவா | 120 | 160 | 140 | 140 | 150–160 | 160 | 150 |
| வெண்டி | 200 | 140 | 150–200 | 120 | 140 | 120 | 120 |
| போஞ்சி | 300 | 180 | 280 | 280 | 240–260 | 320 | 250 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 280 | 140–160 | 200 | 160 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 50–60 | 40–50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 80 | 80–100 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 160 | 120–200 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20–25 | 20 | 15 |
| கறிமிளகாய் | 500 | – | 300 | 360 | 400–450 | – | 350 |
| இராசவள்ளி | 240 | 160 | 160 | 180 | 160–180 | 160 | 200 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 200 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | - | - |
| பாரை | 450 | 500 | - | 500 | 400 | 400 |
| சுறா | 500 | 600 | - | 600 | 1000 | - |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 250 | - |
| விளை | 650 | 500 | 400 | 450 | 300 | 400 |
| சூரை | 250 | 350 | 300 | 300 | 400 | - |
| கும்பிளா | 300 | 300 | 300 | 400 | - | 200 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 400 | - | - |
| ஓரா | 300 | 450 | 300 | 400 | - | 350 |
| திரளி | 200 | 300 | 100 | 350 | 150 | - |
| நகரை | 150 | 250 | 100 | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 120 | 200 | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 300 | 300 |
| திருக்கை | 150 | 350 | - | 300 | 300 | - |
| பாலை | 250 | 200 | - | 400 | 350 | - |
| வாளை | 100 | 150 | 200 | 350 | 250 | 200 |
| கொய் | 100 | 150 | 80 | 100 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 300 | 250 | - | 300 |

## சமையலறை எப்படி இருக்க வேண்டும்?



வீட்டிலே பெண்கள் அதிக நேரத்தைச் செலவிடும் இடம் என்றால், அது சமையலறை தான். ஏனெனில் காலை எழுந் தவுடன் தேநீர் போடுவது, உணவு தயாரிப்பது, மதிய உணவு, இரவு உணவு என குடும்ப உறுப்பினர்களுக்கு உணவு சமைத்து பரிமாறுவது பெண்கள் தான்.

வீட்டில் இருக்கும் பெண்களானாலும் சரி, வேலைக்கு செல்லும் பெண்களானாலும் சரி சமையலறை மட்டும் அவர்களுக்கான தனிப் பொறுப்பாகவும், கூடுதல் பொறுப்பாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுசிறு வேலைகளை வீட்டில் உள்ளவர்கள் பகிர்ந்து கொண்டாலும், சமையல் என்பது முழுக்க முழுக்க பெண்களையே சார்ந்ததாகவுள்ளது.

**போதுமான இடம்**

சமையலறை அழகாக காட்சியளிப்பதற்கு அங்குள்ள இடத்தை சரியான முறையில் பயன்படுத்துவது முக்கியமாகும். ஊற்றிவிடுவது, சிந்த வைப்பது, கொட்டுவது, சூடான பாத்திரத்தில் கை, கால்களைச் சுட்டுக் கொள்வது போன்றவை ஏற்படும். இவற்றைத் தவிர்க்க போதிய இடம் விடுவது மிகவும் அவசியமான தாகும். குளிர்சாதனம், மிக்சி, கிரைண்டர் இல்லாத வீடுகளே தற்போது இல்லை. எனவே சமையலறை யில் இவற்றால் இட நெருக் கடியோ, இடித்துக் கொள்வது போன்ற நிலைமையோ ஏற்படாதவாறு பிரத்தியேக இடம் இருக்க வேண்டும்.

**சிங்க்:**

சின்னச்சின்னச் சாமான்களைக் கழுவஒவ்வொருதடவையும்வெளியில் போக முடியாது. சமையல் மேடை அருகிலேயே ஒரு சிங்க் வேண்டும்.

(தொடரும்)

**நாளை**

மார்கழி -08
வியாழக்கிழமை 24.12.2015
திதி: சதுர்த்தசி மா.06.33
நட்சத்திரம்: ரோகினி பி.ப.01.42
ராகுகாலம்: 01.56-03.26 வரை
சுபநேரம்: 07.56- 09.26 வரை

## சமைப்போம் வாங்க



## முருங்கைக் கீரை சூப்

**தேவையான பொருள்கள்:**

நெய் - 1 கரண்டி
சீரகம் - அரைக்கரண்டி
பூண்டு - 5 நறுக்கியது
இஞ்சி - 1 கரண்டி
சாம்பார் வெங்காயம் - நறுக்கியது - 10
தக்காளி நறுக்கியது - 2
முருங்கை இலைகள் - 4 கப்
தண்ணீர் - 6 கப்
உப்பு மிளகு - தேவையான அளவு

**செய்முறை:**

பாத்திரத்தில் நெய் ஊற்றி சீரகம், பூண்டு, இஞ்சி பேஸ்ட் சேர்த்துக் கிளறவும். சிறிது நேரத்துக்குப் பின்னர் வெங்காயம் சேர்த்து 5 நிமிடம் கிளறி தக்காளி சேர்த்து நன்றாக வதக்கவும்.

அதனுடன் கீரை சேர்த்து சிறிது நேரம் கிளறவும். பின்னர் தண்ணீர், உப்பு, மிளகு சேர்த்து நன்றாக கலந்து சிறிது நேரம் வேகவிட்டு இறக்கினால் முருங்கை கீரை சூப் ரெடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக்

மூன்று நாள் பயணமாகக் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி உதவிச் செயலர், கலாநிதி அமி சீரைட், இலங்கைப் படைத்தரப்பிடம் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கலாநிதி அமி சீரைட் கடந்த சனிக்கிழமை, மூன்று நாள் கொழும்புப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள நிலையில், அவரது பயணம் தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மனிதாபிமான உதவிகள், இயற்கைப் பேரிடர்களில் பணியாற்றுதல், வெளிநாடுகளில் அமைதி காப்பு நடவடிக்கைகளில் பங்களிப்பை அதிகரித்தல் போன்றவற்றில் இலங்கைப் படைகளின் எதிர்காலப் பங்கு குறித்து ஆராயவே, கலாநிதி சீரைட் கொழும்பு வந்திருந்தார்.

இவர், இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, வெளிவிவகாரச் செயலாளர் சித்ராங்கனி வகீஸ்வரா ஆகியோருடன் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு, பயிற்சி மற்றும் ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில் ஆளணி உதவி வழங்கல் உள்ளிட்ட இலங்கை அரசின் முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடினார்.

இலங்கைக் கூட்டுப்படைகளின் தளபதி, முப்படைத் தளபதிகள் ஆகியோரைச் சந்தித்த கலாநிதி சீரைட், காணிகளை மீளளித்தல், நல்லிணக்கம், நம்பகமான இடைக்கால நீதிப் பொறிமுறை என்பனவற்றின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், எதிர்காலப் பாதுகாப்புத் தேவைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

அத்துடன், பிரதி வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பிரதி அமைச்சர் இரான் விக்கிரமரட்ண ஆகியோருடன் இராப்போசன விருந்துகளிலும் கலாநிதி சீரைட் பங்கேற்றிருந்தார்.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்புகளுக்கும் முக்கியத்துவம் அளித்த கலாநிதி சீரைட், பாதுகாப்பு உறவுகள் மற்றும் இராணுவக் கொள்கை குறித்து சிவில் சமூகம் முக்கிய பங்காற்றவும் வலியுறுத்தினார்.

இலங்கையின் மூத்த இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்பின் போது பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பான தமது கரிசனையையும் கலாநிதி சீரைட் வெளிப்படுத்தியிருந்தார் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (த-வ)

## உள்ளூராட்சித்

பலப்படுத்துவதற்கு தம்முடன் இணையுமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி விடுத்துள்ள கோரிக்கையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி ஆகிய இடதுசாரிக் கட்சிகள் நிராகரித்துள்ளன.

பொது எதிரணி எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் மகிந்த ஆதரவு அணியில் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, தினேஷ் குணவர்த்தன தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, உதய கம்மன்பிலவின் தூய ஹெல உறுமய ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

மேற்படி கட்சிகளுடன் கூட்டணி வைத்துக்கொண்டால் சிக்கல் நிலை உருவாகும் எனச் சுதந்திரக் கட்சி கருதுகிறது. அத்துடன், இனவாத, மதவாதக் கட்சிகளுடன் இனிமேல் கூட்டணி கிடையாது என்றும் அது அறிவித்துள்ளது.

அதேபோல், மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சியுடன் இணைந்து களமிறங்க மகிந்த ஆதரவு அணியும் தயாரில்லை. எனவே, மூன்றாம் கூட்டணி அமைக்கும் முயற்சியில் மகிந்த அணி இறங்கியுள்ளது. இதைப் பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. மறுபுறத்தில் இந்தக் கூட்டணி பலமடையாமல் இருப்பதற்குரிய நடவடிக்கையில சுதந்திரக் கட்சியின் உயர்பீடம் இறங்கியுள்ளது. இதன் ஓர் அங்கமாகத்தான் இடதுசாரிக் கட்சிகளை வளைத்துப்போடும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. ஆனால், அது தோல்வியடைந்துள்ளது.

மகிந்த ஆதரவு அணியினர் விமலின் கட்சிச் சின்னத்திலா அல்லது தினேஷின் கட்சிச் சின்னத்திலா களமிறங்குவார்கள் என்ற சர்ச்சை தற்போது உருவாகியுள்ளது. இது விடயத்தில் இவ்விரு கட்சிகளுக்குமிடையே முறுகல் நிலை தோற்றம் பெற்றுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கூட்டணி அமைத்து யானை சின்னத்தில் களமிறங்கும் நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இருக்கிறது. தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளிட்ட சிறு கட்சிகளும் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிடவுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு சில தொகுதிகளில் தனித்தும் ஏனைய தொகுதிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்தும் போட்டியிடவுள்ளன. (த-சி)

## மக்கள்

அம்மான்) அந்த அமைப்பில் இணைவது தொடர்பில் பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை, வடக்கு மாகாண முதலமைச்சரை இணைத் தலைமையாகக் கொண்டு தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டிருந்தது. இந்த அமைப்பின் உருவாக்கம் தொடர்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர்களுள் ஒருவரும், முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

பல கட்சிகளின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று பல தரப்பினராலும் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது. எனினும், தலைமைப்பீடம் இதற்குப் பச்சைக் கொடி காட்டவில்லை. கூட்டமைப்புக்குள் ஒரு கட்சியின் எதேச்சாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதாலும், மக்களின் ஆணைக்குப் புறம்பான வகையில் மத்திய அரசுடன் உறவு வைத்திருப்பதாலுமே புதியதொரு அமைப்பு உருவாகியுள்ளது.

இந்தக் கூட்டணியை நான் வரவேற்கிறேன். புதிய அமைப்பின் உருவாக்கம் தொடர்பில் குற்றச்சாட்டை மாத்திரம் முன்வைக்கக்கூடாது. ஏன் இவ்வாறான தொரு அமைப்பு உருவாகியது, அதற்கான காரணம் என்ன என்று ஆராயப்படவேண்டும்.

புதிய கூட்டணியின் முற்போக்கான சிந்தனைகளை வரவேற்கிறேன். அதன் நோக்கம், செயற்பாடு, கொள்கை தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறோம். அத்துடன், கிழக்கு மாகாணத்தையும் உள்வாங்கும் வகையில் மேற்படி அமைப்பு விரிவாக்கப்படவேண்டும். இதில் இணையுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டால் அது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்-என்றார்.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்துப் புதியதொரு கட்சியை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்திருந்தமையும், அதில் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) இணைந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-5)

## 2 நாள்களுக்கு

வதோடு, இரத்தப் பரிசோதனை செய்யுங்கள்.

இவ்வாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மாரி காலம் ஆரம்பித்ததையடுத்துக் காய்ச்சல் தொற்றும் அதிகரித்துள்ளது என்று எச்சரித்துள்ள தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர், அதனால் இதுவரை 4 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்றும் கூறியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

உயிரிழந்தவர்களில் டெங்குக் காய்ச்சலால்தான் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். காய்ச்சல் என்று வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு இரத்தப் பரிசோதனை மேற்கொண்டபோது டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியமை உறுதிப்படுத்தப்பட்டது. டெங்கு அல்லாத காய்ச்சலாலும் உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது. அதற்கான காரணம் பற்றி ஆராயப்படுகின்றது.

இனிமேல் இத்தகைய இழப்புக்களைத் தவிர்க்கவேண்டும். அதற்கு பொதுமக்கள் டெங்கு உள்ளிட்ட தொற்றுகளிலிருந்து அவதானமாக இருக்கவேண்டும். அதற்காகப் பொதுமக்கள் உங்கள் பகுதிச் சுற்றாடலையும் பிற பகுதிகளையும் சுத்தமாக வைத்திருங்கள். அந்த இடங்கள் சுத்தமாக உள்ளன என்பதை உறுதிப்படுத்துங்கள்.

வீணான உயிரிழப்புக்களைத் தவிர்க்கவேண்டுமாயின் அனைத்துப் பொதுமக்களும் இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

டெங்குத் தொற்று வழமையை விட மழைகாலமானதற்போதைய காலத்தில் அதிகளவில் தொற்றக் கூடிய நிலையே காணப்படுகிறது. இந்த நிலை வழமையான எதிர்பார்ப்புத் தான்.

ஆனால் கவனவீனமாகப் பொது மக்கள் இருந்துவிட்டால் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலை வரும்.

யாழ்.குடாநாட்டில் நாவாந்துறை, குருநகர் உள்ளிட்ட பகுதிகளில் [illegible] [illegible] நடவடிக்கைகள், விழிப்பூட்டல்கள் செய்ததோடு நீதிமன்றில் 60 பேருக்கு வழக்குத் தொடுத்த நிலையிலும் டெங்குத் தொற்று ஓரளவுதான் குறைந்துள்ளது.

ஆனால் யாழ்.மாவட்ட ரீதியில் டெங்குத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை சற்றேனும் குறையவில்லை. காரணம் இதுவரை சாதாரண நிலையிலிருந்த இடங்களில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளமையே. எனவே குடாநாடு ரீதியாக டெங்குத் தொற்று இன்னும் தீவிரமான நிலையிலேயே காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும் - என்று கூறியுள்ளனர்.

இதுதவிர, கிளிநொச்சியிலும் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்ததோடு பூநகரியிலும் ஒருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## புலம்பெயர்ந்த

புலிகளின் தேவையை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை பற்றி சிந்தித்து வருகின்றது. வடக்கில் இன்று என்ன நடக்கின்றது, கிழக்கில் என்ன நடக்கின்றது. சர்வதேச மட்டத்தில் இலங்கை தொடர்பில் எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்ற அனைத்தையும் அரசு மூடி மறைத்து மக்களை ஏமாற்றுகின்றது. ஆனால் இரகசியமாகப் புலிகளின் கரங்களை மீண்டும் பலப்படுத்தும் நடவடிக்கையை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதுடன் வடக்கில் பாதுகாப்புப் பகுதிகளை நீக்கி இராணுவத்தை வடக்கில் இருந்து வெளியேற்றுகின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி அதன் மூலம் மீண்டும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். நாட்டுக்கு எதிரான இந்தச் செயற்பாடுகளைக் கண்டிக்கவோ நாடாளுமன்றத்தில் எதிர்த்துப் பேசவோ பலமான எதிர்க்கட்சி கூட இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது இராணுவம் மீதான சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விமர்சித்தனர். ஆனால் இன்று நாட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எவையும் இல்லை. மாறாகப் புலிகளை விடுதலை செய்தும் புலம்பெயர் அமைப்புகளை இலங்கையில் சுதந்திரமாக செயற்பட அனுமதித்தும் சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தியுமுள்ளனர். ஆகவே இப்போது சர்வதேசக் குற்றச்சாட்டுகள் எவையும் முன்வைக்கப்படாது.

எனவே இன்று நாட்டைச் சர்வதேசப்பொறிமுறைக்குள் கொண்டு சென்று எம் மீதான பொய்யான குற்றச்சாட்டுகளை உண்மையென நிரூபிக்கும் நடவைக்கை முன்னெடுக்கப்படுகின்றது. ஆகவே இந்த அரசை எதிர்த்து மக்களை இணைத்துக் கொண்டு போராட வேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது. வெகு விரைவில் மீண்டும் நல்லாட்சிக்கான மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும்-என்றார். (த-5)

## ரயில்

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை வவுனியா செட்டிகுளம், நேரியகுளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நேரியகுளத்தைச் சேர்ந்த துரைச்சாமி (வயது-47) என்பவரே இவ்வாறு சாவடைந்துள்ளார்.

நேரியகுளம் பகுதியில் உள்ள ரயில்கடவையில் உறங்கிக்கொண்டிருந்தபோதே அவர் ரயிலில் நசியுண்டதாகவும், ரயில் பாதைக்கு அருகில் படுத்திருந்த இன்னொரு நபர் உயிர் பிழைத்துள்ளதாகவும் தெரிவித்த வவுனியாப் பொலிஸார், இது குறித்து விசாரணைகளையும் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தனர். நசியுண்ட குடும்பஸ்தரின் சடலம் மருத்துவப் பரிசோதனைக்காக வவுனியா வைத்திய சாலை யில் வைக்கப்பட்டுப் பின்னர் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-21)

## அரசியல்

கிழமை இடம்பெற்ற ஊடகவியலார் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சி அங்கத்தவர்கள் கடந்த காலத்தில் அனுபவித்த துன்பங்களைக் கேட்டறிவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக 2016ஆம் ஆண்டு நாம் நடவடிக்கை எடுப்போம்.

மேலும், கடந்த 20 ஆண்டுகளில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்ட 35 ஆயிரம் பேரளவில் எமது தலைமையகத்துக்கு முறைப்பாடு வழங்கியுள்ளனர். இதில் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். இந்த முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்களுள் பரிந்துரை செய்யப்பட்ட முதலாவதுதரப்பினருக்கு நிவாரணம் வழங்க அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அரச நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேவேளை, எஞ்சியுள்ள அனைவருக்கும் அடுத்து வருகின்ற அமைச்சரவைக் கூட்டத்தொடர்களில் இரண்டு அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவுள்ளார். மூன்று சுற்றுகளில் இந்தப் பத்திரங்களைச் சமர்ப்பித்து அரசியல் பழி வாங்கலுக்கு உட்பட்ட தரப்பினருக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (த-சி)

## வடக்கு

என்று விமர் சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

குறித்த பேரவையில் இணைவது தொடர்பில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கடந்த சனிக்கிழமைக்கு முன்னதாகவே தனது ஏனைய 4 அமைச்சர்களுடனும் கலந்துரையாடல் நடத்தியதாக அறிய முடிகின்றது. இந்தக் கலந்துரையாடலின்போது 4 அமைச்சர்களுமே, முதலமைச்சர் குறித்த பேரவைக் கலந்துரையாடலில் பங்கெடுக்கக்கூடாது என்று ஒருமித்துக் குறிப்பிட்டுள்ளனர்.

அதனையும் மீறி முதலமைச்சர், தமிழ் மக்கள் பேரவையின் கலந்துரையாடலில் பங்கெடுத்தமையும், அதன் இணைத் தலைமையை ஏற்றமையும் அமைச்சர்களிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்தத்தகவலை, வடக்கு மாகாண அமைச்சர் ஒருவர் 'உதயனுக்கு' உறுதிப்படுத்தினார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பணிகளுக்காக ஐந்து பேர் கொண்ட குழு

*நியமிக்கிறது ஐ.தே.க.*

கொழும்பு, டிசெ.23

உள்ளூராட்சித் தேர்தலை இலக்காகக்கொண்டு கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஜனவரி மாதம் முதல் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கவுள்ளது. அத்துடன், தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கட்சித் தலைமையகத்தில் ஐவரடங்கிய குழுவொன்றும் நிறுவப்படவுள்ளதுஎன்றுகட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஸிம் தெரிவித்தார்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்போது எமது செயற்குழுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அங்கத்தவர் இணைத்தல், இளைஞர், மகளிர் சங்கங்களை வலுப்படுத்தல், மாவட்ட குழுக்களுக்கிடையில் கூட்டங்களை நடத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளோம். தற்போது விண்ணப்பங்கள் கட்சித் தலைமையகத்துக்குக் கிடைத்துள்ளன. இதற்காக 5 தெரிவுக்குழுக்களை கட்சித் தலைமையகத்தில் நிறுவவுள்ளோம். இந்தக் குழுவானது அடுத்த மாதம் முதல் நேர்முகப் பரீட்சைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படவுள்ளது. இதனூடாக வேட்பாளர்களைத் தெரிவு செய்ய எதிர்பார்க்கின்றோம் –என்றார். (த–சி)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 . 07 . 1948

உதிர்வு 23 . 12 . 2011

**அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)**

**(உரிமையாளர் - விநாயகர் ரேணிங் வேக்ஸ்)**

பாசத்தை உங்கள் வளர்ப்பிலே கண்டோம்
தியாகத்தை உங்கள் வாழ்வினிலே கண்டோம்
உதிரத்தை உழைப்பினிலே கண்டோம்
உழைப்பில் எம் வாழ்வையே வாழ்ந்தோம்

கண்ணை இமை காப்பது போல்
பாலகர் எம்மை அறிவோடு கூடிய நற்பழக்கங்களுடன்
புன்சிரிப்போடு வளர்த்தீரே! அப்பா !- உம்
புன்சிரிப்பைக் காண ஏங்குகின்றோம்

இறைவனுடன் நீங்கள் இன்புற்று வாழ - எம்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்.....

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம் , உடுவில். (85079)(I.15)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நினைவேந்தி நிற்கும் முதலாண்டு



அமரர்
**குலசேகரம் இளையதம்பி**

மண்ணில் 22.07.1947

விண்ணில் 02.01.2015

எமது குடும்பத்தின் தெய்வம் அமரர் குலசேகரம் இளையதம்பி அவர்களின் முதலாண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதியும் இன்று (23.12.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

*இந்நினைவு நாளில் உள்ளம் உருகும்.*

**மனைவி** - வியாழம்மா

**பிள்ளைகள் :-**
பிரபாகரன் (லண்டன்), சர்வானந்ததேவி (ஜேர்மன்), புஸ்பராணி (முள்ளிவாய்க்கால்), அருணா (லண்டன்), கிருபாகரன் (லண்டன்)

**மருமக்கள்:-**
ருசிகலா (லண்டன்), பரமானந்தசிவம்(ஜேர்மன்), சிவாகரன் (முள்ளிவாய்க்கால்), நிறோஜினி (லண்டன்), நிஷாந்தினி (லண்டன்)

**பேரப்பிள்ளைகள்:-**
நிஸ்மிதன் (லண்டன்), நிதிலன்,நிலைக்சன் (ஜேர்மன்), அபிசானா, அபிவர்சி (முள்ளிவாய்க்கால்),கிருட்ஜிகன், பிரஷ்கா (லண்டன்)

**முள்ளிவாய்க்கால் மேற்கு,**
**முள்ளிவாய்க்கால்.** (c 15697) (11.15,17,18)

**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
## சாவித்திரிதேவி கந்தப்பு

**தோற்றம்** 1938.06.03

**மறைவு** 2015.12.21



நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
**எஸ்.வி.எம் நிறுவனத்தின்**
**வடபிராந்திய முகாமையாளர்**
**கந்தப்பு ராஜசேகரம் அவர்களின்**
அன்புத்தாயார் திருமதி சாவித்திரிதேவி
கந்தப்பு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**S.V முருகேசு - உரிமையாளரும்**
**ஊழியர்களும்.**

154, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
122, டாம் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 . 06 . 1946



உதிர்வு 12 . 01 . 2006

## அமரர். சின்னத்தம்பி நடராசா
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

ஆண்டுகள் பத்து ஓடிவிட்டன
ஆனாலும் உங்கள் நினைவு
எங்கள் உயிர் உள்ளவரை
அழியாது.....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கச்சாய் வீதி, கொடிகாமம். குடும்பத்தினர்.

# துயர் பகிர்கின்றோம்



பிறப்பு 18.06.1939 இறப்பு 04.12.2015

எமது பாடசாலை ஆசிரியரான
திரு.கோ.குணசீலன் அவர்களின்
அன்புத் தந்தை

## இராசு கோவிந்தசாமி

அவர்கள் 04.12.2015 சிவபதமடைந்தார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் ஊழியர் நலன்புரிகழகம் ,
யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

(68154) (11,15,18)

# துயர் பகிர்கின்றோம்



எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர்
திரு.பாலகிருஷ்ணன் வசந்தன் அவர்களின்
பாசமிகு தாயார்

## திருமதி புஸ்பராணி பாலகிருஷ்ணன்

அவர்கள் 22.12.2015 அன்று அமரத்துவம் எய்தியமையை இட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதோடு அன்னாரது ஆத்மா அம்பாளின் பாதத்தில் நித்திய சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்
பர்வதவர்த்தனி அம்மன் கோயில்,உரும்பிராய்.

(சி/15892) (11,15,18)


## வடக்கு பட்ஜெட்

ஆளுநரின் அங்கீகாரத்துக்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்குரிய செலவீனத்துக்காக 23 ஆயிரத்து 269 மில்லியன் 8 லட்சத்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதி ஒதுக்கீட்டுக்கான வரவு-செலவுத் திட்ட விவாதம், கடந்த வாரம் 15 ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதி வரையில் நடைபெற்று, ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தினை, ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக, நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேரவைச் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆளுநரின் அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னரே, வரவு-செலவுத் திட்டம் நடைமுறைக்கு வரும்.

இதேவேளை, 2015 ஆம் ஆண்டின் குறைநிரப்பு வரவு-செலவுத் திட்ட நியதிச் சட்டமும் ஆளுநரின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## வெடி விபத்தில்

யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் வட்டக்கச்சியைச் சேர்ந்த கே.சந்திரகுமார் (வயது-26) என்ற இளைஞனே ஒரு கை சிதைவடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-


கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் வசிக்கும் குறித்த இளைஞர் நேற்று மாலை வயலுக்குச் சென்றுள்ளார். வயலின் நடை பாதையில் இருந்த மர்மப் பொருள் ஒன்றை எடுத்து எறிய முற்பட்டவேளை அது வெடித்ததால் ஒரு கை சிதைவடைந்த நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வெடிபொருள் பன்றிக்காக வைக்கப்பட்ட வெங்காய வெடியாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணையை வட்டக்கச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-101)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னுச்சாமி கனகலிங்கம்
(இளைப்பாறிய பதிவு செய்யப்பட்ட வைத்தியர்)



இல.56 அரசவீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி கனகலிங்கம் 21.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசையா (பண்டிதர்), பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், இந்திராதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை - யா/நல்லூர் ஞானோதய வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, இராசதுரை - மாணிக்கம், நடராஜா-சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜ்மோகன் (ஆஸ்திரேலியா), ஜெயமோகன் (கனடா), Dr.சந்திரமோகன் (போதனா வைத்திய சாலை-கண்டி), ஜெயந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேகலா (ஆஸ்திரேலியா), வத்சலா (கனடா), Dr.சஞ்ஜீவினி (போதனா வைத்தியசாலை - பெரதேனியா), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மீரா, சிறீராம், சந்தியா, அர்ஜுன், சஜீவன், கவிஷனா, விஜய், ஹர்ணி, அஸ்விந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

56, அரசவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(68166) (11,15,17,18)

தகவல்:
Dr.க.சந்திரமோகன்

## திருமதி ராஜநாயகி சங்கபாணி




அச்சுவேலி தெற்கு, ஆயத்தவளவைப் பிறப்பிடமாகவும் கல்கிசையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ராஜ நாயகி சங்கபாணி அவர்கள் நேற்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அச்சுவேலி தெற்கு, ஆயத்தவளவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, மனோன்மணி தம்பதியரின் அன்பு இரண்டாவது புதல்வியும், சரசாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம்- இராசம்மா தம்பதியரின் மருமகளும், சங்கபாணியின் அன்பு மனைவியும், கஜாஜினி (ஆஸ்திரேலியா), கஜேந்திரன் (கொழும்பு), கோகுலன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கண்ணனின் (ஆஸ்திரேலியா) ஆசை மாமியும், சாந்த நாயகி, விமலநாயகி, வாமதேவன், றஜிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமானந்தம், பிரேம்குமார், சாந்தி, நிர்மலன், சாந்தநாயகி (சுசி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.12.2015) புதன்கிழமை காலை 9.00 மணியில் இருந்து மாலை 5.00 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலை யில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (24.12.2015) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கணவர், பிள்ளைகள்.
R.வாமதேவன் 077 3023492
R.நிர்மலன் 071 13023396

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14.02.1953
மறைவு 02.01.2015

## அமரர் சின்னத்துரை புலேந்திரன்

திதி: (23.12.2015)

எமது கூட்டின் ராஜாதி பறவையை இழந்து ஆண்டு ஒன்று ஆகின்றது
திரும்பமுடியாத திசையை நோக்கி பறந்து விட்டது - இப் பறவை
தன் வாழ்நாளை வரலாறாக மாற்றியவர்
வெறும் நோயினால் சரிந்தாரே - எம் வாழ்வில் நாம் எடுத்து விரிக்கும்
பக்கம் எல்லாம் உள்ளது இவரது சுவடுகள்
எமது நாற்றுமேடையின் நம்பிக்கை கொடி
இப்படி வேரறுந்து போகுமென எவர் நினைத்தார் - செய்த
செயல்களின் சுவடுகள் அனைத்தும் எம்மோடு இருக்க இவர் மட்டும்
இனி இல்லை என்றானது - ஆலமரம் சரிய
அதை அண்ணாந்து பார்ப்பது போல்
எம் கண்முன்னே சரிந்து விழ கைகட்டி நின்றோமே - எத்தனை
எத்தனை வேண்டுதல்கள் செய்தோம்
இவர் இங்கு வேண்டுமென நினைத்து
எதுவும் பலிக்காமல் ஏமாந்து போனோமே
கைகளில் தவழ்ந்திருந்த காற்றை நழுவ விட்டு மூச்சடைத்து நிற்கின்றோமே
தாயாய் வாழ்ந்த இவர் வெறும் நோயால் கரைந்தாரே
நேரில் இருந்த இவர் இனி எம் விருட்சத்தின் வேரில் இருப்பார்.
ஆண்டு ஒன்று என்ன ஆண்டு நூறு சென்றாலும் முடியாது
ஐயோ எம்மால் முடியாது..... ஐயா உங்களை மறக்க
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

விக்கினேஸ்வரா வீதி,
[illegible]
கரவெட்டி.

குடும்பத்தினர்.


## அரசமைப்புப்

யேற்று ஒரு வருடம் பூர்த்தியடையவுள்ள நிலையில், அது தொடர்பிலான நிகழ்வுகள் குறித்து அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அரசதகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போதுகருத்து வெளியிடுகையிலேயே ஊடகத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## அந்தோனிப்பிள்ளை ரவீந்திரன்

தோற்றம் 26.12.1954 — மறைவு 23.11.2015


கடந்த 23.11.2015 இறைபதமடைந்த எமது குடும்ப தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவு நாளையொட்டி இன்று (23.12.2015) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

20/2, மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

அன்பு மகள் R. ஆரதை,
சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னு மார்க்கண்டு



கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு மார்க்கண்டு 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், கந்தகுமார், சாந்தகுமார், கௌசலா, செல்வகுமார், பிரதீபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2015) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிக்கோயிலடி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்வரட்ணம் - துரைராஜசிங்கம்

(Retired Railway Head Guard)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலில் வசித்தவருமாகிய செல்வரட்ணம் துரைராஜசிங்கம் நேற்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் - அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான மில்லர் பொன்னையா - அருளம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் (ஆசிரியை) அன்புக் கணவரும், கருணாதேவி (பரியோவான் ஆலய பாலர் பாடசாலை), வண T.H வசந்தகுமார் (தென் இந்திய திருச்சபை-கொக்குவில்), தயாளகுமார் (முன்னாள் ஊழியர்- லங்கா சிமெந்து தொழிற்சாலை), சுரேந்திரகுமார் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் - உரும்பிராய்), அனுஷியாதேவி (ஆசிரியை - உடுவில் மகளிர் கல்லூரி), வண T.O திருக் குமார்(அங்கிலிக்கன் திருச்சபை பலிஅந்திரேயா ஆலயம் - மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோராஜன், ரூபகுமாரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), தயாபரதேவி (ஆசிரியை), சிவந்தி, கிருஷ்ணகுமார் (அஞ்சலகம்- நெடுந்தீவு), யசிந்தா (ஆசிரியை - மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமனும், கிறிஸ்ரீன் - றொஷான் (ஆசிரியை- பரியோவான் கல்லூரி), வஜிரா (ஆசிரியை), ஜெசிக்கா (ஆசிரியை- உடுவில் மகளிர் கல்லூரி), றேக்கா(கணக்காய்வுப் பயிலுநர், செல்வேந்திரா & Co), சஜீவன், டொறின், ஏஞ்சலின், ஆஷிக்கா, ஹேமன், சோபன், பிரசாந், ஆசேர், அன்றூ ஆகியோரின் பாசமிகு பேரனும், றிஷோனின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான தங்கராணி, செல்வராணி மற்றும் புஷ்பராணி, ஜெயராணி, அரியரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான R.C .டேவிட், துரைஐயா, தம்பிராசா, புஸ்பரட்ணம் R.H பரமராசா, புஷ்பரட்ணம், தவரட்ணம், குணரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கலட்டிலேன் கோண்டாவிலில் இன்று (23.12.2015) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டிலேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
021 321 1162

(68170)
(11,15,17,18)

தகவல்:
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்



## இராசையா கார்த்திகேசு

இல. 13D மல்லாவி யோகபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மு/மல்லாவி மத்திய கல்லூரி ஸ்தாபகருமான இராசையா கார்த்திகேசு கடந்த (21.12. 2015) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-அபிராமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-தெய்வானைப்பிள்ளை தம் பதியரின் அன்பு மருமகனும், அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், திருநாவுக்கரசு, பஞ்சாட்சரம், நமச்சிவாயகம், பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, தமோதரம்பிள்ளை, சின்னம்மா, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், சுந்தரலிங்கம், ஆனந்தராசா, ஜெயச்சந்திரா, சுந்தராம்பாள், அரியமலர், நகுலேஸ்வரன், சத்தியபாமா, சிறிவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலேஸ்வரி, ஜெயதேவி, அருந்ததி, பாலச்சந்திரன், கந்தசாமி, வேணி, சிவசுப்பிரமணியம், மதியழகன் ஆகியோரின் மாமனும், விஜிதா, தாட்சாயினி, கிரிசானந், ஜெனார்த்தனன், யாழினி, றஜனி, ஜெனனி, ஜசிந்தினி, விதுரன், விதுகரன், கர்ணியா, விகிர்தன், பார்த்தீபன், அரவிந் அரிசோபா, அனுசாந்த், கார்த்திகா, றம்மியா, சோபனா, கார்த்திகன், பவித்திரன், மேகலாகரன், பிரகல்யா, அன்றூயூட் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2015) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈமைக்கிரியைக்காக மல்லாவி அணிச்சியங்குளம் பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.13D, மல்லாவி,
யோகபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி புஸ்பராணி பாலகிருஷ்ணன்



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி பாலகிருஷ்ணன் நேற்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மானிப்பாய் இந்துக்கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆய்வு கூட உதவியாளர் சதாசிவம் பாலகிருஷ்ணன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை -இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ் சென்றவர்களான சதாசிவம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மினி (சுவிஸ்), கஜமுகன் (கனடா), வசந்தன் (வசந்தன் கூல்பார்), கோகுலன் (லண்டன்), தாரணி ஆகியோரின் அன்புத் தாயும், திரவியநாயகம் (இந்திரன், மருமகன், சுவிஸ்), செல்வமலர் (கனடா), தாரணி, அகல்யா (லண்டன்), ஜெயந்திரன் (மருமகன், அருவலக உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), ஆகியோரின் அன்பு மாமியும், சிவஞானமணி, சந்திரபவானி, யோகேஸ்வரி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்னம்பலம் (சாவகச்சேரி), சிவராஜசிங்கம், சத்தியநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரவீன், வருண், தாரகன், வத்சலாயன், வானுசன், அனுஜன், கபிசன், தனுஷன், கிஷாந், கிஷோபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2015) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திரவியநாயகம் (இந்திரன், சுவிஸ்) 41799179187

[illegible]
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

வசந்தன் (வசந்தன் கூல்பார்) 0771956164
[illegible] (லண்டன்) 077 55579544, 077 6451201
ஜெயந்திரன் 077 6598952
யோகேஸ்வரி (கனடா) 4164724755

கஜமுகன் (கஜன், கனடா) 077 6775626, 5142902252

தகவல்:
குடும்பத்தினர்.

## நீதிமன்றத்திலிருந்து தப்பி வாவியில் குதித்தார் கைதி

மட்டக்களப்பு, டிசெ.23

மட்டக்களப்புநீதிமன்றத்திலிருந்துதப்பியோடிவாவியில் குதித்த கைதியை மீண்டும் பிடித்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுச் செவ்வாய்க் கிழமை காலை மட்டக் களப்பு நீதிமன்றத்துக்கு பொலிஸாரினால் கொண்டுவரப்பட்ட கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர், மட்டக்களப்பு நீதிமன்றத்தை விட்டுப் பாய்ந்து தப்பியோடி அருகிலுள்ள மட்டக்களப்பு கோட்டமுனை வாவியில் குதித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டு, தோணியில் வாவியில் சென்று குறித்த சந்தேக நபரைப் பிடித்து மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேக நபர் வவுணதீவுபொலிஸ்பிரிவைச் சேர்ந்தவர் எனவும், அவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்துள்ள தாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (து)

## விபத்தில் ஒருவர் படுகாயம்

அச்சுவேலி, டிசெ.23

ஆவரங்கால் சந்தியில் வடியும் - மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் நடந்த விபத்தில் ஆவரங்கால் மத்தியைச் சேர்ந்த சந்நிதியான் ஆச்சிரமத் தொண்டரான குமாரசுவாமி அருணகிரிநா தன் (வயது-60)என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வடமராட்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த வடியும் அச்சுவேலியிலிருந்து ஆவரங்காலில் உள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வருமே நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

(த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

இலங்கை அதிபர் சேவை
தரம் - I இற்கு பதவி உயர்வு
பெற்ற எம் அதிபர்

**திரு. யோசப் எட்வேட் பங்கிராஸ்**
(SLPS-I)

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவரது சேவை எமது பாடசாலையில் மென்மேலும் தொடர இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம்.
மாதகல்.


# சர்வதேச ஆட்டங்களில் இருந்து விடைபெறுகிறார் நியூசிலாந்தின் தலைவரான பிரெண்டன் மக்கலம்



சர்வதேச ஆட்டங்களில் இருந்து அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார் நியூசிலாந்தின் தலைவரும் அதிரடி வீரருமான மக்கலம்.

நியூசிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் பெப்ரவரி மாதம் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது. தற்பொழுது 99 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள மக்கலம், இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் தனது 100 ஆவது ஆட்டத்தை நிறைவு செய்வார். இந்தத் தொடரின் இரண்டாவது ஆட்டம் பெப்ரவரி 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்துடனேயே மக்கலம் தனது ஓய்வை அறிவித்துள்ளார். இதன் மூலம் இந்தியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அவர் விளையாட முடியாத நிலைமை தோன்றியுள்ளது. அவருக்குப் பதிலாக வில்லியம்சன் நியூசிலாந்து அணியின் தலைவராக செயற்படுவார். இருப்பினும் ரி-20 உலகக் கிண்ணம் வரை மக்கலம் விளையாட வேண்டுமென்று நியூசிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வலியுறுத்தி வருகிறது.

இதுவரை 99 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள மக்கலம் 6 ஆயிரத்து 273 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஒரு இன்னிங்ஸில் அதிகபட்சமாக 302 ஓட்டங்களை எடுத்துள்ளார். 254 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள அவர் 5 ஆயிரத்து 909 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகபட்ச ஓட்டங்கள் 166 ஆகும்.

தனது ஓய்வு தொடர்பாக மக்கலம் தெரிவிக்கையில்; "நியூசிலாந்து கிரிக்கெட் அணியை எனது குடும்பம் போன்று கருதுகிறேன். இங்கிருக்கும் ஒவ்வொருவரும் எனது சகோதரர்கள். வேறு எந்த அணியிலும் இல்லாத அளவுக்கு புரிந்துணர்வும் ஒற்றுமையும் எமது ஓய்வறையில் உள்ளது. இதை நினைத்து நான் பெருமையடைகிறேன். ஒவ்வொரு வீரனும் தனது ஓய்வை எதிர்நோக்கி காத்திருக்கிறான். நானும் அவ்வாறே எனது ஓய்வு காலம் நெருக்கிவிட்டதை உணர்கிறேன். ஆஸிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் சர்வதேச ஆட்டங்களுக்கு விடை கொடுக்கின்றேன்" என்றார்.

(ம)


இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 22.12.2015 | வெற்றி வாரம் 1919 | வர்ணம் நீலம்
சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
16 46 54 57
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,000,000/-

நியத்த ஜய
வெற்றி வாரம் 421
திகதி 22-12-2015
வர்ணம் மஞ்சள்
14 20 35 44 M
எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 18,864,460/-


## 33ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 21 |
| 07 | 11 |
| 1931 | 2015 |

கடந்த 21.11.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த

**அமரர் இராமு மாணிக்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (23.12.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரிலும், நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரேசன் வீதி,
சாவகச்சேரி.

இ. சிவலிங்கம் (சோமு)
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் பொன்னாலையில் பிறந்து, தற்போது தேவாலய வீதி சங்கானையில் வசித்துவரும் இராசரத்தினம் கன்னம்மா தம்பதியரின் புதல்வி

**செல்வி நிரோஷா இராசரத்தினம்**

14.12.2015 அன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரை வாழ்த்துகின்றோம்

சட்டம் நிலைக்கட்டும் உன்னாலே,
சமரசம் ஓங்கட்டும் தன்னாலே,
நேராக நடைபோடு,
நலமோடு நீ வாழ

Congratulations

வாழ்த்தும்...
தேவாலய வீதி,
சங்கானை.

திரு.திருமதி கன்னம்மா
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் மகேஸ்வரன்



தையிட்டி தெற்கு, குருந்து வீதியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மகேஸ்வரன் நேற்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், ரஞ்சிதவதனாவின் (வவுனியா) அன்புக் கணவரும், சங்கீதா (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி உயர்தர மாணவி-2017) ராகுல் (மாணவன் வவு/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணசுந்தரி, தவராசா, சாந்தி, தவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2015) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில் (68182) (10.17)

தகவல்: நேசன் (அண்ணா)
0776173334
வதனா (மனைவி)

## மரண அறிவித்தல்

### நடராஜா ஞானமணி



(ஓய்வுபெற்ற அதிபர் மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.382/3, நாவலர் ஒழுங்கை நாவலர் வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ஞானமணி நேற்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா-செங்கமலம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துமணி, ஞானலிங்கம் மற்றும் செல்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிறேமதாசா, நிறைமதி (ஆசிரியர்) ஆகியோரின் சிறிய தாயும், பகீரதன், பரணீகரன், யசோதரன், சர்மிளா, காலஞ்சென்ற கௌசலா மற்றும் கெங்ககுமார், தேன்மொழி, அருள்மொழி, தெய்வகுமார் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2015) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயண் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

382/3, நாவலர் ஒழுங்கை,
நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(68184)(10.17)

தகவல் :
ந.செல்வலிங்கம் 0777609933
ஞா.பரணீகரன் 0770562621


Mangala
மங்களாவின் வருட இறுதி Mega Sale
வருட இறுதியை முன்னிட்டு அனைத்து மர, உருக்கு தளபாடங்கள், மின் சாதனப் பொருள்கள்,
மூங்கில் தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், மெத்தை வகைகள், சோபா செற்றிகள்,
வெளிநாட்டு தளபாடங்கள் அனைத்துக்கும் நாம் தரும் எங்கும் பெறமுடியாத அமோக வருட இறுதி கழிவு
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
தெரிவுக்கு முந்துங்கள்!!
Mangala Show room
536 K.K.S. Road Jaffna.
021-222 8367, 0777286069


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி, செந்தமிழ் அணிகள் இறுதிக்கு; சென்.அன்ரனிஸ், பிலிப்நேரிஸ் வீழ்ந்தன





கரணவாய், டிசெ. 23
வடமராட்சி கிழக்கு கால்பந்தாட்டத்தொடரில்உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் மற்றும் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் என்பன இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

**சென்.அன்ரனிஸ் - பாரதி**
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற வடமராட்சி கிழக்கு அணிகளுக்கு இடையிலான 5 வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று உடுத்துறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன.
முதலில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தாளையடி சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது.
ஆரம்பத்தில் இரு அணிகளதும் ஆட்டத்தில் போராட்டத்தன்மை பிரதிபலித்தது. அதற்கேற்றாப் போல், முதல் பத்து நிமிடங்களை எட்டுவதற்குள் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவு செய்திருந்தன. ஆனால் நேரம் செல்லச் செல்ல அன்ர னிஸால் ஈடுகொடுக்க முடியவில்லை. பாரதியின் கோல் கணக்கு உயர்ந்து கொண்டே சென்றது. முடிவில் பாரதி அணி 8:3 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.
தாளையடி சென்.அன்ரனிஸ் அணியின் சார்பாக றெக்சன் மூன்று கோல்களைப் பதிவு செய்தார். உடுத்துறை பாரதி அணியின் சார்பாக விஜிதரன், சுஜீபன், ஜெயதீபன், விஜேந்திரன் ஆகியோர் தலா 2 கோல்களைப் பதிவுசெய்தனர்.

**பிலிப்நேரிஸ் - செந்தமிழ்**
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழகமும் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பம் முதல் முடிவு வரை ஏக ஆதிக்கம் செலுத்திய செந்தமிழ் வி.கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது. செந்தமிழ் சார்பாக சுஜித் 2 கோல்களையும் மயூரன், மதிராஜ் இருவரும் தலா ஒரு கோலையும் பதிவுசெய்தனர். (ம-108)

## நடுவர்களுக்கான பரீட்சை

வலி வடக்கு, டிசெ. 23
இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவிருக்கும் வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான (ஏ, பி, சி பிரிவினருக்கான) பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை யாழ். புனித யாகப்பர் பெண்கள் பாடசாலையில் நடைபெறும். யாழ். மாவட்ட பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவி திருமதி ஏ.எப்.ஜே. றூபசிங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-86)

## சதுரங்கத் தொடர்

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ். சதுரங்க சம்மேளனம் நடத்தும் இரத்தினம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான மிதவேக சதுரங்கத் தொடர், எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நல்லூர் பவன் நடைபெறவுள்ளது.
26ஆம் திகதி 8 வயதுப் பிரிவினருக்கும், 27ஆம் திகதி 10 வயதுப் பிரிவினருக்கும், 28ஆம் திகதி 12 வயதுப் பிரிவினருக்கும், 29ஆம் திகதி 14 வயதுப் பிரிவினருக்கும் 30 ஆம் திகதி 16 வயதுப் பிரிவினருக்கும், 31ஆம் திகதி 18 வயதுப் பிரிவினருக்குமாக நடத்தப்படும் இந்தத் தொடர் தினமும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
(ம-422)



ஆசிரியர்களுக்கான தேசியமட்ட மெய்வன்மைத் தொடர் அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்றது. இதில் 41 தொடக்கம் 46 வயது வரையான பிரிவில் வடமாகாணம் சார்பாக கலந்துகொண்ட கிளிநொச்சி கல்வி வலய சேவைக்கால உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ப.பார்த்தீபன் உயரம் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும், முப்பாய்ச்சலில் வெள்ளிப் பதக்கத்தையும், நீளம் பாய்தலில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (ம-422)



ஆசிரியர்களுக்கான தேசியமட்ட மெய்வன்மைத் தொடர் அண்மையில் நடைபெற்றது. 46 வயது தொடக்கம் 50வயது வரையான பிரிவினருக்கான போட்டியில் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் எஸ்.திருமாறன் 100மீற்றர் 200 மீற்றர் ஓட்டங்களில் தங்கப் பதக்கங்களையும் முப்பாய்ச்சலில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினார்.
(ம-422)

## மண்ணின் மைந்தர்களுக்கான கௌரவிப்பை முன்னெடுத்தது சென்.மேரிஸ் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் கிண்ணம் வென்ற நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாவாந்துறை சென்.மேரிஸ் சன சமூக நிலையத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறை சென்.மேரிஸ் சன சமூக நிலைய உறுப்பினர் ஜெனந்தன் தலைமையில் நடத்தப்பட்டது.
நாவாந்துறை சென்.மேரிஸ் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் கலையரங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் அதிபர் எவ்.எஸ். அன்ரன், சட்டத்தரணி றெமிடியஸ், யாழ். கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் இளம்பிறையன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(ம-23)

## பூப்பந்தாட்ட அணித் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ். மாவட்ட பாடசாலைகள், கழகங்களில் இருந்து மூன்று வீரவீராங்கனைகளை உள்ளடக்கியதாக யாழ். மாவட்ட பூப்பந்தாட்ட அணி தெரிவு செய்யப்படவுள்ளது.
எனவே மேற்படி தெரிவுக்காக யாழ். மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்துள்ள கழகங்கள் மற்றும் பாடசாலைகள் தமது வீரவீராங்கனைகளின் பெயர் விவரங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சிக்
கல்வி வலயப் பிரதிக்
கல்விப் பணிப்பாளர்

உயர்திரு வேலுப்பிள்ளை
பாலசுப்பிரமணியம்
அவர்களின்

பணி நிறைவு
நயப்பு விழா



இடம் : ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபம்
காலம் : 24.12.2015 வியாழன் காலை 9.30 மணி
தலைமை : திரு.சி.திரிகரன் (முதல்வர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி. விழாக்குழுத்தலைவர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஆவரங்கால்,
அச்சுவேலி.

பணிநிறைவு நயப்பு விழா
ஏற்பாட்டுக் குழுவினர்.

# ரி-20 உலகக்கிண்ண தயார்ப்படுத்தலுக்காக டெஸ்ட் தொடரை பிற்போட்ட பங்களாதேஷ்

VCM INSTITUTE
மனோகராச் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.
A/L 2018
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன்
ஆரம்பம்
30.12.2015 (புதன்)
நண்பகல் 12.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான தயார்ப்படுத்தலுக்காக சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடரை பிற்போட்டுள்ளது பங்களாதேஷ்.

சிம்பாப்வே அணி எதிர்வரும் ஜனவரி மாதம் பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இருந்தது. ஆனால், விரைவில் ரி-20 ஆசியாக் கிண்ணத் தொடரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரும் நடைபெற இருப்பதால் சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடரை பிற்போட்டுள்ளது பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை.

இதுகுறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தனது அறிக்கையில் - எங்களுக்கு இரண்டு முக்கிய தொடர்கள் இருக்கின்றன. ரி-20 ஆசியாக் கிண்ணத் தொடரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடருமே அவை. இதற்குத் தயாராகுவதுதான் எங்களுக்கு முக்கியமானது. ஏராளமான டெஸ்ட் அணி வீரர்கள் ரி-20 அணியில் இல்லை. ஆகவே, இந்த டெஸ்ட் தொடர் எங்களுக்கு கட்டாயம் உதவிகரமாக இருக்காது. மட்டுமல்லாது வீரர்கள் டெஸ்ட் ஆட்டத்தின் பாணியில் இருந்து அடுத்த சில மாதங்கள் விலகியிருக்க வேண்டும். என்று குறிப்பிட்டுள்ளது. (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
ஆசிரியர் தெரிவு
சட்டமாணி நுழைவு
அலுவலக பணியாளர்
பரீட்சைகளுக்கான வகுப்புகள் விரிவுரையாளர்
தவசேகரினால் நடத்தப்படும்.
தொடர்புகளுக்கு:
076688 3394




2016 Chemistry Personal Classes
Basic, Inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey) M.SC (cey) Chemistry கற்பிக்கப்படும்.
தொ.பே: 077 6038913

வேலையாள்கள் தேவை
சாரூ டிஜிற்றல் வீடியோ சென்ரருக்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் வேலை தெரிந்தவர்கள் மட்டும் (வீடியோ எடிற்றிங், போட்டோ சொப்) ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.
தொ.பே: 077 248 7442

வேலையாள்கள் தேவை
திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.
* சிட்டை எழுதுநர் * கணக்காளர்
* பொதி கட்டுவோர் (அனுபவம் தேவை)
தொடர்புகளுக்கு: 077 8730114
021 4927705
குறிப்பு: தகைமைகளுக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.